REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஜூலை 26 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN 92

வருட. 92 இல. 177 | Friday 26, July, 2024 | 24 பக்கங்கள் | 50/-

## அரச ஓய்வூதியதாரர்களுக்கு ரூ. 3,000 விசேட கொடுப்பனவு

### அமைச்சரவையில் அங்கீகாரம்!



அரச சேவையின் ஓய்வூதியதாரர்களுக்கு விசேட மாதாந்த கொடுப்பனவாக 3,000 ரூபாவை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற 08




## தவறியேனும் சஜித்துக்கு அதிகாரம் கிடைத்தால் 2025 பட்ஜெட் தயாராகாது



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு தவறியேனும் நாட்டில் அதிகாரம் கிடைத்துவிட்டால் சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையை திருத்த முயற்சி செய்து, 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை தயாரிக்க அவரால் முடியாதென போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத் துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார். இதன் காரணமாக 2025 இல் அரச ஊழியர்களின் சம்பளம், ஓய்வூதியம் மற்றும் நிவாரணங்களை வழங்க எப்படி பணம் கொடுப்பதென கேள்வி எழுப்பிய அமைச்சர் பந்துல, சஜித்துக்கு அதிகாரம் கிடைத்தால் அவரால் அரசியல் செய்ய முடியுமே தவிர, நாட்டை ஆள அவரால் முடியாதென்றும் கூறினார். 08

## இவ்வார தினகரன் வாரமஞ்சரியுடன் அரச வர்த்தமானி வெளிவரும்

## தேயிலை கைத்தொழில் துறைக்கு புதிய முன்னேற்றங்கள் அவசியம்



ஏற்றுமதி பொருளாதாரத்தை நோக்கி நாட்டை நகர்த்த, இலங்கை தேயிலை கைத்தொழிலை அனைத்து பரிமாணங்களிலும் ஊக்குவித்தல் இன்றியமையாதது எனவும் இதற்கான முறையான திட்டம் அரச மற்றும் தனியார் துறைகளுடன் இணைந்து செயற்படுத்தப்படுமெனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

"சிலோன் டீ" உலகின் முன்னணி வர்த்தக நாமமாகத் திகழ்வதாகத் தெரிவித்த ஜனாதிபதி, புதிய மூலோபாய வேலைத்திட்டத்தின் ஊடாக அதனை மேலும் ஊக்குவிக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

கொழும்பு சினமன் கிரேண்ட் ஹோட்டலில் நேற்று (25) ஆரம்பமான "கொழும்பு சர்வதேச தேயிலை மாநாட்டின்" ஆரம்ப நிகழ்வில் 08

### IMF நிர்வாக கண்காணிப்பின் தொழில்நுட்ப உதவி அறிக்கையில் குறிப்பிட்டுள்ள

# ஊழல் ஒழிப்புச் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்படும்

### ஜனாதிபதி முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம்

சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக கண்காணிப்பு தொழில்நுட்ப உதவி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஊழலுக்கு எதிரான சட்ட, கட்டமைப்பு ரீதியான மற்றும் படிமுறை வரைவுக்கமைய "தேசிய ஊழல் எதிர்ப்பு நிகழ்ச்சி நிரலை" செயற்படுத்துவது குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஊழலுக்கு எதிரான தேசிய நிகழ்ச்சி நிரல், 2023 இல் நிறைவேற்றப்பட்ட ஊழல் தடுப்புச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துதல், அதற்கான செயல்திட்டத்தைத் தயாரித்தல், ஆறு மாதங்களுக்கு ஒருமுறை செயல்திட்டத்தின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல் மற்றும் செயல் திட்டத்திற்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளும் இந்த யோசனைக்குள் உள்ளடங்கியுள்ளது.

2025 - 2029 காலப்பகுதிக்காக தேசிய ஊழல் எதிர்ப்பு திட்டத்தை உருவாக்குதல், கணக்காய்வாளர் நாயகத்தின் சட்ட அதிகாரங்களை மேலும் விரிவுபடுத்துதல், 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் திருத்தம் செய்தல் உள்ளிட்ட விடயங்களும் இந்த நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டுள்ளன.

சிக்கலான கணக்காய்வுகளின் போது முழுமையான அறிக்கையொன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முன்னர், அதனூடாக வெளிப்படுத்தப்படும் ஊழல், மோசடி தொடர்பிலான குற்றவியல் விசாரணைக்காக, சட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனங்களுடன் அடிப்படை தகவல்களை கணக்காய்வாளர் நாயகத்துடன் பகிர்ந்து கொள்ள அனுமதிக்கும் வகையில் திருத்தங்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

கண்காணிப்பு மற்றும் பொறுப்புக்கூறல் ஆகிய சரியான பொறுப்புகளை நிறைவேற்றத் தவறிய தலைமைக் கணக்கியல் அதிகாரிகள் உள்ளிட்ட அதிகாரிகளிடமிருந்து இது தொடர்பான கூடுதல் கட்டணத்தை அறவிடுவதற்கான அதிகாரத்தை கணக்காய்வாளருக்கு வழங்குவதற்கான பரிந்துரைகளும் தேசிய நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டுள்ளன.

ஒரு பயனுள்ள மற்றும் வெளிப்படையான சொத்து விபரத்தை வெளிப்படுத்தல் மற்றும் இணக்கப்பாட்டுக்கான நிறுவன கட்டமைப்பு தொடர்பிலான முன்மொழிவுகளும் தேசிய நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

ஊழல் எதிர்ப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை வெளிப்படுத்துவது தொடர்பான திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான முரண்பாடுகள் தொடர்பிலான விதிமுறைகள், அவற்றை நிர்வகிப்பதற்கான வழிகாட்டுதல்களை 08

## IGP பதவி வெற்றிடமாக இல்லை ஜனாதிபதிக்கு சட்ட ஆலோசனை

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பினால் தற்போது பொலிஸ் மாஅதிபருக்கு வழங்கப்பட்டுள்ளமை தடை உத்தரவு மட்டுமே என்பதால், பொலிஸ் மாஅதிபர் பதவி வெற்றிடமாகவில்லையென ஜனாதிபதிக்கு சட்ட ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

21ஆவது அரசியலமைப்பு திருத்தத்துக்கு அமைவாக பொலிஸ் மாஅதிபர் பதவி வெற்றிடமாக இல்லாத சந்தர்ப்பத்தில், ஜனாதிபதியால் பதில் பொலிஸ் மாஅதிபர் ஒருவரை நியமிக்க முடியாதென அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார். இதன் காரணமாக, சம்பந்தப்பட்ட சட்டச் சிக்கல் தீர்க்கப்படும் வரை, பொலிஸ் மாஅதிபர் பதவி வெற்றிடமாகவே இருக்குமென, அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி ஏற்பட்டிருப்பது, பொலிஸ் மாஅதிபருக்கு தனது கடமைகளை முன்னெடுத்துச் செல்வதற்கான தடை மாத்திரமே என்றும் அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி இன்று அறிவிக்கப்படும்

### தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு



ஜனாதிபதி தேர்தலுக்கான திகதி, வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளும் திகதி, இடம் மற்றும் வாக்களிக்கும் திகதி குறித்த விசேட வர்த்தமானி அறிவித்தல் இன்று (26) வெளியிடப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இது குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு விசேட அறிக்கையொன்றை நேற்று (25) வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தலுக்கான திகதி மற்றும் ஏனைய அரசியல் ரீதியிலான பொறுப்புக்கள் குறித்து தேர்தல் ஆணைக்குழுவில் உள்ளவர்களைத் தவிர, வேறு 08

### அதிகாரத்தில் உள்ளவர்கள் தோற்றால்

## ஊடகங்களுக்கு என்ன நடக்கும் என்பது தெரியாது



அதிகாரத்தில் இருப்பவர்கள் தோல்வியடைந்தால், சில ஊடகங்களுக்கு என்ன நடக்கும் என்பது தெரியாதுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் தேசிய செயற்குழு உறுப்பினர் கே.டி.லால் காந்த தெரிவித்துள்ளார். அரசியல் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அக்கூட்டத்தில் அவர் தெரிவித்ததாவது: 08

## ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கும் விஜேயதாச

### ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் விளக்கம்



ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ளதாக நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்‌ஷ தெரிவித்துள்ளார்.

அமைச்சர் விஜேயதாச ராஜபக்‌ஷ நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பிலேயே இவ்வாறு நேற்று இந்த அறிவிப்பை விடுத்தார். 08

## ஜனாதிபதி தேர்தலில் களமிறங்க உள்ளதாக பொன்சேக்கா அறிவிப்பு



முன்னாள் இராணுவ தளபதி பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேக்கா ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதாக தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

தற்போது 73 வயதான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேக்கா, ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளராக கடமையாற்றிய 08

### நவ சமசமாஜ கட்சி தலைவர்

## விக்கிரமபாகு கருணாரத்ன கொழும்பில் காலமானார்



இலங்கையின் மூத்த அரசியல்வாதியும் நவ சம சமாஜ கட்சியின் தலைவருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன காலமானார்.

சுகவீனமுற்று, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்று (25) அதிகாலை 08

## பரீட்சைகளுக்கான நேர அட்டவணைகளில் மாற்றம்

பரீட்சைகளுக்கான நேர அட்டவணையை புதுப்பிப்பதற்குத் திட்டமிட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

பிட்டிபனையில் உள்ள களஞ்சியசாலையில் பாடசாலை பாடப்புத்தகங்களை விநியோகிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே, கல்வி அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய, இந்த வருடத்துக்கான கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையை 08

## பொது வேட்பாளரை களமிறக்கும் எண்ணம் தமிழரசுக் கட்சிக்கு இல்லை



தமிழர் தரப்பு பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்குவதற்கான எந்தவொரு தீர்மானத்தையும் இலங்கை தமிழரசுக் கட்சி இதுவரையில் எடுக்கவில்லையென கட்சியின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் (24) நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் இதைக் குறிப்பிட்டுள்ளார். 08

## தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரமுள்ள அனைவருக்கும் புதிய பத்திரம்

### இரண்டு மாதங்களில் நடவடிக்கை

தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரமுள்ள சகலருக்கும் எதிர்வரும் செப்டெம்பர் அல்லது ஒக்டோபர் மாதத்துக்குள் நிரந்தர சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படுமென, மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகம் அனுருத்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்: 2020 ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார பிரச்சினையால், சாரதிகளுக்கான அனுமதிப் பத்திரத்துக்கு தேவையான அட்டைகளை பெறுவதில் சிக்கல் ஏற்பட்டது. 08

## சட்டவிரோத பண வைப்புக்களை உடனடியாக அறிவிக்க கோரிக்கை



சட்டவிரோதமான முறையில் பணத்தை வைப்புத் தொகையாக ஏற்றுக்கொள்ளும் நிறுவனங்கள் தொடர்பில், உடனடியாக தெரிவிக்குமாறு இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பி. நந்தலால் வீரசிங்க பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கியின் தலைமையகத்தில் (24) நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டிலேயே, ஆளுநர் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார். 08

# க/ மதீனா மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) ஒரு பார்வை





எஸ்.ஏ.ஸீ.எம். ஜிப்ரீல் (SLPS)




மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பாததும்பரை பிரதேச செயலகப் பிரிவினுள் அமைந்துள்ள மடவளை முஸ்லிம் கிராமம் சுமார் 300 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட கால வரலாற்றைக் கொண்டுள்ளது. இது மடவளை மடிகே, நாப்பான, மீகம்மனமடிகே, லீமா கஹதெனிய, பரணறேந்தபொல பிடியே கெதர ஆகிய கிராம சேவக பிரிவுகளையும், பாததும்பறை பிரதேச சபைக்குட்பட்ட சுமார் 10,000 வாக்காளர்களையும் கொண்டது. இக்கிராமத்தின் கல்வியூற்றாய் கடந்த 76 வருடங்களாக க/மதீனா தேசிய பாடசாலை திகழ்ந்து வருகிறது.

1930 களில் இக்கிராமத்தில் வாழ்ந்த புரட்சிகர கருத்து நிறைந்த தனவந்தரும், பெரும் சமூக சேவையாளருமான மாத்தளை விதானலாகே கெதர அபூபக்கர் லெவ்வை செய்யது முஹம்மது என்பவரால், தற்போதைய 'மதீனா பேனீசர்ஸ்' எனும் வியாபாரத்தளம் அமைந்துள்ள இடத்தில் ஒரு சிறிய பாடசாலையாக 02.12.1935 இல் ஆரம்பிக்கப்பட்டது. முதல் தலைமையாசிரியரான திரு. ஏ.கே. சுப்பிரமணியம் என்பவர் உட்பட 03 ஆசிரியர்களையும் 36 மாணவர்களையும் உள்ளடக்கிய மடவளை அரசினர் கலவன் பாடசாலை என்ற பெயரில் இயங்கத் தொடங்கியது.

1936 இல் மடவளை தமிழ் பாடசாலை என்று பெயர் மாற்றம் பெற்றதுடன் மாணவர் தொகை 215 ஆகவும், ஆசிரியர்கள் 04 ஆகவும் உயர்ந்து, வளர்ச்சிப் படியில் கால் பதிக்கத் தொடங்கியது. இதன் ஓர் அம்சமாக 04.09.1937 இல் பெற்றோர் ஆசிரியர் சங்கம் உருவாக்கப்பட்டது. 16.05.1940 இல் ஏற்பட்ட வெள்ளத்தினால் இப்பாடசாலையும் பாதிப்புக்குள்ளாகினாலும் 1941 இல் 261 மாணவர்களையும் 07 ஆசிரியர்களையும் கொண்டு நாணல் புல் போல் மீண்டும் தலை நிமிரத் தொடங்கியது.

1944 இல் எஸ்.எஸ்.ஸி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. 1948 இல் 423 மாணவர்களையும் 15 ஆசிரியர்களையும் கொண்டு புதிய கட்டிடத்தில் இயங்கத் தொடங்கியது. 1952 இல் இப் பாடசாலை கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு என வகுத்து 14 வகுப்புகளாக வளர்ச்சியடைந்தது. 1958 இல் பெண்கள் பாடசாலை கனவும் நனவாகியது. 1961 அக்டோபர் 23 இல் இப்பாடசாலை மகா வித்தியாலயமாக தரம் உயர்த்தப்பட்து. தலைமை ஆசிரியராகவிருந்த எம்.வை.எம் முஸ்லிம் என்பவரே முதல் அதிபராக கடமையேற்றார். அதன் பின்னர் ஜனாப்களான டி.பீ. ஷனி முஹம்மத், எப்.ஆர்.ஆர்.டி. சல்பின் ஆகியோருடன் சிறிது காலம் பீ.எம். காஸிம், ஏ.எம்.முஹிஸீன் (ஜே.பி) ஆகியோர் கடமையாற்றினார்கள்.

1961 இல் கல்வி அமைச்சர் கலாநிதி தசநாயக்காவினால் புதிய கட்டடம் வழங்கப்பட்டது. அதேபோல், மர்ஹூம் கலாநிதி பதியுதீன் மஹ்மூத் அவர்களினாலும் ஒரு கட்டடம் வழங்கப்பட்டது. அதன்பின், மதீனா மகா வித்தியாலயம் எனப் பெயர் நாமம் கொண்டு ஜொலிக்கத் தொடங்கியது.

அதுவரை தனியாக இயங்கி வந்த பெண்கள் பாடசாலை 1967ம் ஆண்டு மதீனா மகா வித்தியாலயத்துடன் இணைக்கப்பட்டது. 1968ம் ஆண்டிலேயே முதன் முதல் இப்பாடசாலைக்கு ஆண்களும், பெண்களும் சேர்க்கப்பட்டனர். அதுவரை இயங்கி வந்த பெண்கள் பாடசாலையின் அதிபர்களாக ஜனாபா சித்தி ஜஹீதா ஸல்ஸபீல், ஜனாபா பாலுூஹா தாஹீர், அல்ஹாஜ் எஸ்.ஆர்.எம். தாஹா போன்றோர் கடமையாற்றினர்.

எமது பாடசாலையின் மிக நீண்ட காலம் அதிபராக கடமையாற்றியவர் என்ற பெருமைக்குறிய அதிபரான ஜனாப் எஸ்.ஆர்.எம்.பாரூக் முதலாவது பதவிக்காலத்துடன் (19681979) எமது பாடசாலை நாடெங்கும், நாலாதிக்கும் புகழ் பரவத் தொடங்கியது. இவரது காலத்திலேயே எமது பாடசாலையில் கலை, வர்த்தக, விஞ்ஞான வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. 1971ம் ஆண்டில் தான் முதன் முதலாக பல்கலைக்கழக அனுமதி எமது பாடசாலைக்கு கிட்டியது. அத்துடன் கல்வி மாத்திரமின்றி இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் சிறப்புறத் தொடங்கியது.

1976 இல் எமது பாடசாலைக்கு மைதானம் அமைக்க காணி பெற்றுக் கொள்ளப்பட்டது. 1980 ஆம் ஆண்டு இவ்வித்தியாலயம் மத்திய கல்லூரியாக தரம் உயர்த்தப்பட்டது. எஸ்.ஏ.எம்.பாரூக் ஆகியோர் அதிபர்களாக கடமையாற்றிய இத்தசாப்தம் எமது பாடசாலையின் வேகமான வளர்ச்சிக்கு அடித்தளமிட்டது. பொறியியல், வைத்திய பீடங்களுக்கு மாணவர்கள் தெரிவானதுடன், அகில இலங்கை ரீதியில் கிரிக்கட் விளையாட்டில் வெற்றியீட்டி தொடர்ச்சியாக மதீனா வீரர்கள் தேசிய சூரர்களாக வலம் வந்து கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.




ஆண்டு ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த (சா/த), க.பொ.த (உ/த) என சகல பரீட்சைகளிலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பிரகாசித்தது. இலங்கையின் நாலா திக்குகளிலும் இருந்து வந்து கல்வி கற்ற மாணவர்கள் இன்று இலங்கை பூராகவும் வைத்தியர்களாகவும், பொறியியலாளர்களாகவும், கணக்காளர்களாகவும் இன்னும் பல துறைகளில் உயர் பதவிகளில் சுடர் விட்டுப் பிரகாசிப்பதோடு, வெளி நாடுகளிலும் பிரகாசிக்கின்றனர். மதீனா மத்திய கல்லூரியாக இருந்த நிலை 1994 இல் மாற்றம் பெற்று, தேசிய பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டதுடன், அக்காலப் பிரிவிலும், கல்வி சார் இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் சிறந்து விளங்கி வந்தமை பாராட்டத்தக்கது. அக்கால கட்டத்தில் ஜே.எம். முனவ்வர் அதிபராக கடமையாற்றினார்.

இக் கல்லூரியின் வரலாற்றில் மதீனாவின் பழைய மாணவரான ஏ.எச்.எம்.ஸித்தீக் அதிபராக கடமையாற்றிய (1977 – 2008) ஆண்டு காலப்பகுதியில் பௌதீக வளங்கள் அதிகரிக்கப்பட்டன. அத்துடன் இக்கல்லூரியின் ஆங்கிலப் பிரிவு 2003 இல் ஆரம்பிக்கப்பட்டு அதற்கான ஒரு தனியான கட்டடமும் அமைக்கப்பட்டது.

2001 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது மடவளையைச் சேர்ந்த உயிர்த் தியாகம் செய்த 11 பேரின் நினைவாக முன்னாள் அமைச்சரும், முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவருமான ரவூப் ஹக்கீமின் முயற்சியினால் இக் கல்வி வலயத்திலே மிகப் பெரியதும், சிறந்ததுமான கேட்போர் கூடம் ஒன்று மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களின் பெயரால் நிர்மாணிக்கப்பட்டது. இக் கேட்போர் கூடம் 2004.02.15 இல் திறந்து வைக்கப்பட்டது.

**இப்பாடசாலையில் கடமையாற்றிய அதிபர்கள்;**

1. திரு. ஏ.கே. சுப்பிரமணியம் (தலைமை ஆசிரியர்) 1935 - 1941
2. திரு. பீ. ராயப்பு (தலைமை ஆசிரியர்) 1941 - 1949
3. திரு. கே. இராஜசிங்கம் (தலைமை ஆசிரியர்) 1949 - 1951
4. ஜனாப். எஸ்.எம்.ஏ. றஸீட் (தலைமை ஆசிரியர்) 1951 - 1951
5. அல்ஹாஜ். ஜீ.எஸ்.எம். இஸ்மாயில் (தலைமை ஆசிரியர்) 1951 - 1959
6. அல்ஹாஜ். எம்.ஐ.எம். சரீப் (தலைமை ஆசிரியர்) 1959 - 1961
7. அல்ஹாஜ். எம்.வை.எம். முஸ்லிம் 1961 - 1962
8. ஜனாப். ரீ. சானி முஹம்மது 1962 - 1962
9. ஜனாப். ரீ.ஆர்.ஆர்.டி. சல்டீன் 1963 - 1965
10. அல்ஹாஜ். எஸ்.எம். தாஹா 1965 - 1968
11. அல்ஹாஜ். எஸ்.ஏ.ஆர்.எம். பாருக் 1968 - 1979
12. அல்ஹாஜ். எஸ்.எம். தாஹா 1979 - 1984
13. அல்ஹாஜ். எஸ்.ஏ.ஆர்.எம். பாருக் 1984 - 1990
14. அல்ஹாஜ். ஜே.எம். முனவ்வர் 1990 - 1997
15. அல்ஹாஜ். எம்.எம். லுக்மான் 1997 - 1997
16. அல்ஹாஜ். ஏ.எச்.எம். சித்தீக் 1997 - 2008
17. ஜனாப். எஸ்.எச்.எம். அலிஜின்னா 2008 - 2008 (ஏப்ரல் - ஒக்டோபர்)
18. ஜனாப். ஈ.எம். நஸீர் 2008 2010
19. அல்ஹாஜா. எம்.இஸட்.யூ. ஹிதாயா 2010 - 2016
20. ஜனாப். ஏ.சீ.ஏ. அஸீஸ் 2016 - 2018
21. ஜனாப். ஏ. ரஹீம் (தற்போதைய அதிபர்) 2018 – 2020

மதீனா தேசிய பாடசாலையின் கணனி கற்கை நிலையம் 2004.11.01 இல் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன் மூலம் கடந்த 66 மாதங்களினுள் ஆசிரியர், மாணவர்களின் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளுக்காக பாடசாலை வேளைகளில் மாத்திரமன்றி விடுமுறை நாட்களிலும் மாலை வேளைகளிலும் வகுப்புக்கள் நடைபெற்றுள்ளன. இக் காலப் பகுதியினுள் 60 இற்கு மேற்பட்ட ஆசிரியர்கள், 40 பட்டதாரிகள், 547 மாணவர்கள் பின்னேர வகுப்புக்களில் பங்குபற்றியுள்ளனர். 2007, 2008 ஆம் ஆண்டுகளில் கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட 'கல்வியியல் மென்பொருள் விருத்தி' போட்டிகளில் அதிக மாணவர்களை பங்குபற்ற செய்ததன் மூலம் இரு தடவைகளும் மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்திற்கான விருது கிடைத்தது.

2008 ஆம் ஆண்டில் சிறிது காலம் பதவி வகித்த ஜனாப். எஸ்.எச்.எம். அலிஜின்னாவின் காலத்திலும் எல்லா துறைகளிலும் சர்வ கலாசாலை அனுமதி பாராட்டதக்க வகையில் விருத்தியடைந்தது.

மதீனா தேசிய பாடசாலையின் பழைய மாணவர்களும், பழைய மாணவர் சங்க உறுப்பினருமான அல்ஹாஜ் எம்.எம்.முஸ்னி, அல்ஹாஜ் எம்.எம்.ரிப்தீ அவர்களின் தகப்பனார் எஸ்.எம்.முழாப்பர் ஆகியோர் இணைந்து எம்.ஆர்.எம். பவுண்டேஷன் மூலமாக மதீனா தேசிய பாடசாலையின் தேவைக்கு பலனடையக் கூடியதாக 2009ம் ஆண்டில் 40 இலட்சம் பெறுமதியான சொகுசு பஸ்ஸை பாடசாலையின் அதிபராக கடமையாற்றிய ஈ.எம். நஸீர் (2008 – 2010 காலப்பகுதி) அவர்களிடம் அன்பளிப்பாக வழங்கினார்.

இணைப்பாட விதான செயற்பாடுகளில் பாடசாலையின் மாணவர்களது சாதனைகள் சிறப்பானவை. மைதான நிகழ்ச்சிகள், சுவட்டு நிகழ்ச்சிகள், குழு விளையாட்டுக்கள் என்பவற்றில் வலய மட்டம், மாவட்ட மட்டம், மாகாண மட்டம், தேசிய மட்ட நிலைகளில் இவர்கள் தடம் பதித்துள்ளார்கள். 2008ஆம் ஆண்டில் தொடங்கி வைக்கப்பட்ட அஸ்ஹர் மதீனா கிரிக்கட் போட்டியில் கடந்த 3 வருடங்களாக தொடர்ந்து எமது பாடசாலை வெற்றியீட்டி வருகிறது.

மாணவர் மன்றம், சாரணர் அமைப்பு, பேண்ட வாத்தியக் குழு, முத்திரை சங்கம், இலக்கிய மன்றம், முஸ்லிம் மஜ்லிஸ், விளையாட்டுக் கழகங்கள், விஞ்ஞான மன்றம், கலை வர்த்தக கழகம் போன்ற பல கழகங்கள் சிறப்பாக செயற்பட்டு வருகின்றன. கல்வி நடவடிக்கைகளில் தொடர்ந்து முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. தற்போது 2021ம் ஆண்டு ஏறக் குறைய 1654 மாணவர்களையும், 86 ஆசிரியர் வளத்தையும், கல்வி சாரா ஊழியர்கள் 19 பேருடன் செவ்வனே செயற்பட்டு வருகின்றது.

**இக்பால் அலி...**



ஆசிரியர் குழாம்



கிரிக்கட் அணி




பேண்ட் வாத்திய குழு



ரக்பி குழு



தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

# தினகரன்
THINAKARAN தினகரன்

2024 ஜூலை 26 வெள்ளிக்கிழமை

தொழுகை நேரம்
சுபஹ் - 04.42
லுஹர் - 12.18
அஸர் - 03.42
மஃரிப் - 06.31
இஷா - 07.46

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் ஆடி 10
ராகுகாலம் : காலை : 10.32 - 12.02வரை
சுபநேரம் : காலை : 6.02 - 7.32வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



RAMIS முறையை திறம்பட பயன்படுத்துதல்

# அமைச்சரவை உபகுழு அறிக்கை ஜனாதிபதி ரணிலிடம் கையளிப்பு

வருவாய் நிர்வாக முகாமைத்துவ தகவல் முறைமையை (RAMIS) Revenue Administration Management Information System) எவ்வாறு திறம்பட பயன்படுத்துவது என்பது குறித்து ஆராய்ந்து, பரிந்துரைகளை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சரவை உபகுழுவின் அறிக்கை அண்மையில் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் 'வருவாய் நிர்வாக முகாமைத்துவ தகவல் முறைமை (RAMIS)பராமரிப்பு சேவைகளைப் பெறுதல்' என்ற 24/0696/604/079 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்துக்கமைய 2024 ஏப்ரல் 08 இல், அமைச்சரவை உப குழு நியமிக்கப்பட்டது.



மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தலைமையிலான உப குழுவில் அமைச்சர்களான டிரன் அலஸ் மற்றும் நளீன் பெர்னாண்டோ ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர்.

வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் முறைமையின் திறமையான செயற்பாடு மற்றும் உடனடித் தலையீட்டின் முக்கியத்துவம், அவசியத்தை கருத்தில் கொண்டு இந்த அறிக்கையில் 7 முக்கிய பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

பொலிஸ் மாஅதிபர் தொடர்பான

# நீதிமன்ற தீர்ப்பை அரசியலமைப்பு பேரவைக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பொலிஸ் மா அதிபர் தொடர்பான நீதிமன்ற தீர்ப்பை மீள அரசியலமைப்பு பேரவைக்கு சமர்ப்பிக்கவுள்ளதாக சபை முதல்வர்,அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நீதிமன்ற அதிகாரம் பாராளுமன்றத்திற்குள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என சட்டம் காணப்படுவதாக அமைச்சர் தெரிவித்தார்.

தேசபந்து தென்னக்கோன் பொலிஸ் மா அதிபராக பணியாற்றுவதை தடை செய்து உயர்நீதிமன்றத்தினால் விடுக்கப்பட்டுள்ள தடையுத்தரவு தொடர்பில், சபையில் கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் மேலும் 08

# கட்டார் தொண்டு நிறுவனத்தினரால் 3,476 விவசாயிகளுக்கு இலவச உரம்

Qatar Charity யுடன் அமைச்சு ஒப்பந்தம் கைச்சாத்து

குருநாகல், மாத்தளை மற்றும் மொனராகலை ஆகிய மூன்று மாவட்டங்களிலுள்ள 3,476 விவசாய குடும்பங்களுக்கு, இலவச உரம் வழங்கும் திட்டத்தை கட்டார் அறக்கட்டளை தொண்டு நிறுவனம் Qatar Charity ஆரம்பித்துள்ளது. நாடு எதிர்கொண்டுள்ளபொருளாதாரநெருக்கடி மற்றும் உணவு பாதுகாப்பை கருத்தில் கொண்டு, விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில், கட்டார் தொண்டு நிறுவனம் இந்த உதவியை செய்துள்ளது. நாட்டின் மூன்று மாவட்டங்களிலுள்ள 3,746 08



# கெஹலியவின் விளக்கமறியல் நீடிப்பு

தரக்குறைவான தடுப்பூசிகளை இறக்குமதி செய்த குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவின் விளக்கமறியல், மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

இக்குற்றச்சாட்டுடன் தொடர்புடைய மேலும் ஐந்து சந்தேக நபர்கள் அடங்கலாக கெஹலிய ரம்புக்வெல்லவையும் 2024 ஆகஸ்ட் 08 வரை விளக்கமறியலில் வைக்க மாளிகாகந்த நீதவான் நீதிமன்றம் நேற்று (25) உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்கு தொடர்பில் முன்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மருத்து 08

# மிஸ்பா ஜெபமிஷனரியில் தெய்வீக சுகமளிக்கும் கூட்டம்



முகத்துவாரம் மிஸ்பா ஜெபமிஷனரி ஆலயத்தில் நாளை 27 மற்றும் நாளை மறுதினமும் 28 ஆம் திகதிகளில் தெய்வீக சுகமளிக்கும் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன . இல. 187/7, மோதரவீதியில் தினமும் மாலை 4.00 மணிக்கு சபை போதகர் வண. ஜெ.சாரங்கபாணியின் தலைமையில் இது நடைபெறவுள்ளது.

# இயற்கை அனர்த்தம்:கடமைக்கு சமுகமளிக்காதோருக்கு விடுமுறை

வெள்ளம், நிலச்சரிவு மற்றும் வீதிகளில் போக்குவரத்து இடையூறு காரணமாக கடந்த மே மற்றும் ஜூன் மாதங்களில் கடமைக்கு சமுகமளிக்கத் தவறிய, அரச ஊழியர்களுக்கு விசேட விடுமுறை வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

கொழும்பு , களுத்துறை, கம்பஹா, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, புத்தளம், குருநாகல், பொலன்னறுவை, கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் உள்ள அரச ஊழியர்களுக்கு இந்த விசேட விடுமுறைகள் வழங்கப்படவுள்ளன. குறிப்பிட்ட இந்த இடங்களில் போக்குவரத்து சேவைகள் மற்றும் பேரிடர் அல்லது இடப்பெயர்வு காரணமாக கடமைக்கு ச முகமளிக்கத் தவறிய உத்தியோகத்தர்கள் இந்த விசேட விடுமுறைக்கு உரித்துடையவர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது .


## மக்கள் வங்கி

**பிராந்திய தலைமைக் காரியாலயம் – ஹம்பாந்தோட்டை**

**மீட்டெடுக்கப்படாத அடகு வைக்கப்பட்ட நகைகளின் பொது ஏல விற்பனை**

மக்கள் வங்கி ஹம்பாந்தோட்டை பிராந்திய தலைமைக் காரியாலயத்தின் பின்வரும் கிளைகள்/ சேவை மையங்களில் 31.05.2023 வரை (ஒரு வருட காலத்திற்கு அடகு வைக்கப்பட்ட) அடகு வைக்கப்பட்டுள்ளதும் 27.08.2024 திகதி வரை மீட்டெடுக்கப்படாத/ புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள திகதி மற்றும் இடத்தில் காலை 9.00 மணி தொடக்கம் ஏலத்தில் விற்கப்படும்.

**ஏலவிற்பனை செய்யப்படும் திகதி 28.08.2024 & 29.08.2024**

| ஏலவிற்பனை செய்யப்படும் இடம் | தங்காலை கிளை - அரங்கம் |
|---|---|
| அடகு வைக்கப்பட்ட கிளைகள் | ஹம்பாந்தோட்டை, திஸ்ஸமஹாராம, தங்காலை, அம்பலாந்தோட்டை, வலஸ்முல்ல,அங்குனுகொலபெலஸ்ஸ, சூரியவெவ, மித்தெனிய, ரன்ன, வீரகெட்டிய |
| அடகு வைக்கப்பட்ட சேவை மையங்கள் | வீரவில, நிர்வாக வளாகம் (Administrative Complex), சயுருபாய, லுனுகம்வெஹர, தங்காலை, ஹுங்கம, கட்டுவன |

இந்த ஏல விற்பனையை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய, ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி,**
**பிராந்திய தலைமை காரியாலயம்,**
**ஹம்பாந்தோட்டை,**
**தங்காலை கிளை**
**(2ஆம் மாடி), 146A, மாத்தறை வீதி தங்காலை**
**தொலைபேசி இல.: 047-2220902/ 047-2220903**

PEOPLE'S BANK
Pride of the Nation


# தென் மேற்கில் சில நாட்களுக்கு மழை

நாட்டின் தென் மேற்குப் பகுதியில் இன்று முதல் (26) அடுத்த சில நாட்களுக்கு மழை சற்று அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளி மண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை, மொனராகலை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 5055 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் பலத்த காற்று வீசக் கூடிய சாத்தியம் காணப்படுகிறது. நாட்டின் ஏனைய பிரதேசங்களில் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 30 -40 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளி மண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது .






## காணி எடுத்தற் சட்டம்
## (460) ஆம் அத்தியாயம்
## 39 அ (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

1983, செப்டம்பர் மாதம் 05 ஆம் திகதிய 261/3 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) பிரிவின் பிரசுரிக்கப்பட்ட 1983 ஆம் ஆண்டின் 222 ஆம் இலக்க கட்டளையில் குறிப்பிட்ட காணித் துண்டுகள் முழுமையாக அரசுரித்தாக்கப்பட்டுள்ளதோடு, அரசின் சார்பில் அச்சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ் இக்காணித் துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. எனினும், அச்சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க சட்டத்தினால் இடைசெறுகப்பட்ட) 39 (அ) பிரிவினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் சுற்றுலாத் துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பர்னாண்டு ஆகிய நான் குறித்த காணித் துண்டுகளில் கீழ்வரும் ஆதன அட்டவணையில் விபரிக்கப்படும் காணித் துண்டினை மட்டும் இக்கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.

**ஹரின் பர்னாண்டு**
**சுற்றுலாத் துறை மற்றும் காணி அமைச்சர்**

**எனது இல. 03ஜே/83/யூடீஏ/224**
**காணி எடுத்தல் உத்தியோகத்தரின் இல. அத்1/531/(துண்டு இலக்கம் 47).**
**சுற்றுலாத் துறை மற்றும் காணி அமைச்சு**
**“மிஹிகத்த மெதுர”, காணிச் செயலகம்,**
**இலக்கம் 1200/6, ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல.**

**1 ஆம் ஆதன அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவு, புளூமெந்தால் கிராம உத்தியோகத்தர் பிரிவில் புளூமெந்தால் (வட்டார இலக்கம் 09 - புளூமெந்தால், கொழும்பு மாநகர சபை எல்லைக்குள்) கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இலக்கம் 520408 ம், 2024.06.06 ஆம் திகதியும் கொண்ட கடத்திரள் வரைபடத்தில் விபரமாக காணப்படும் கீழ்வரும் பெயர்களையும் விஸ்தீரணத்தையும் உடைய காணித் துண்டின் எல்லைகள்,

01. துண்டு இலக்கம் 2 - சுகததாச விளையாட்டரங்கு - விஸ்தீரணம் - 0.1897 ஹெக்டயார்.

| | | |
|---|---|---|
| வடக்கு | - | கே. சிறில் சீ. பெரேரா மாவத்தையும் துண்டு இலக்கம் 1, |
| கிழக்கு | - | துண்டு இலக்கம் 1 ம், ஓ.டீ.ரத்நாயக்க உரிமை கோரும் கே. சிறில் சீ. பெரேரா மாவத்தையில் வரி மதிப்பீட்டு இலக்கம் 312/3 கொண்ட காணியும், |
| தெற்கு | - | ஓ.டீ.ரத்நாயக்க உரிமை கோரும் கே. சிறில் சீ. பெரேரா மாவத்தையில் வரி மதிப்பீட்டு இலக்கம் 312/3 கொண்ட காணியும், பாதையும், |
| மேற்கு | - | பாதையும், கே. சிறில் சீ. பெரேரா மாவத்தையும், துண்டு இலக்கம் 1 ம். |

ஈஓஜீ 07 0159

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆடி மாதம் 10ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 முஹர்ரம் பிறை 19

### குறள் தரும் சிந்தனை



எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து

பணிவு என்னும் பண்பு, எல்லார்க்கும் நலம் பயக்கும். ஏற்கனவே செல்வர்களாக இருப்பவர்களுக்கு அந்தப் பண்பு, மேலும் ஒரு செல்வமாகும்.

# நாளுக்குநாள் சூடுபிடிக்கும் ஜனாதிபதி தேர்தல் களம்

நாட்டின் ஜனாதிபதித் தேர்தலுக்கென நிதியொதுக்கீடு வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. தேர்தலுக்கான ஏற்பாடுகளை தேர்தல்கள் ஆணைக்குழு முன்னெடுத்துள்ளது. இந்நிலையில் ஜனாதிபதி தேர்தல் களம் நாளுக்குநாள் சூடுபிடித்து வருகிறது. தேர்தலுக்கான திகதி அடுத்துவரும் சில தினங்களுக குள் அறிவிக்கப்படுமென தேர்தல்கள் ஆணைக்குழு அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

22.18 மில்லியன் மக்கள் வாழும் இந்நாட்டின் அடுத்த ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக இத்தேர்தல் நடத்தப்படவிருக்கிறது. அந்த வகையில் இத்தேர்தலில் வாக்களிக்க 17.1 மில்லியன் மக்கள் தகுதி பெற்றுள்ளனர். அவர்களில் சுமார் 10 இலட்சம் பேர் புதிய வாக்காளர்களாவர் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதிகாரியொருவர் அண்மையில் குறிப்பிட்டிருந்தார்.

இந்நாட்டின் அரசியலமைப்பின் பிரகாரம் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 17 ஆம் திகதிக்கும் ஒக்டோபர் 16 ஆம் திகதிக்கும் இடையில் இத்தேர்தல் நடத்தப்படும்.

அரசியலமைப்பின் பிரகாரம் மக்களின் சுதந்திர வாக்களிப்பின் ஊடாகவே இந்நாட்டின் ஜனாதிபதி தெரிவு செய்யப்படுவார். அதாவது ஜனாதிபதித் தேர்தலில் 50 சதவீதத்திற்கும் மேற்பட்ட வாக்குகளைப் பெற்றுக் கொள்பவர் ஜனாதிபதியாவார். அவ்வாறு தெரிவு செய்யப்படும் ஜனாதிபதி அரசியலமைப்பின் பிரகாரம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகவும் படைகளின் பிரதானியாகவும் நாட்டின் தலைவராகவும் இருப்பார்.

இந்நாட்டில் இறுதியாக 2019 இல் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. அத்தேர்தலில் 15,992,096 பேர் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றிருந்தனர். அவர்களில் 13,387,951 பேர் வாக்களித்தனர். இவ்வாறு வாக்களித்தவர்களில் 6,924,255 வாக்குகளை அதாவது 52.25 சதவீத வாக்குகளைப் பெற்றுக்கொண்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் அபேட்சகர் கோட்டாபய ராஜபக்ஷ இலங்கையின் ஏழாவது ஜனாதிபதியாகத் தெரிவானார். ஆன போதிலும் அவர் பதவிக்கு வந்த இரு வருட காலப்பகுதிக்குள் நாடு கடும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளானதோடு, வங்குரோத்து நிலையையும் அடைந்தது. அதனால் அவர் சுயமாகவே ஜனாதிபதி பதவியை விட்டு விலகினார்.

இவ்வாறான சூழலில் பொருளாதார வீழ்ச்சியில் இருந்தும் வங்குரோத்து நிலையில் இருந்தும் நாட்டை மீட்டெடுக்கவென எவரும் நாட்டுக்கு தலைமை வழங்க முன்வராத துர்ப்பாக்கிய நிலை உருவானது. அந்தச் சூழலில் நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் தலைமையை ஏற்றதோடு பொருளாதார வீழ்ச்சியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான வேலைத்திட்டங்களையும் முன்னெடுக்கலானார்.

அவ்வேலைத்திட்டங்கள் குறுகிய காலப்பகுதி முதல் பயனளிக்கத் தொடங்கின. அதன் ஊடாக பொருளாதார வீழ்ச்சிக் காலப்பகுதியில் நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடிகளும் அசௌகரியங்களும் கட்டம் கட்டமாக நீங்கலாகின. அத்தோடு வங்குரோத்து நிலையில் இருந்தும் குறுகிய காலப் பகுதிக்குள் நாடு மீட்சி பெற்றுக் கொண்டுள்ளது. இவற்றின் ஊடாக நாட்டில் புதிய நம்பிக்கைகளும் எதிர்பார்ப்புக்களும் உருவாகியுள்ளன.

அதேநேரம் 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப்பகுதியில் முகம்கொடுத்தது போன்ற பொருளாதார நெருக்கடியை இனியொரு போதும் நாடு எதிர்கொள்ளக்கூடாது என்ற எதிர்பார்ப்பு அனைத்து குடிமக்கள் மத்தியிலும் காணப்படுகின்றது. அதனால் நாட்டில் நிலைபேறான பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கான அனைத்து வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவ்வேலைத்திட்டங்கள் நம்பிக்கை அளிக்கும் வகையில் முன்னேற்றகரமான பாதையில் பயணித்துக் கொண்டிருக்கின்றன.

இவ்வாறான சூழலில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கான காலம் வந்துள்ளது. ஆனால் இது கடந்த காலங்களைப் போன்றதொரு சூழல் அல்ல. அப்படியிருந்தும் அரசியலமைப்பின் பிரகாரம், ஜனநாயக விழுமியங்களுக்கு ஏற்ப இத்தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. அதற்கென வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக நிதியொதுக்கீடும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஜனாதிபதித் தேர்தலுக்கான ஏற்பாடுகளை தேர்தல்கள் ஆணைக்குழு மேற்கொள்கிறது.

இந்நிலையில் இற்றை வரையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ, பாராளுமன்ற உறுப்பினர் அநுர திஸாநாயக்க, சரத் பொன்சேகா ஆகியோர் இத்தேர்தலில் போட்டியிடுவதாக அறிவித்துள்ளனர். இவர்களில் பொருளாதார வீழ்ச்சியில் இருந்தும் வங்குரோத்து நிலையில் இருந்தும் நாட்டை மீட்டெடுத்த பெருமையை பெற்றவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விளங்குவது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் அரசியல் கட்சிகளும் ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்வதற்கான ஏற்பாடுகளிலும் தயார்படுத்தல்களிலும் ஈடுபட்டுள்ளன. இவ்வாறு ஜனாதிபதி தேர்தலுக்கான களம் நாளுக்கு நாள் சூடு பிடித்து வருகிறது.

editor.tkn@lakehouse.lk

# நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்காகவே சட்டத்தில் திருத்தங்கள்

## தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க

ஆட்சி மாறும் போது கொள்கைகள் மாற்றம் அடைவது நாட்டின் பெரும் பிரச்சினையாகியுள்ளது. எனவே அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் பல்வேறு நிதி மற்றும் நிர்வாகச் செயற்பாடுகளில் சட்டரீதியான மறுசீரமைப்புகளை அரசாங்கம் தற்போதும் மேற்கொண்டுள்ளதென தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தவே இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், மத்திய வங்கிச் சட்டம், அரச நிதிச் சட்டம், கடன் முகாமைத்துவச் சட்டம் என்பன தற்போதும் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், பொருளாதார பரிமாற்றச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். கொழும்பு சினமன் லேக்சைட் ஹோட்டலில் நேற்றுமுன்தினம் (24) நடைபெற்ற அதிவேக நெடுஞ்சாலைகள் தொடர்பிலான தொழில்நுட்ப மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

துறைமுக பிரவேசத்துக்கான அதிவேக வீதிக் கட்டமைப்பின் பணிகள் நிறைவடையும் தறுவாயில் இருப்பதாகவும், அதனால் நாட்டின் பொருளாதாரத்துக்கு மிகப்பெரிய வலு கிட்டுமெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த சாகல ரத்னாயக்க குறிப்பிட்டதாவது:

"இந்த வேலைத்திட்டம் மிக முக்கியமானது. இதனை ஆரம்பிப்பதற்கு முன்பாக பல சவால்களுக்கு முகம்கொடுக்க வேண்டியிருந்தது. துறைமுகத்தின் தலைமையகத்தையும் இந்த வேலைத்திட்டத்தை கருத்தில் கொண்டு மாற்றியமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.



### 2048ஆம் ஆண்டளவில் தனிநபர் வருமானத்தை 20,000 அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமாக்கும் வகையிலான அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றும் வகையில் ஜனாதிபதியினால் திட்டங்கள் – அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன

இத்திட்டத்திற்கு போதியளவு இடம் கிடைக்காமையே அதற்குக் காரணமாகும். எவ்வாறாயினும் துறைமுகப் பணிகளுக்கு இடையூறு இன்றி அவற்றை செய்து முடித்திருக்கிறோம். 2019 இதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

2020 கொவிட் பரவலுக்கு மத்தியிலும் இந்தப் பணிகள் இடம்பெற்ற நிலையில் பொருளாதார சரிவின் காரணமாக அவற்றை இடைநிறுத்த வேண்டிய நிலை உருவானது. தாமதமாகியேனும் தற்போது இந்த திட்டத்தை நிறைவு செய்ய முடிந்திருக்கிறது. இது பொருளாதாரத்திற்கு பெருமளவில் வலு சேர்க்கும்.

அதன்படி 3 தசாப்தங்களுக்கு முன்பாக திட்டமிடப்பட்ட அதிவேக வீதிக் கட்டமைப்பு இப்போது கிடைத்திருக்கிறது. கொழும்பு நகரின் செயற்பாடுகளை இடையூறு இன்றி முன்னெடுத்துச் செல்வதற்கும், கொழும்பு துறைமுகம் மற்றும் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு இடையில் காணப்படும் வாகன நெரிசலை மட்டுப்படுத்துவதற்காகவும் இந்த அதிவேக வீதி அமைந்திருப்பதோடு, நாட்டின் அதிவேக வீதிக் கட்டமைப்புக்களை ஒருங்கிணைக்கும் புள்ளியாகவும் அமையும்.

வாகன நெருக்கடியால் விநியோகச் சேவைகள் தாமதமடைவதோடு அதனால் நிதி வீண் விரயமாகும். அதனால் அதிவேக வீதிக் கட்டமைப்பு இந்த விரயத்தை குறைக்க உதவும். கொழும்பு நகரின் அபிவிருத்திச் செயற்பாடுகள் எதிர்கால அபிவிருத்திக்கான தேவைகளை கருத்தில் கொண்டு முன்னெடுக்கப்பட்டிருக்காமையும் பிரச்சினையாக காணப்படுகிறது. அதிவேக வீதிகளுக்கு மாறாக தற்போதுள்ள ரயில் வீதிகளை மேம்படுத்தல், தூண்கள் மீதான புதிய புகையிரத வீதிகளை அமைத்தல், சுரங்க ரயில் பாதைகளை அமைத்தல் போன்ற செயற்பாடுகளும் நெரிசல்களை தவிர்க்க உதவியாக அமையும்.

ஹொங்கொங் நாட்டில் தனியாருக்கு அரசாங்கத்தின் ரயில் நிலைய காணிகளை வழங்கி சுரங்க பாதையை மேம்படுத்தும் திட்டம் செயற்படுத்தப்பட்டது. அது போன்று நமது நாட்டுக்கு பொருத்தமான முறையொன்றை நாம் செயற்படுத்த வேண்டியது அவசியம்.

ஜப்பானின் உதவியில் இலகு ரயில் வேலைத் திட்டத்தை ஆரம்பித்தோம். ஆட்சி மாற்றத்தோடு அந்தச் செயற்பாடுகள் தடைப்பட்டன. அரசாங்கம் மாறும் போது கொள்கைகள் மாற்றம் பெறுவதும் இந்நாட்டின் மிகப் பெரிய பிரச்சினையாகும். அந்த விடயங்களுக்கு தீர்வை எட்டும் நோக்கிலேயே மத்திய வங்கிச் சட்டம், அரச நிதி நிர்வாகச் சட்டம், பொருளாதார பரிமாற்றச் சட்டங்களை கொண்டு வந்திருக்கிறோம்.

பொருளாதார அபிவிருத்திக்கு வீதிக் கட்டமைப்புக்களின் முன்னேற்றமும் மிக முக்கியமானதாகும். அதற்காக இந்தியாவுடனான உறவுகளை பலப்படுத்தி வருவதோடு, தரைமார்க்க தொடர்புகளை ஏற்படுத்தும் எதிர்பார்ப்புடன் செயலாற்றுகிறோம். அதற்காக 50 கிலோ மீற்றர் தூரத்துக்கு பாலத்தை அமைக்க வேண்டியிருக்கும். அதனால் புதிய வகையில் பாலம் அமைக்கும் தொழில்நுட்ப அறிவு கிடைப்பதோடு. நமது எதிர்கால பொறியிலாளர்களுக்கு நிர்மாணிப்பு தொடர்பிலான தெரிவுகளை பெற்றுக்கொள்ளவும் வழிவகுக்கும்.

அதனால் நாடு வளர்ச்சி அடையும். இந்தியாவின் ஏற்றுமதி இறக்குமதிச் செயற்பாடுகளை இலங்கை துறைமுகத்தின் மூலம் செய்யவதற்கான வாய்ப்பு உருவாகும். அந்நாட்டின் விநியோகச் செலவு 50 சதவீதத்தினால் குறைவடையும். துறைமுகச் செயற்பாடுகளுக்கான வசதிகள் ஏற்படும். ஆனால் இவை சாத்தியமாவதற்கு நிலையான கொள்கைகளுடன் செயற்பட வேண்டியது மிக அவசியமாகும்" என்று தெரிவித்தார். போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன உரையாற்றுகையில், தற்போதைய ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க 2019 ஆம் ஆண்டில் இந்த திட்டத்தை ஆரம்பிப்பதற்கு ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்கியுள்ளார். இலங்கையின் வீதி அபிவிருத்தி வரலாற்றை மாற்றியமைக்கும் வகையில், ஆசிய அபிவிருத்தி வங்கியின் சுமார் 300 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவியின் கீழ் இத்தூண்களின் மேல் நிர்மாணிக்கப்படும் துறைமுக நுழைவு அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.





2048 ஆம் ஆண்டளவில் தனிநபர் வருமானத்தை 20,000 அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றும் வகையில் பொருளாதார தொலைநோக்குப் பார்வை கொண்ட தேசியத் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேசத்திற்கு புத்துயிர் அளிப்பதற்கான தேசிய வேலைத்திட்டத்தை முன்வைத்துள்ளார். எதிர்காலத்தில் இதனை சட்டமாக்கி நடைமுறைப்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த துறைமுக பிரவேச அதிவேக நெடுஞ்சாலையானது, ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்தை உருவாக்கும் திட்டத்தை செயல்படுத்துவதில் நாட்டிற்கு பெரும் பங்களிப்பை வழங்கும். இது நேரடி அந்நிய முதலீட்டுக்கு இடமளிக்கும்"எனத் தெரிவித்தார்.

பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் பொறியியலாளர் ரஞ்சித் ரூபசிங்க, ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கை பிரதிநிதி தகாபுமி கடனோ, சீன சிவில் பொறியியல் நிர்மாணக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் லியு வெய்மின் மற்றும் அமைச்சின் செயலாளர்கள், பேராசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

**ஜனாதிபதி ஊடகப் பிரிவு...**

# மலையக வரலாற்று நூலாக அமைந்துள்ள பி.மரியதாஸின் கட்டுரைகளின் தொகுப்பு







மலையகம் தொடர்பில் பி.மரியதாஸ் அவர்களின் பல்பரிமாண நோக்கில் அமைந்த, பகுப்பாய்வுகளுடன் கூடியதாக நாளிதழ்களில் வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்பு தற்போது 'மலையகம் இங்கிருந்து எங்கே?' எனும் நூல்வடிவில் நமக்கு கிடைத்திருப்பது, மலையகம் 200 நூல்கள் வரிசையிலே மிக முக்கியமானதாகின்றது.

மரியதாஸ் அவர்கள் மலையகத்தில் தோன்றிய ஆளுமை ஆவார். அவர் தேயி லைத் தோட்டத்து லயனில் பிறந்து, தொழிலாளர்களான பெற்றோருக்கும் உடன்பிறப்புகளும் உதவியாக வாழ்ந்தவர். வளரிளம் பருவத்திலே வர்க்கம்சார் கொடுமைகளை அனுபவித்து அதற்கு மாற்றம் தேட தான் பெற்ற கல்வியின் வலிமையாலும் சமூக அரசியல் தொழிற்சங்க ஊடாட்ட அனுபவத்தாலும் ஓர் இலட்சிய இடதுசாரியாக இன்றுவரை செயற்பட்டு வருபவர்.

ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரியில் இர.சிவலிங்கம் பாசறையில் உருவாகி இன்றுவரை மலையக அக்கறையில் செயற்பட்டு வரும் புத்திஜீவிகளிடையே குறிப்பிடத்தக்கவர்.

சுதந்திரத்துக்கு முன்னரும் பின்னரும் அடுத்தடுத்து ஆண்ட ஆட்சியாளர்களினால் மலையக மக்கள் குறித்த கண்ணோட்டம் எவ்வாறாக இருந்தது என்பதை இவரின் கட்டுரைகளில் ஆங்காங்கே தெளிவுபடுத்துகின்றன. இதுவரை மலையக வரலாற்று ஆசிரியர்கள் பதிவுகளிலிருந்த ஒரு நேர்க்கோட்டு அணுகுமுறையை தாண்டியவொன்றாகவும் யாதார்த்தம் தழுவியதாகவும் காணப்படுகின்றது.

நூலின் இறுதியில், தான் உசாத்துணையாக பயன்படுத்திய 53 ஆங்கில நூல்களை பட்டியல் படுத்தியிருப்பதும் ஒவ்வொரு கட்டுரையிலும் மலையகத்தின் எழுவினாக்களை சுட்டும் போது அதன் வரலாற்று பின்னணியை சாதாரண வாசகர்களுக்கு எடுத்துரைப்பதிலும் திறமை உள்ளவராக விளங்குகிறார்.

இந்நூலின் முக்கிய விடயங்கள் மிக சமகாலத்தில் அதாவது 2022 மற்றும் 2023 ஆண்டுகளில் எழுதப்பட்டவைகளாக இருப்பதால் தேசியம், கல்வி, சுகாதரம், வீடமைப்பு, வேதனம், உற்பத்தி, அரசியல், இலக்கியம், நாட்டார் வழக்காறு தழுவிய வர்த்தமான அம்சங்களை சுமந்திருப்பதால் மலையக வரலாற்று நூல்களிடையே தற்காலப்படுத்தப்பட்ட நூல்களில் ஒன்றாக பரிந்துரைக்கலாம்.

'இடதுசாரி இயக்கமும் மலையகமும் (19302023) என்ற இவரின் கட்டுரை பரந்த கால கட்டத்தை செறிவாக இளைய தலைமுறையினருக்கு முன்வைக்க எடுத்த முயற்சி வெற்றியளித்தவொன்றாக குறிப்பிடப்படலாம். மலையக தேசியம் பற்றி எடுத்துரைக்கும் கட்டுரையில் உலக வரலாற்றில் ஊற்றுமூலம் கண்ட தேசியங்களோடு தொடர்புபடுத்தி மலையக தேசியத்தை வலியுறுத்தியிருப்பது சிலாகிக்கத்தக்கது. பல தொலைநோக்கு அம்சங்களை தம் புலமைசார்ந்து அனுபவம் சார்ந்து முன்வைக்கும் மரியதாஸின் இந்த கருவூலம் மலையக அக்கறை கொண்டவர்களுக்கு எதிர்காலத்தில் சிறந்த கைநூலாக அமையுமெனலாம்.

காலத்துக்குகந்த பதினெட்டு கட்டுரைகளை சுடச்சுட ஆழ்வாசிப்பு நாட்டம் கொண்டவர்களுக்கு ஏற்றதாக தொகுத்து வெளிவர கலைஒளி முத்தையா பிள்ளை அறக்கட்டறை சார்பாக பதித்து தொகுத்து வெளியிட்ட எச்.எச். விக்கிரமசிங்க அவர்களும் அவருக்கு அனுசரணையாக இருந்தவர்களும் மலையகத்தின் நன்றிக்குரியவர்களாகின்றார்கள்.

**சு. முரளிதரன்...**

# சவுதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவர் மதீனாவுக்கு முதல் உத்தியோகபூர்வ விஜயம்

சவுதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவராக உமர் லெப்பை அமீர் அஜ்வத் பதவியேற்ற பின்னர், அவர் தனது முதலாவது உத்தியோகபூர்வ விஜயத்தை புனித மதினா முனவ்வரா நகருக்கு கடந்த ஜுலை 17 முதல் 18 வரையான காலப்பகுதியில் மேற்கொண்டார்.

இந்த விஜயத்தின் போது தூதுவர் அமீர் அஜ்வத் மதீனா பிராந்திய ஆளுநர் இளவரசர் சல்மான் பின் சுல்தான் பின் அப்துல் அஸீஸுடன் சிநேகபூர்வமான உரையாடலை மேற்கொண்டார். அதன் போது புதிய தூதுவருக்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டதுடன், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதற்கு சகல விதமான ஒத்துழைப்புகளையும் வழங்குவதற்குத் தயாராக இருப்பதாகவும் இளவரசர் உறுதியளித்தார். இதற்குப் பதில் அளித்த தூதுவர், இவ்வாண்டுடன் இரு நாடுகளுக்குமிடையிலான இராஜதந்திர உறவுகள் கட்டியெழுப்பப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவடைவதை கோடிட்டுக் காட்டினார். சவுதி அரேபியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான வரலாற்று ரீதியான உறவுகளை அவர் குறிப்பிட்டார். முக்கியத்துவம் வாய்ந்த இந்நிகழ்வை சுட்டிக்காட்டுமுகமாக தூதுவர் அமீர் அஜ்வத் மதீனா நகரில் நடுவதற்காக இலங்கையின் 'போகன்விலா' செடிகளை ஆளுநருக்கு அன்பளிப்புச் செய்தார். தூதுவர் அமீர் அஜ்வாத் தனது விஜயத்தின் போது மதீனா இஸ்லாமிய பல்கலைக்கழகத்தின் வேந்தர் கலாநிதி ஸாலிஹ் பின் அலி அல் அக்லாவையும் சந்தித்தார். இச்சந்திப்பின் போது தூதுவர், சவுதி அரேபியா மற்றும் இலங்கை பல்கலைக் கழகங்களுக்கிடையில் பல்வேறு துறைகளில் கல்விசார் ஒத்துழைப்புகளைப் பரிமாறிக் கொள்வது தொடர்பான கலந்துரையாடலையும் மேற்கொண்டார்.





மேலும் இந்த விஜயத்தின் போது தூதுவர் அமீர் அஜ்வத், மதினா வர்த்தக சம்மேளனத்திற்கும் சென்றார். அங்கு சம்மேளனத்தின் பணிப்பாளர்கள் சபையின் முதலாவது பிரதித் தலைவர் நாயிப் அல் ஸாயிதீ, சம்மேளனத்தின் பொதுச்செயலாளர் மற்றும் உறுப்பினர்களுடன் இணைந்து தூதுவருக்கு வரவேற்பளித்தார். இவ்விஜயத்தின் போது தூதுவர்,மதீனா நகரில் அமைந்துள்ள கலாசார மற்றும் வரலாற்று நூதனசாலை, புனித மஸ்ஜிதந் நபவி மற்றும் புனித அல்குர்ஆனை அச்சிடும் மன்னர் பஹ்த் அச்சகம் போன்றவற்றையும் தரிசித்தார்.

**இலங்கைத் தூதரகம் ரியாத்**






திருமதி.பத்மா சந்திரமோகன்
உதவி அதிபர், கொ/ புனித அன்னம்மாள் மகளீர் மகாவித்தியாலயம், கொழும்பு 13

# புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - I

1 மணித்தியாலம்

சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

01. முதல் தரப்பட்ட உருவின் ஒத்த உருவினைத் தெரிவு செய்க.




02. இடைவெளிக்குப் பொருத்தமான எண் யாது?




i. 26 ii. 45 iii. 15

03.




இத் தராசு சமநிலை அடைவதற்கு செய்ய வேண்டியது
i. B பக்கத்திற்கு 300g இடல்
ii. B பக்கத்திற்கு 400g இடல்
iii. A பக்கத்தில் இருந்து 500g எடுத்தல்

04. MKVR / MR என்பதால் காட்டப்படுவது ஒரு பொருளின் விலை ஆங்கில எழுத்தால் குறிக்கப்பட்டுள்ளது. அதன்படி அப்பொருளின் சரியான விலையாக இருக்கக் கூடியது?
i. 3361/35 ii. 3452/32 iii. 3481/38

05. பிற்பகல் 2.30 இற்குத் தனது வீட்டிலிருந்து புறப்பட்ட கமல் பிற்பகல் 3.05 இற்கு நூலகத்தை சென்றடைந்தான். அவன் நூலகத்திற்கு செல்வதற்கு செலவழித்த காலம் யாது?
i. 40 நிமிடங்கள் ii. 35 நிமிடங்கள் iii. 20 நிமிடங்கள்

06. டெங்கு நோயின் காரணமாக கார்த்திகை 4ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் புதன்கிழமை 20ஆம் திகதி வரை அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களும் மூடப்பட்டன. அந்நிறுவனங்கள் மூடப்பட்ட நாட்களின் எண்ணிக்கை யாது?
i. 15 நாட்கள் ii. 17 நாட்கள் iii. 16 நாட்கள்

07. மாலா காலையில் பாடசாலைக்கு வடக்கு நோக்கிச் செல்லும் போது அவளுக்கு எதிராக பேருந்து வேகமாகச் சென்றது. பேருந்து பயணித்த திசை,
i. வடக்கு ii. மேற்கு iii. தெற்கு

08.



இவ் உருவில் $\frac{2}{4}$ பகுதியை நிழற்றுவதற்காக நிறந்தீட்டப்பட்ட கட்டங்களுக்கு மேலதிகமாக இன்னும் எத்தனை கட்டங்களை நிறந்தீட்ட வேண்டும்?
i. 3
ii. 2
iii. 4

09. நேற்று முன்தினம் சனிக்கிழமை 05 ஆம் திகதி எனின், நாளை மறுநாள் என்ன கிழமை எத்தனையாம் திகதியாகும்?
i. திங்கட்கிழமை – 07ஆம் திகதி ii. புதன் கிழமை – 9ஆம் திகதி
iii. செவ்வாய்க்கிழமை – 09ஆம் திகதி

10.




11. எல்லா உருண்டையான பொருட்களும் உருண்டோடும். வேறு எவையும் உருண்டோட மாட்டாது எனின்,
i. சில உருண்டையான பொருட்கள் உருண்டோடும்.
ii. உருண்டை வடிவமில்லாத பொருட்களும் உருண்டோடும்.
iii. உருண்டோடும் பொருட்கள் எல்லாம் உருண்டை ஆனவை.

12. நான்கு இலக்கங்களைக் கொண்ட ஓர் எண் உள்ளது. அந்த எண்ணின் முதலாம் இலக்கம் நான்காம் இலக்கத்தின் மூன்று மடங்காகும் இரண்டாம் இலக்கம் மூன்றாம் இலக்கத்தின் நான்கு மடங்காகும்.

அவ்வெண் கீழே தரப்பட்டுள்ள எண்களில் யாதாக இருக்கலாம்?
i. 6 3 1 2 ii. 6 8 2 3 iii. 6 4 1 2

13.




கறுப்பு, வெள்ளை, நீலம், பச்சை, சிவப்பு எனும் ஐந்து நிறக் கீற்றுக்களைக் கொண்ட உரு மேலே தரப்பட்டுள்ளது.

- கறுப்பு நிறக் கீற்றுக்கு முன்னால் பச்சை நிறம் உண்டு.
- நடுவில் உள்ள நிறக்கீற்று கறுப்பு ஆகும்.
- வெள்ளை நிறக் கீற்றும் சிவப்பு நிறக்கீற்றும் அடுத்தடுத்து உள்ளன. எனின்,

இதற்கேற்ப 1, 3 ஆகிய கீற்றுகளுக்கு இருக்கக் கூடிய நிறங்கள் முறையே
i. வெள்ளை, கறுப்பு ii. நீலம், கறுப்பு iii. நீலம், சிவப்பு

14.




இவ்விரு நாடாக்களை மாத்திரம் பயன்படுத்தி 2m நீளமுள்ள நாடா ஒன்றை சரியாக அளக்க முடியுமா?
i. முடியும் ii. முடியாது
iii. விடை அளிக்க மேலும் தகவல் தேவை

15. 3, 6 எனும் இரு எண்களாலும் மீதியின்றி வகுக்கக்கூடிய 5 இற்கும் 25 இற்கும் இடையே உள்ள எண்களின் எண்ணிக்கை
i. 3 ii. 4 iii. 5

16. 7070, 7000, 7777, 7707, 7007 எனும் எண்களை ஒழுங்குபடுத்தும் போது நடுவில் வரும் எண்,
i. 7070 ii. 7707 iii. 7777

17. விழாவொன்றில் சிவப்பு, பச்சை, மஞ்சள், நீலம் ஆகிய கொடிகள் நடப்பட்டிருந்தன. அவற்றில் 43ஆவது கொடி முறிந்து விட்டதெனில் முறிந்த கொடியின் நிறம் யாது?
i. சிவப்பு ii. நீலம் iii. மஞ்சள்

18. ஒரு வயற்கரையில் கொக்குகளும் மான்களும் மேய்ந்து கொண்டிருந்தன. அவற்றின் கால்களின் எண்ணிக்கை 400, தலைகளின் எண்ணிக்கை 150 எனின், வயலில் மேய்ந்து கொண்டிருந்த கொக்கு, மான்களின் எண்ணிக்கை முறையே,
i. 100, 50 ii. 75, 75 iii. 50, 100

19. விழாவொன்றில் அலங்காரத்திற்காக வட்டவடிவில் 20 சாடிகள் அடுக்கப்பட்டன. ஒவ்வொரு சாடிக்கிடையிலும் 4m இடைவெளி விடப்பட்டதெனில் சாடிகள் அடுக்கப்பட்ட வட்டத்தின் சுற்றளவு யாது?
i. 876m ii. 80m iii. 19m

20. மைதானமொன்றில் 25 தூண்கள் ஒரு வரிசையில் நடப்பட்டு அவற்றில் கொடிகள் கட்டப்பட்டன. எனவே கட்டப்பட்ட கொடிகளின் எண்ணிக்கை யாது?
i. 24 ii. 25 iii. 23

21. வியாபாரி ஒருவர் 2kg தேயிலை வாங்கி அவர் 200g பைக்கற்றுக்களில் அடைத்தார். அவர் பொதி செய்த பைக்கற்றுக்களில் எண்ணிக்கை,
i. 5 ii. 10 iii. 8

22. இரண்டு எண்களை கூட்டும்போது வரும் விடை 18. அவ்விரு எண்களையும் கழிக்கும் போது வரும் விடை 2 எனின், அவ்விரு எண்களும் எவை?
i. 9, 9 ii. 11, 7 iii. 10, 8

23. கமல் எனக்கு ரூபாய் 170.00 ஐ தந்தபோது என்னிடம் உள்ள பணம் ரூபாய் 300.00 ஆகும். எனவே என்னிடம் ஆரம்பத்தில் உள்ள பணத்தொகை,
i. ரூபாய் 150.00 ii. ரூபாய் 140.00 iii. ரூபாய் 130.00

24. கடிகாரத்தில் நேரம் 4.00 எனின், மணித்தியால முள்ளுக்கும் நிமிட முள்ளுக்கும் இடையேயான கோணம்
i. செங்கோணம் ii. செங்கோணத்தை விடச் சிறியது
iii. செங்கோணத்தை விடப் பெரியது

25. கீழே தாயக்கட்டைகளின் எதிரெதிர்ப்பக்கங்கள் காட்டப்பட்டுள்ளன. அவற்றில் சரியாகப் புள்ளியிடப்பட்ட தாயக்கட்டையின் கீழ்க் கோடிடுக.




26. 2735, 6071, 2879, 5461 பின்வரும் எண்களில் எவ் எண்ணை பின்னாலிருந்து முன்னோக்கிப் பார்க்கும் போது மிகப் பெரிய எண் தோன்றும்
i. 6071 ii. 2879 iii. 5461

27. கீதாவின் தற்போதைய வயது 12 ஆகும். அவளின் தந்தையின் வயது 60 ஆகும். எனின், இன்னும் எத்தனை ஆண்டுகளில் கீதாவின் வயதின் நான்கு மடங்காக தந்தையின் வயது இருக்கும்?
i. 2 ஆண்டுகளில் ii. 3 ஆண்டுகளில் iii. 4 ஆண்டுகளில்

28. இவ்வுருவிலுள்ள கனவுருக்களின் எண்ணிக்கை யாது?



i. 26
ii. 30
iii. 28

29. பின்வரும் வடிவங்களுள் செங்கோணம் அல்லாத உருவைத் தெரிவு செய்க.




30.




அடுத்து வரும் கோல அமைப்பு,




(06ஆம் பக்கம் பார்க்க)

(05 ஆம் பக்கத் தொடர்)

# புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - I

1 மணித்தியாலம்

31. சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட வாக்கியத்தைத் தெரிவு செய்க?
i. தம்பி சவற்காரம் வேண்டி வந்தான்.
ii. தம்பி சவர்காரம் வாங்கி வந்தான்.
iii. தம்பி சவுக்காரம் வாங்கி வந்தான்.

32. தரப்பட்ட இலைகளில் சைவ உணவு உண்ணும் பாத்திரமாகவும், நீரை விடும் போது முத்துப் போன்று காட்சியளிக்கும் தன்மையும், வட்ட வடிவமான அமைப்பைக் கொண்டதுமான தொடர்புடையது
i. வல்லாரை ii. வாழை இலை iii. தாமரை

33. 
இவ்வுருவில் காணப்படும் சதுரங்களின் எண்ணிக்கை யாது?
i. 16
ii. 30
iii. 25

34. 
இங்கு காணப்படும் உருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை எத்தனை?
i. 4
ii. 6
iii. 7

35. இவ்வுருவிற்கு வரையக்கூடிய சமச்சீர் அச்சுக்களின் எண்ணிக்கை

i. 2
ii. 1
iii. 3

36. ஒருவரது தனிப்பட்ட எண்ணத்தை வெளிப்படுத்தும் கூற்றைத் தெரிக.
i. உடற்பயிற்சி உடலுக்கு ஆரோக்கியம் தரும்.
ii. சுத்தம் சுகம் தரும்
iii. நீல நிறச் சட்டை மிகமிக அழகைத் தரும்.

37. ரூபினியை விட 6 நாட்கள் முன்னதாக கமலினி பிறந்தாள். ரூபினி பிறந்தது 2009ஆம் ஆண்டு மாசி 3ஆம் திகதி எனின், கமலினி பிறந்தது
i. 2009 மாசி 9 ii. 2009 தை 27 iii. 2009 தை 28

- **வரைபடத்தை அவதானித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**




38. வீட்டில் இருந்து பொலிஸ் நிலையத்துக்கான தூரம்?
i. 300 மீற்றர் ii. 200 மீற்றர் iii. 150 மீற்றர்

39. சந்தைக்கு அண்மையில் அமைந்துள்ளது,
i. வீடு ii. பாடசாலை iii. பொலிஸ் நிலையம்

40. பொலிஸ் நிலையத்திலிருந்து சந்தைக்கான குறுகிய பாதை எது?
i. வீட்டுப்பாதை ii. பாடசாலைப் பாதை iii. இரண்டும் சமசரி

# கடந்த வார (19.07.2024) வினாத்தாள்- II இற்கான விடைகள்

**I.**
01. அதிசயம்
02. செம்பொற் குடம் போலே
03. நிலவைப்பற்றி
04. சின்னஞ்சிறு
05. i. கண்டது + அம்மா ii. செம்மை + பொன் iii. பொன் + குடம்
06. அம்மா
07. பறந்தன
08. சூரியன் மறையும் போது மேற்கு வானில் பார்க்கலாம்
09. i. சரி ii. பிழை iii. சரி iv. சரி

**II.**
10. i. எவ்வளவு பெரிய மலை!
ii. பாலிலிருந்து தயில், மோர், வெண்ணெய், நெய் முதலியவற்றைப் பெறுகின்றோம்.
11. i. குட்டி ii. தோட்டம் iii. கச்சல்
12. ஊதாரி
13. சுயநலவாதி
14. களஞ்சியம்
15. சந்தர்ப்பத்தை தவற விடாதே
16. i. சகபாடி ii. வேட்பாளர்
17. i. அங்கும் இங்கும் ii. நோய் நொடி
18. i. அவன் தமிழ் பாடத்தை படித்தான்
ii. நீங்கள் பாடம் படித்தீர்களா?
19. i. கத்தரிக்காய் ii. புத்தகம்
20. i. சூரியகாந்தி ii. மின்னல் iii. Happy new year iv. Stop

**III.**
21. i. 5 ii. 10ஆம் திகதி ஞாயிறு
22. ஐயாயிரத்து நானூற்று இருபத்தொன்று
23. i. ரூபாய் 115.00 ii. ரூபாய் 500.00
24. i. நான்முகி ii. முக்கோணம் iii. நான்கு iv. ஆறு v. நான்கு
25. i. 69091 ii. 30750
26. VII VIII IX
27. 174
28. 56

29.
```
  2   1   5   2
 [1]  1  [0]  3
  3  [9]  2  [4]
 --------------
  7   1   7   9
```

| | | |
|---|---|---|
| **IV.** | 39. 3 | 49. 3 |
| 30. 2 | 40. 1 | 50. 1 |
| 31. 3 | 41. 3 | 51. 1 |
| 32. 1 | 42. 2 | 52. 1 |
| 33. 2 | 43. 3 | 53. 3 |
| 34. 3 | 44. 3 | 54. 1 |
| 35. 1 | 45. 3 | 55. 2 |
| 36. 2 | 46. 1 | 56. 3 |
| 37. 2 | 47. 3 | 57. 3 |
| 38. 3 | 48. 1 | 58. 1 |
| | | 59. 1 |

# மாத்தளையில் ஹொக்கி சுற்றுப்போட்டி ஆரம்பம்

**மாத்தளை சுழற்சி, அக்குறணை குறூப் நிருபர்கள்**



ஸ்ரீலங்கா பாடசாலை ஹொக்கி சம்மேளனத்தின் ஏற்பாட்டில் மாவட்ட மட்ட பாடசாலைகளுக்கிடையே 20 வயதுக்கு கீழ்பட்ட ஆண், பெண் இருபாலருக்கான ஹொக்கி சுற்றுப்போட்டி மாத்தளை பேன்ட் அலுவிஹாரை விளையாட்டு அரங்கில் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

இதன் ஆரம்ப நிகழ்வில் பிரதம அதிதியாக விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் இராஜாங்க அமைச்சர் றோஹண திஸாநாயக்க கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய இராஜாங்க அமைச்சர், அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள மாத்தளை நந்தமித்ர ஹொக்கி விளையாட்டுத்திடல் அடுத்த மாதம் திறந்து வைக்கப்படவுள்ளதாக தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"ஹொக்கி விளையாட்டின் தாய்மடியெனக் கூறப்படும் மாத்தளையில் ஹொக்கி விளையாட்டை அபிவிருத்தி செய்ய தன்னாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளவுள்ளதாகவும், இது தனக்கு அளிக்கப்பட்டுள்ள கடமைகளில் ஒன்றாகும்.

இலங்கையில் பிரபல ஹொக்கி வீரர்கள் பலரை உருவாக்கியது மட்டுமல்லாது, இலங்கை தேசிய ஹொக்கி அணிக்கு அதிகளவான ஹொக்கி வீரர்களை வழங்கிய மண்ணாக மாத்தளை உள்ளது.

மாத்தளை நந்தமித்ர ஹொக்கி விளையாட்டுத்திடல் நவீன மயப்படுத்தப்பட்டு, அதன் பணிகள் பூரணமடையும் நிலையிலுள்ளது. பேர்னாட் அலுவிஹாரை மைதானத்தின் அபிவிருத்திப்பணி பூரணமடைந்துள்ளது. அதேபோல் மாத்தளை மாவட்டத்தில் பாடசாலை ஹொக்கி மற்றும் உதைபந்தாட்டப் போட்டிகள் வருடா வருடம் ஒழுங்காக இடம்பெற்று வருகின்றன" என்றார்.



ஹப்புத்தளை தம்பேதென்ன இல. 01 இல் அமைந்துள்ள தமிழ் வித்தியாலயத்துக்கு அண்மையில் 15 இலட்சம் ரூபா பெறுமதியான டெப் கணினிகளை கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் வழங்கி வைத்தபோது எடுக்கப்பட்ட படம்.

# இலவச செயலமர்வு

**தலவாக்கலை குறூப் நிருபர்**

தோட்டப்புற தமிழ் பாடசாலைகளுக்கு நியமனம் பெறவுள்ள ஆசிரிய உதவியாளர்களுக்கு போட்டிப் பரீட்சைக்கான விசேட இலவச செயலமர்வு புளத்சிங்கள மில்லகந்த தமிழ் மகா வித்தியாலயத்தில் இம்மாதம் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. அன்றையதினம் காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை இச்செயலமர்வு நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் நுவரெலியா கல்வி வலயத்தின் பிரதி கல்விப் பணிப்பாளர் எம்.கணேஸ்ராஜ் விரிவுரை நடத்தவுள்ளார். மட்டுப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமே இட வசதி காணப்படுவதால், முன்பதிவு செய்துகொள்பவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் சந்தர்ப்பம் வழங்கப்படும் என ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது.

# உமாஓயா முதல் பெலவத்தைவரை தேசிய நீர்ப்பாசன திட்டம் ஆரம்பிப்பு

## ஆண்டுக்கு 6,000 மெற்றிக்தொன் சீனி உற்பத்திக்கு எதிர்பார்ப்பு

**ஊவா சுழற்சி நிருபர்**

உமாஓயாவிலிருந்து பெலவத்தை வரை தேசிய நீர்ப்பாசன திட்டம் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதுடன், இந்த திட்டத்தின் மூலம் ஆண்டுக்கு 6,000 மெற்றிக் தொன் சீனி மற்றும் 877,500 லீற்றர் எதனோல் உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

உமாஓயாவிலிருந்து பெலவத்தைவரையான தேசிய நீர்ப்பாசன திட்டம் புத்தல பெலவத்தை பத்து குடியிருப்பு பகுதியிலுள்ள அக்கரே தெகே குளத்துக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிலையில் உமாஓயா திட்டத்தின் மூலம் திறந்து விடப்படும் நீரின் ஒருபகுதி கால்வாய் மூலம் கொண்டு செல்லப்பட்டு அக்கரே தெகே குளத்துக்கு விநியோகிக்கப்பட்டது.

இதனால் புத்தல குடியேற்றத்தின் எட்டு கிராமங்களிலுள்ள ஆயிரம் விவசாயக் குடும்பங்கள் பயனடையவுள்ளதுடன், 5,000 ஏக்கர் நிலப் பரப்பில் கரும்பு பயிரிட்டு ஆண்டுக்கு 6,000 மெற்றிக்தொன் சீனி மற்றும் 877,500 லீற்றர் எதனோல் உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு கிடைக்கும் மேலதிக வருமானம் 6 இலட்சம் ரூபாவாக அதிகரிக்குமெனவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, நீர்ப்பாசனம் மற்றும் நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ ஆகியோரின் தலைமையில் இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் புஷ்பகுமார, பெலவத்தை சீனி நிறுவன அதிகாரிகள், கரும்பு செய்கையாளர்கள், பிரதேசவாசிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# முதியோர்களுக்கு இலவச மூக்குக்கண்ணாடி வழங்கல்

**மஸ்கெலியா நிருபர்**



பாடசாலை மாணவர்கள் மற்றும் முதியோர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடி வழங்கும் நடவடிக்கை கொத்மலையில் நடைபெற்றது. நலிவுற்ற சமூகத்தை மேம்படுத்தும் அரச சார்பற்ற அமைப்பின் மூலம் இந்த உதவி வழங்கப்பட்டது.

இதன்போது நலிவுற்ற சமூகத்தை மேம்படுத்தும் அமைப்பின் (EVS) தலைவர் சிவராஜன்ஸ்ரீ தலைமையில் கொத்மலை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கொத்மலை ஹந்துனுவேவ மத்திய கல்லூரியில் இலவசமாக கண் சிகிச்சை முகாம் நேற்று முன்தினம் புதன்கிழமை நடத்தப்பட்டது. இந்நிலையில் கண் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு மூக்குக் கண்ணாடி தேவையானவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இதில் சுமார் 40 பாடசாலை மாணவ, மாணவிகள் மற்றும் பெற்றோர், முதியோர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

# மாணவர்களுக்கு சேமிப்பு உண்டியல்



**லுணுகல நிருபர்**

பசறை கோணக்கலை தமிழ் ஆரம்ப வித்தியாலய தரம் நான்கு மாணவர்களுக்கு ஒருதொகுதி மாதிரி பரீட்சை வினாத்தாள்களும், சேமிப்பு உண்டியல்களும் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன. சம்பத் வங்கியினது பசறை கிளையின் அனுசரணையுடன் மாணவர்களுக்கு இவை வழங்கி வைக்கப்பட்டன. இதன்போது பசறை சம்பத் வங்கி கிளையின் உதவி முகாமையாளர் எரங்க ஜெயவிக்ரம, பாடசாலை பிரதி அதிபர் சதாசிவம் தனேஸ், வகுப்பு ஆசிரியர் நடராஜா மலர்வேந்தன், மாணவர்கள் ஆகியோர் பங்குபற்றினர்.

# காந்திநகர் கிராமத்தில் 70 ஆண்டு கால காணிப் பிரச்சினைக்கு தீர்வுகாண முயற்சி





**(அன்புவழிபுரம் தினகரன் நிருபர்)**

திருகோணமலை மாவட்டத்தில் பட்டணமும் சூழலும் பிரதேச செயலக பிரிவிலுள்ள காந்திநகர் கிராமத்தில் கடந்த 70 வருடங்களாக மக்கள் எதிர்நோக்கும் காணிப் பிரச்சினைக்கு கிழக்கு ஆளுநர் தீர்வை பெற்றுக் கொடுத்துள்ளார்.

அதற்கமைய அவர்களுக்கான குடியிருப்புக் காணிகளுக்கான காணி ஆவணங்களை வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் வழங்கி வைக்கப்பட்டது.

திருகோணமலை நகரசபையின் கட்டுப்பாட்டில் இருந்த இக்காணியை மத்திய அரசாங்க காணித் திணைக்களத்திற்கு கையகப்படுத்தியது. இதனையடுத்து இக்காணிகளில் 70 வருடங்களுக்கு மேலாக முறையான காணி ஆவணங்கள் இல்லாமல் வசித்துவரும் மக்களுக்கு முறையான காணி ஆவணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

220 பேர் இக் காணிகளுக்காக விண்ணப்பித்திருந்த போதும் முதற் கட்டமாக 157 பேருக்கு காணி ஆவணம் வழங்கப்படவுள்ளதாக பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் மதிவாணன், முன்னாள் பிரதேச செயலாளர் தனேஸ்வரன், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் பாஸ்கரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடும் வரட்சி

# குளங்கள், ஏரிகள், குட்டைகள் முற்றாக வற்றும் அபாயம்: மீன்பிடி, விவசாய நடவடிக்கைகள் பாதிப்பு





**(மட்டக்களப்பு குறூப் நிருபர்)**

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக நிலவி வரும் கடும் வரட்சி காரணமாக குளங்கள், ஏரிகள், குட்டைகள் என்பன முற்றாக வற்றி வருகின்றன. இதனால் மீனவர்களும் விவசாயிகளும் பெரும் இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றனர். பெரும்பாலான பகுதிகளில் அதிகமான வரட்சியான காலநிலை காணப்படுவதால் விவசாய நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. விவசாயிகள் தமது வயல் நிலங்களில் வரட்சி ஏற்பட்டுள்ளமையால் பெரும் அவலங்களை சந்தித்து வருகின்றனர்.

மாவட்டத்தில் என்றுமில்லாதவாறு இம்முறை அதிகமான வரட்சியான காலநிலை காணப்படுகிறது. இதனால் கடும் உஷ்ணமான காலநிலை நிலவுகின்றது.

குழந்தைகளும், முதியோர்களும் வெளியே வர முடியாது பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

பல்வேறு நோய்களுக்கும் முகம் கொடுக்க வேண்டியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. அதிக வெப்பம் காரணமாக மக்கள் வெளியில் வராமல வீதிகள் வெறிச்சோடிக் காணப்படுகின்றது .

குளங்கள் வற்றி வருவதால் மீனவர்களும் விவசாயிகளும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

# கந்தளாய் பாடசாலை மாணவர்கள் வீதியை மறித்து ஆர்ப்பாட்டம்



**(கந்தளாய் தினகரன் நிருபர்)**

திருகோணமலை மாவட்டம் கந்தளாய் கல்வி வலயத்துக்குட்பட்ட கந்தலாவ மகா வித்தியாலயத்திற்கு ஆசிரியர்களை பெற்றுத்தருமாறு கோரி மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் இணைந்து கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை நேற்று முன்னெடுத்தனர்.

கந்தலாவ மகா வித்தியாலயத்திற்கு 54 ஆசிரியர்கள் தேவைப்படும் நிலையில் தற்போது 34 ஆசிரியர்கள் மட்டுமே இருப்பதால் அத்தியாவசிய பாடங்களுக்கு தேவையான ஆசிரியர்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமாறு கோரி கண்டி பிரதான வீதியை மறித்து ஆர்ப்பாட்டமொன்றை மாணவர்கள் மற்றும் பெற்றோர்களும் இணைந்து முன்னெடுத்துள்ளனர்.

சம்பவ இடத்துக்கு வந்த பதில் வலயக் கல்விப் பணிப்பாளர் காமினி பண்டாரவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுப்பட்டு இணக்கப்பாட்டுக்கு வந்தாக பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

# மூதூர் மத்திய கல்லூரியில் மின்ஒளியில் உதைபந்தாட்டம்

**உள்ளூர், வெளியூர் ரசிகர்கள் என பலர் கலந்துகொள்வார்கள்**

**(மூதூர் தினகரன் நிருபர்)**

மூதூர் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) யின் பழைய மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில் உதைபந்தாட்ட தொடர் இன்று (26) இரவு 7.00 மணிக்கு மூதூர் மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் வெகு விமரிசையாக நடைபெறவுள்ளது. மத்திய கல்லூரி பழைய மாணவர் அமைப்பின் 2024ஆம் ஆண்டுக்கான திட்டத்தின் கீழ் உதைபந்தாட்ட தொடர் நடாத்தப்படுகின்றன.

உள்ளூர், வெளியூர் ரசிகர்கள் என பல ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் கலந்துகொள்ளும் வகையில் இந்நிகழ்வு நடைபெறும். உதைப்பாந்தட தொடர் மின்னொளியின் நடாத்தப்படவுள்ளன.

# சாய்ந்தமருது பொலிவேரியன் சுனாமி குடியேற்ற திட்ட கிராமத்தில் புதிய சந்தை வசதி

**(மாளிகைக்காடு குறூப் நிருபர்)**



சாய்ந்தமருது பொலிவேரியன் சுனாமி குடியேற்ற திட்டத்தில் சாய்ந்தமருது பிரதேச செயலாளரின் அனுமதியுடன் கிராம அபிவிருத்தி அமைப்பின் முயற்சியில் பொலிவேரியன் மக்கள் சந்தை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குடியேற்ற திட்ட கிராமமக்கள் தமது அன்றாட தேவைகளுக்கான பொருட்கள், மரக்கறிகள்,இறைச்சி மற்றும் மீன் வகைகளைப் பெறுவதற்காக தூர இடங்களுக்கு செல்லும் நிலை காணப்பட்டது.

இதுதொடர்பில் கிராம அபிவிருத்தி சபையிடம் முறையிட்டதை தொடர்ந்து பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக்கின் அனுமதியுடன் பொலிவேரியன் சந்தை நேற்று (25) ஆரம்பித்து வைக்கப்பட்டது.



அக்கரைப்பற்று கண்ணகி கிராமத்தில் இயங்கி வரும் மாதர் சங்க பாலர் பாடசாலைக்கு தேவையான பெயர் பலகையையும் இரண்டு ஆசிரியர்களுக்கான கொடுப்பனவும் மாணவர்களுக்கு தேவையான கற்றல் உபகரணங்களையும் இணைந்த கரங்கள் அமைப்பு வழங்கி வைத்துள்ளது.

(படம்: காரைதீவு குறூப் நிருபர்)

# கல்முனை கடற்கரையில் துப்பாக்கி கண்டெடுப்பு

**(பெரியநீலாவணை விசேட நிருபர்)**

கல்முனை கடற்கரையில் பிளாஸ்டிக் குழாய் ஒன்றில் கிறீஸ் திரவம் இட்டுப் புதைத்து வைக்கப்பட்டிருந்த ரிவோல்வர் ரக துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டு கல்முனை தலைமையக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாமாங்க பிள்ளையார் ஆலயத்தை அண்டிய கடற்கரை பகுதியில் கடலரிப்பினால் வெளியாகியுள்ள நிலையில் அங்கு விளையாட்டில் ஈடுபட்டவர்களால் அடையாளம் காணப்பட்ட துப்பாக்கி மீட்டெடுக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. குறித்த துப்பாக்கி 2 தோட்டாக்களுடன் (ரிவோல்வர்) இயங்கு நிலையில் காணப்படுவதுடன் ஜெர்மனி நாட்டு தயாரிப்பில் உற்பத்தி செய்யப்பட்டிருப்பதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

மேலும் மீட்கப்பட்ட துப்பாக்கி தொடர்பில் எந்தவொரு சந்தேகநபர்களும் கைது செய்யப்படவில்லை என்பதுடன் மேலதிக விசாரணைகளை கல்முனை தலைமையக பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம்**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை**

## விலைக்கோரலுக்கான அழைப்பு

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தப் பெயர் |
|---|---|
| RDA/PD(N)/CE (Mul)/EE (Mul)/ RMTF/2024/02 | முல்லைத்தீவு நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவு - வீதி அடையாளமிடும் தேர்மோ பிளாஸ்டிக் பொருட்களை வழங்குதல் மற்றும் இடும் வேலைகள் |

மேற்கூறப்பட்ட வேலைகளுக்காக தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024 ஜூலை 26ஆம் திகதி முதல் 2024 ஆகஸ்ட் 08ஆம் திகதி வரையில் வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் www.rda.gov.lk மற்றும் www.mohsl.gov.lk எனும் இணையதளப் பக்கத்தைப் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பிரதான பொறியியலாளர் அலுவலகம்,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை,**
**முல்லைத்தீவு.**

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**

## ரூ.200,000 மில்லியன் திறைசேரி முறிகளை வழங்கல்

10.75%2028 'B' தொடர்களின் கீழ் ரூ.80,000 மில்லியனையும் 11.00%2030 'B' தொடர்களின் கீழ் ரூ.80,000 மில்லியனையும் 09.00%2033 'A' தொடர்களின் கீழ் ரூ.40,000 மில்லியனையும் கொண்ட திறைசேரி முறிகள் 2024 யூலை 30 ஆம் திகதி இடம்பெறும் ஏலங்களின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

**இத்திறைசேரி முறிகளின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.**

| தொடர்கள் | 10.75%2028'B' | 11.00%2030 'B' | 09.00%2033 'A' |
|---|---|---|---|
| ISIN* | LKB00428B156 | LKB00730J158 | LKB02033F013 |
| முன்வைக்கப்பட்ட தொகை | ரூ. 80,000 மில்லியன் | ரூ. 80,000 மில்லியன் | ரூ. 40,000 மில்லியன் |
| நறுக்கு வீதம் | 10.75% ஆண்டொன்றிற்கு | 11.00% ஆண்டொன்றிற்கு | 09.00% ஆண்டொன்றிற்கு |
| வழங்கப்பட்ட திகதி | 2024 பெப்ரவரி 15 | 2023 ஒக்டோபர் 15 | 2013 யூன் 01 |
| முதிர்வுத்திகதி | 2028 பெப்ரவரி 15 | 2030 ஒக்டோபர் 15 | 2033 யூன் 01 |
| நறுக்குக் கொடுப்பனவுகள் செலுத்தப்படும் திகதிகள் | 15 பெப்ரவரி & 15 ஓகஸ்ட் | 15 ஏப்ரல் & 15 ஒக்டோபர் | 01 யூன் & 01 டிசம்பர் |
| ஒன்று சேர்ந்த வட்டி வீதம் | ரூ. 100.00 இற்கு ரூ. 4.9615 | ரூ. 100.00 இற்கு ரூ. 3.2459 | ரூ.100 இற்கு ரூ. 1.5000 |
| ஏலவிற்பனைத் திகதி | 2024 யூலை 30, செவ்வாய்க்கிழமை | | |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | 2024 யூலை 30, செவ்வாய்க்கிழமை, மு.ப.11.00 மணி | | |
| தீர்ப்பனவுத் திகதி | 2024 ஓகஸ்ட் 01 | | |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக் குறைந்த தொகை | ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ. 5,000,000/-) அத்துடன் ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ. 1,000,000/-) பெருக்கங்களிலிருந்து | | |

முதனிலை வணிகர்களிடமிருந்து உண்மையான விலைகளின் (நறுக்குக் கொடுப்பனவுத் திகதியிலிருந்து தீர்ப்பனவு செய்யும் நாள் வரையான ஒன்றுசேர்ந்த வட்டி நீங்கலாக) அடிப்படையில் விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. விலைக்குறிப்பீடுகள் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கின்ற வசதியினூடாக மாத்திரமே மேற்கொள்ளப்படல் வேண்டும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொதுமக்கள் அல்லது எவரேனும் வேறு முதலீட்டாளர்) மேலே குறிப்பிட்டவாறு விலைக்குறிப்பீடொன்றின் குறைந்தபட்ச தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக்குறிப்பீடுகளை சமர்ப்பிக்கலாம்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்து எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திசைறேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்யுமாறு பொது மக்கள் அழைக்கப்படுகின்றனர்**

| | | | |
|---|---|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடெட் | 2206297 | என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடெட் | 2425010 |
| இலங்கை வங்கி | 2541938 | மக்கள் வங்கி | 2206783 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடெட் | 2317777 | சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 | செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 | வெல்த்ரஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடெட் | 2675096 |

ஒவ்வொரு தொடர்/ISIN தொடர்பிலும், சந்தை நிலைமைகளுக்கமைய முன்வைக்கப்பட்ட தொகையினை விஞ்சாத ஏதேனும் தொகையினை இலங்கை மத்திய வங்கி ஏற்றுக் கொள்ளலாம். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம் பெற்ற வங்கியிடமிருந்தும் திறைசேரி முறிகளைக் கொண்வனவு செய்யலாம்.

* பன்னாட்டு பிணையங்கள் அடையாள இலக்கம்

**என். டி. வை. சி. வீரசிங்க**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

**வழங்கும் அலுவலகம்,**
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு -1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம் : www.cbsl.gov.lk**

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
புதன் 2024.07.24
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5544 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 43,053,176.00
ஆங்கில எழுத்து M — வெற்றி இலக்கங்கள் 9 5 2 8 7 8

அத சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 119 — ஆங்கில எழுத்து M — வெற்றி இலக்கங்கள் 2 8 7 8

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3786 — சீட்டிழுப்பு திகதி 2024.07.24 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.67,234,277.52
ஆங்கில எழுத்து U — வெற்றி இலக்கங்கள் 11 12 44 80 — விசேட எழுத்து U — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 50881

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1892 — 2024.07.24 — 56262 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 439,884,082.00
ஆங்கில எழுத்து G — சுப்பர் இலக்கம் 23 — வெற்றி இலக்கங்கள் 21 33 71 79
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

VIP — திகதி 2024.07.24 — சீட்டிழுப்பு இலக்கம் 0370
ஆங்கில எழுத்து W — வெற்றி இலக்கங்கள் 3 0 2 1 0 6
L7 எழுத்து W — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.. 33,413,176.88

ராசி சுப பலன் — திகதி 2024.07.24 — சீட்டிழுப்பு இலக்கம் 853 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,443,378.80
வெற்றி இலக்கினம் மீனம் — வெற்றி இலக்கங்கள் 12 48 56 60 — தனயோக இலக்கம் 63430 — நாளுக்கான விதி எண் 30

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1574 — 2024.07.24 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 102,607,999.52
ஆங்கில எழுத்து P — வெற்றி இலக்கங்கள் 09 18 20 61 — விசேட எழுத்து P — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 51702

**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு**

## பெறுகை அறிவித்தல்

### உணவகத்தை நடத்திச் செல்வதற்கு சேவை வழங்குநர் ஒருவரின் பெறுகைக்கான கேள்வி கோரல்

2024.04.26ம் திகதி தினகரன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 'உணவகத்தை நடத்திச் செல்வதற்கு சேவை வழங்குநர் ஒருவரின் பெறுகைக்காக கேள்வி கோரல்' அறிவித்தலுடன் சம்பந்தப்பட்டது.

மேற்படி பெறுகையின் கேள்விகள் சமர்ப்பிக்கும் மற்றும் கேள்வி திறக்கும் திகதி 2024.08.02ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், பொறியிடப்பட்ட கேள்விகள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'சுய சேவை உணவகத்திற்கான சேவை வழங்குநரை பெற்றுக் கொள்வதற்கான பெறுகை' என்று குறிப்பிட்டு 2024.08.02 பி.ப. 3.00 இற்கு அல்லது அதற்கு முன்பு கிடைக்குமாறு கொழும்பு -07, வோர்ட் பிளேஸ், இல. 20 இல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின், திணைக்கள, பெறுகைக் குழுவின் தலைவருக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கொழும்பு 07, வோர்ட் பிளேஸ், இல. 20 இல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சிரேஷ்ட பெறுகைக் குழுவின் தலைவருக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது கொழும்பு 07, வோர்ட் பிளேஸ், இல. 20 இல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சிரேஷ்ட உதவிச் செயலாளர்/பொது நிர்வாக அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

கேள்விகளை தயாரிக்கும்போது அல்லது சமர்ப்பிக்கும்போது கேள்விதாரர்களுக்கு ஏற்படுகின்ற/ ஏற்படும் எந்தவிதமான செலவுகள் அல்லது ஆகுசெலவுகள் பற்றி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் எந்தப் பொறுப்பும் மேற்கொள்ளப்பட மாட்டாது.

மேலதிக தகவல்களுக்கு தொ.பே. இல. 011-2685183 மூலம் சிரேஷ்ட உதவிச் செயலாளர்/ பொது நிர்வாகத்தை தொடர்பு கொள்ளலாம்.

**தலைவர்/நிறுவன பெறுகைக் குழு.**
**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு,**
**இல. 20, வோர்ட் பிளேஸ்,**
**கொழும்பு -07.**

2024.07.26

# கொழும்பு துறைமுக அதிவேக நெடுஞ்சாலை முனைகள் திறப்பு



கொழும்பு துறைமுக நுழைவு அதிவேக நெடுஞ்சாலைத் திட்டத்தின் துறைமுக நகரம் மற்றும் இங்குருகொட சந்தியின் இரண்டு முனைகளையும் இணைக்கும் நிர்மாணப் பணிகள் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத் துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு பேசிய அமைச்சர்,

"இது இலங்கையின் வரலாற்றின் போக்கை மாற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாள். துறைமுக நுழைவு நெடுஞ்சாலையானது, நாட்டின் முக்கிய பொருளாதார மையமான துறைமுகத்தின் ஊடாக செல்லும் இலங்கையின் மிக நீளமான மேம்பாலமாகும். 2018 முதல், இரண்டு முனைகளில் இருந்து கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, கட்டுமானப்பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் 300 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவியின் கீழ், சீன சிவில் கட்டுமானப் பொறியியல் நிறுவனம் இங்கு கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இத்திட்டம் நிறைவடைந்தவுடன், நாட்டின் தேசிய உற்பத்தி, வருமானம், வேலைவாய்ப்பு, விலை மட்டம், கொடுப்பனவு போன்றவை மேக்ரோ பொருளாதார மாறிகளில் தனித்துவமான தாக்கத்தை ஏற்படுத்தும்.

இந்தத் திட்டம் துறைமுக வளாகத்தையும் நாட்டின் அனைத்து நெடுஞ்சாலை அமைப்பையும் இணைக்கும் சாலையாக மாறும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்..

## ஓரினச் சேர்க்கை சட்டவாக்கத்தை மீள்பரிசீலனை செய்ய வேண்டும்

### சர்வ மத தலைவர்கள் கோரிக்கை



தேசிய ஒற்றுமைக்கான சர்வ மத கூட்டமைப்பினரின் ஏற்பாட்டில் பொரளையில் அமைந்துள்ள Bishop தலைமை காரியாலயத்தில் வணக்கத்துக்குரிய களனி வஜ்ர தேரரின் தலைமையில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது ஓரினச் சேர்க்கை சட்டவாக்கத்துக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது கார்டினல் ரஞ்சித் மல்கம் மற்றும் வணக்கத்துக்குரிய சோமரத்தின தேரர், வணக்கத்துக்குரிய ஜீனானந்த தேரர், கலாநிதி சிவ ஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா, கலாநிதி அல் செய்க் ஹசன் மௌலானா ஆகியோர் கலந்துகொண்டனர். சமூக சீரழிவுக்கு வழிவகுக்கும் ஒழுக்கக்கேடான ஓரினச் சேர்க்கை சட்டங்கள் நாகரிக சமூகத்தை அழிக்கின்றது. எனவே, ஜனாதிபதி இச் சட்டவாக்கத்தை அமுல்படுத்தக்கூடாது.

இதனை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் இவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## ஊடகங்களுக்கு என்ன...

இப்போது நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். இப்போது அதிகாரத்தில் உள்ளவர்கள் தோல்வியடையவுள்ளவர்களே. இவர்கள் தோல்வியடைந்தால் சில ஊடகங்களுக்கு என்ன நடக்கும். சில ஊடகங்களும் இவர்களுடையதுதான். அதிகாரத்தில் உள்ளவர்கள் தோல்வியடைந்த பின்னர், இந்த வெகுஜன ஊடகங்களில் சில, மக்கள் ஊடகமாக மாறும்.இதன்போது அவர்களில் சிலருக்கு என்ன நடக்கும் என்று எனக்குத் தெரியவில்லை. சில ஊடக நிறுவனங்கள் மூடப்பட்டுவிடுமா?அல்லது என்ன நடக்கும் என்று தெரியாது. சில ஊடகங்கள் மீண்டும் செயற்படுமா? என்பதும் எனக்குத் தெரியவில்லை. அந்தளவுக்கு உண்மைக்கு புறம்பான விடயங்களை இந்த ஊடகங்கள் கூறுகின்றன. ஊடகத்துறையில் இரண்டெழுத்து ஊடகம் ஒன்றும் உள்ளது. இதனை சேறு தொலைக்காட்சி என்றும் அழைக்கலாம். காலை முதல் மாலை வரை இந்த ஊடகததில் சேறுபூசும் சேவைகளே இடம்பெறுவதாகவும் லால் காந்த கூறினார்.

## அரச ஓய்வூதியதாரர்களுக்கு...

அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். இதன்படி, சம்பள முரண்பாடுகள் நிவர்த்தி செய்யப்படும் வரை எதிர்வரும் செப்டம்பர் மாதம் முதல் இந்த விசேட மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இக் கொடுப்பனவு மூலம் 07 இலட்சம் ஓய்வூதியதாரர்கள் பலன் பெறுவார்களெனவும் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டுள்ளார்.

## ஜனாதிபதித் தேர்தலில்...

நாட்டை படுகுழியிலிருந்து மீட்டெடுத்து, பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தி மக்களுக்கு நிவாரணம் வழங்குவதே தனது நோக்கமென அவர் சுட்டிக்காட்டினார். இலங்கை அரசினதும், இலங்கை மக்களினதும் வெற்றிக்காகவே, தாம் போட்டியிடுவதாகவும் அமைச்சர் விஜேயதாச ராஜபக்ச தெரிவித்தார்.

ஒரு நாட்டின் ஆட்சியாளர் தனது மக்களைப் பிள்ளைகளைப் போல் கவனித்துக் கொள்ள வேண்டும்.

இந்த உன்னதப் பொன்மொழிக்கு மதிப்பளித்து, அதை நனவாக்கும் எனது முயற்சிக்கு உங்களின் முழு நல்லாசியும் கிடைக்கும் என்று நம்புவதாகவும் அவர் கூறினார்.

## தவறியேனும் சஜிதுக்கு அதிகாரம்...

பாராளுமன்றத்தில் நேற்று (25) நடைபெற்ற பொருளாதார மாற்றச் சட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அமைச்சர் மேலும் கூறியதாவது:

வீழ்ச்சியடைந்த நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேச நாணய நிதியத்துடன் விரிவான கடன் ஒப்பந்தமொன்றை மேற்கொண்டார். சர்வதேச உடன்படிக்கைகளின் சட்டத்தின்படி, 2027 ஆம் ஆண்டு வரை ஒப்பந்தத்தின் பிரகாரம் செயற்படுவதற்கு இலங்கை அரசும் மற்றும் நிதி அமைச்சும் இணக்கம் தெரிவித்துள்ளன.

2025 வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும் போது, நாணய நிதியத்துடன் செய்து கொ ள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி, மதிப்பிடப்பட்ட வெளிநாட்டு வள இடைவெளி 5,018 மில்லியன் டொலர்களாகும். இடைவெளியைக் குறைக்க, சர்வதேச நாணய நிதிய விரிவாக்கப்பட்ட கடன் வசதியின் கீழ், 663 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதாக உறுதியளித்தது.

2025 வரவு – செலவு திட்டத்தை தயாரிக்க மேலும் 700 மில்லியன் டொலர்கள் வழங்கப்படும். உலக வங்கி 400 மில்லியன் டொலர்களை வழங்குகிறது. 3,855 மில்லியன் டொலர்கள் கடன் நிவாரணமாகக் கிடைக்கும்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தை அப்படியே ஏற்றுக்கொள்ளப் போவதில்லையென்றும் ஒப்பந்தத்தில் திருத்தம் கொண்டு வர வேண்டுமென்றும் சர்வதேச நாணய நிதியத்துக்கு அறிவித்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் பாராளுமன்றத்தில் தெளிவாகக் கூறுகிறார்.

இப்படி தவறியேனும் அவருக்கு அதிகாரம் கிடைத்தால் சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் மறுநாளே திருத்தப்படவுள்ளதுடன், 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை தயாரிக்கவே முடியாதென்றும் அவர்தெரிவித்தார்.

## ஜனாதிபதி தேர்தலில் களமிறங்க...

இவர்,2010 ஜனாதிபதி தேர்தலில் ,முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை எதிர்த்து போட்டியிட்டு தோல்வியடைந்தார்.இந்நிலையில், இம்முறையும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக அறிவித்துள்ளார்.

ஊழல் மோசடிகளை இல்லாதொழித்து நாட்டை வளர்ச்சியடைய செய்ய வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டை முன்னோக்கி நகர்த்துவதற்கு அனைத்து இலங்கையரையும் தம்முடன் இணைந்து கொள்ளுமாறும் சரத் பொன்சேக்கா தனது எக்ஸ் தளத்தில் அழைப்பு விடுத்துள்ளார்.

## ஜனாதிபதித் தேர்தலுக்கான...

எந்தவொரு நபரோ அல்லது கட்சியோ வெளியிடும் அறிக்கைகளுக்கு தேர்தல் ஆணைக்குழு பொறுப்பு கூறாது என்றும் அந்த அறிக்கையில் தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

## ஊழல் ஒழிப்புச் சட்டம்...

வழங்குதல் மற்றும் அவ்வாறு செய்யத் தவறிய அதிகாரிகளின் தண்டனை உள்ளிட்ட விடயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

மேலும், ஊழல் தடுப்புச் சட்டத்துக்கமைவாக சிரேஷ்ட பிரஜைகளுக்காக இந்த சொத்து விபரங்கள் வெளியிடுவதற்கான இணையத்தளம் ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதோடு இந்த வேலைத்திட்டத்தினை ஆறு மாதங்கள் அல்லது வருடத்திற்கு ஒரு முறை மீளாய்வு செய்ய வேண்டும் என்ற நிபந்தனையும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குற்றம் மற்றும் பணமோசடி மூலம் பெறப்பட்ட சொத்துக்களை மீட்பதற்கான தேசிய படிமுறைகள் மற்றும் கொள்கைகளை உருவாக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்காக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள புதிய அதிகாரங்களின் பிரகாரம், முறையான செயற்பாட்டிற்கு தேவையான ஆதரவை வழங்குதல் மற்றும் புதிய விசாரணைகள் மூலம் முறையான வழக்குத் தொடுத்தல் மற்றும் தண்டனை வழங்குதல், அரசியல் ரீதியாக அடையாளப்படுத்தப்படும் நபர்களை (Politically Exposed Persons) அடையாளம் காண்பது போன்ற விடயங்களும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த தேசிய நிகழ்ச்சி நிரல் ஊழல் வழக்குகள் தொடர்பான விசாரணைகள் மற்றும் வழக்குகளை வலுப்படுத்துவதற்கான ஏற்பாடுகளையும் செய்துள்ளது. இது ஒரு நிறுவனத்தின் உரிமையைப் பற்றிய தகவல்களை பெற்றுகொள்வதற்கான உதவிகளை வழங்குவதற்கான நியதிகளை உருவாக்குவதற்கும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்த பொதுப் பயன்பாட்டிற்கான பதிவேடு ஒன்றை உருவாக்கவும் வழிவகுக்கும்.

அரச பெறுகைச் செயற்பாடுகளின் போது வெளிப் படைத்தன்மையை உறுதி செய்வதற்காக, சர்வதேச தரத்துக்கேற்ப அரச பெறுகை சட்டத்தை (Public Procurement Law) அமுல்படுத்தவும், ஒரு பில்லியனுக்கும் அதிகமான பெறுகை ஒப்பந்தங்கள் குறித்த தகவல்களை வெளியிடுவது தொடர்பிலும் ஊழல் தடுப்பு நிகழ்ச்சி நிரலில் கூறப்பட்டுள்ளது.

வரி விலக்கு செய்யப்பட்ட நிறுவனங்களின் பெயர்களை பிரசித்தப்படுத்தல், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் முன்மொழிவுகளை மதிப்பிடுவதற்கான சரியான செயல்முறை உருவாக்கப்படும் வரை, மூலோபாய மேம்பாட்டுத் திட்டச் சட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்துதல், பயிற்சி பெற்ற மற்றும் சுயாதீனமான பணியாளர்களை கொண்டிருக்கும் வகையில் அரச நிறுவனங்களை மறுசீரமைப்புச் செய்தல், வருமானம் ஈட்டும் அரச நிறுவனங்களுக்குள் தற்காலிகமாக ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளை எடுப்பது உள்ளிட்ட சாத்தியமான செயற்பாடுகளும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இலங்கை மத்திய வங்கியின் நேரடி நிர்வாகத்தை முடிவுக்குக் கொண்டுவரும் சேமலாப நிதியத்திற்காக புதிய முகாமைத்துவக் கட்டமைப்பை நிறுவுதல், நிறைவேற்று மற்றும் கண்காணிப்பு குழு உறுப்பினர்களை தெரிவு செய்யும் முறையை மேம்படுத்துவதன் மூலம் அரச உரித்துள்ள வங்கிகளுக்கிடையில் கூட்டுதாபன நிர்வாக கட்டமைப்பை உருவாக்குதல், நீதிச் சேவை ஆணைக்குழுவை பலப்படுத்தல் உள்ளிட்ட முன்மொழிவுகளும் இதற்குள் அடங்கியுள்ளன.

தேசிய ஊழல் எதிர்ப்பு நிகழ்ச்சி நிரல், தகவலறியும் உரிமையை வலுப்படுத்துவது தொடர்பான நியதிகளையும் உள்ளடக்கியுள்ளது.

## பொது வேட்பாளரை களமிறக்கும்...

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில், "தமிழர் தரப்பு பொது வேட்பாளர் விடயத்தில் நாங்கள் எடுத்த தீர்மானம் என்னவெனில்,

ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கும் பிரதான வேட்பாளர்களோடு பேரம் பேசி, அவர்களது தேர்தல் விஞ்ஞாபனத்தை அவதானித்தே தீர்மானம் எடுப்போம்.

இதன்படி பிரதான வேட்பாளர்களாக தங்களை வெளிப்படையாக அடையாளம் காட்டியிருக்கும் சஜித் பிரேமதாசவோடும் அநுரகுமார திஸாநாயக்கவோடும் பேச்சுக்களை நடத்தியுள்ளோம். எங்களது எதிர்பார்ப்புக்க ளையும் நாம் இவர்களிடம் கூறியுள்ளோம்.

அவர்களுடைய தேர்தல் அறிக்கை வெளிவந்த பின்னர் அவற்றை அவதானிப்போம். ஆனால், வேறு எவரும் இதுவரையில் தங்களை வேட்பாளரென அறிவிக்கவில்லை. அவ்வாறு அறிவிக்கும் பட்சத்தில் அவர்களோடும் இதே போன்று பேச்சுவார்த்தையை நடத்துவோம். இவ்வாறு எம்.ஏ.சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

## விக்கிரமபாகு கருணாரத்ன...

81 வயதில் காலமானதாக உறவினர்கள் அறிவித்துள்ளனர்.

2010 ஜனாதிபதித் தேர்தலில் மேசைச் சின்னத்தில் விக்கிரமபாகு கருணாரத்ன போட்டியிட்டிருந்தார். 1943 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 08ஆம் திகதி பிறந்த விக்கிரமபாகு கருணாரத்ன, கேம்பிரிட்ஜ் கல்வியாளர் என்பதுடன் இலங்கை விஞ்ஞானியுமாவார். இவர் தனது இடைநிலைக் கல்விக்காக கொழும்பு ஆனந்தாக் கல்லூரிக்குச் செல்வதற்கு முன்னர் மத்துகம ஆனந்த சாஸ்த்ராலயாவில் ஆரம்பக் கல்வியைப் பெற்றார் . அதன்பின் அப்போதைய சிலோன் பல்கலைக் கழகத்துக்கு (University of Ceylon) தெரிவான அவர் அங்கிருந்து மின் பொறியியலில் சிறந்த பெறுபேற்றுடன் (first class honours)பட்டத்தைப் பெற்றார் .

பொதுநலவாய உதவித்தொகை மூலம் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கற்க வாய்ப்புப் பெற்ற அவர், 1970 இல் முனைவர் (Doctorate) பட்டத்தை பெற்றார். அதனைத் தொடர்ந்து மீண்டும் இலங்கை வந்து தனது கல்வி மற்றும் அரசியல், சமூக சேவை வாழ்க்கையைத் முன்னெடுத்தார்.

## சட்டவிரோத பணவைப்புக்களை...

இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கைச் சபையினால் நடத்தப்பட்ட நான்காவது கொள்கை வட்டி வீத மாற்றங்கள் பற்றிய அறிவித்தல் பற்றி இச் செய்தியாளர் மாநாட்டில் கலந்துரையாடப்பட்டது. கொள்கை வட்டி விகிதங்கள் குறைக்கப்படுவதால், கடன் வசதிகளை வழங்கும்போது வட்டி வீதங்களை குறைக்க வேண்டுமென,நிதி நிறுவனங்களுக்கு ஆளுநர் வலியுறுத்தியுள்ளார்.

வட்டி வீதங்களைக் குறைக்கும் வகையில் வங்கி மற்றும் நிதியை ஒழுங்குபடுத்த மத்திய வங்கி தற்போது தயாராக இல்லை என்றும் ஆளுநர் கூறியுள்ளார்.

## தேயிலை கைத்தொழில் துறைக்கு...

உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார். கொழும்பு தேயிலை வர்த்தகர்கள் சங்கமும் இலங்கை தேயிலை சபையும் இணைந்து "தேயிலை ஒரு வாழ்க்கை முறை மற்றும் வாழ்வாதாரம்" என்ற தொனிப்பொருளில் இரண்டு நாள் மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளது.

இலங்கையில் உள்ள தேயிலை உற்பத்தியாளர்கள் மற்றும் அது தொடர்பான வர்த்தகங்களின் கண்காட்சியும் இங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை, கென்யா, சீனா, இந்தியா, ஜப்பான், பிரித்தானியா, வளைகுடா நாடுகள் மற்றும் அமெரிக்கா போன்ற பல நாடுகளைச் சேர்ந்த தொழில் வல்லுநர்கள், நிபுணர்கள், முன்னணி வர்த்தக நாமங்கள் மற்றும் சமூக நிறுவனங்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றன.

நம்நாட்டு தேயிலை உற்பத்தியாளர்கள் மற்றும் அதனுடன் தொடர்புள்ள பல வர்த்தகங்களின் கண்காட்சிகளும் இதனுடன் இணைந்ததாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கொழும்பு தேயிலை வர்த்தகச் சங்கத்தின் தலைவர் சஞ்சய் ஹேரதினால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு விசேட நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான சாகல ரத்நாயக்க, விவசாய மற்றும் பெருந்தோட்ட அமைச்சின் செயலாளர் ஜனக தர்மகீர்த்தி, இலங்கை தேயிலை சபையின் தலைவர் நிராஜ் டி மெல், கொழும்பு சர்வதேச தேயிலை சம்மேளனத்தின் இணைத் தலைவர்களான கணேஷ் தேவநாயகம் மற்றும் அனில் குக் உள்ளிட்ட தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள், தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்கள் மற்றும் தேயிலை கைத்தொழில் சம்பந்தப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பிரதிநிதிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## இன்றைய பலன்கள்

(26.07.2024)

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:**
பெண்களுக்கு சகோதரர்களிடையே மன வருத்தம் ஏற்படலாம். கலைஞர்கள் சுறுசுறுப்பாக செயல்பட்டாலும் வருவாய் பாதிக்கும்.

**ரிஷபம் :**
கலைத்துறையை சேர்ந்தவர்கள் புதிய வாய்ப்புகளை பெறுவர், பங்கு சந்தை வியாபாரம் லாபம் இருக்கும்.

**மிதுனம்:**
கூட்டுத் தொழிலில் லாபம் சுமாராக இருக்கும். குடும்பத்தில் சிறுசிறு பிரச்சனைகள் தோன்றி மறையும். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளை பெற்று மகிழ்வர்.

**கடகம்:**
குடும்பத்தில் ஏற்படும் கடன் பிரச்சனையை பெண்கள் தங்கள் சேமிப்புக் கொண்டு சரி செய்வர். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளை பெற முயற்சிப்பர்.

**சிம்மம்:**
குடும்பம் சீராக நடைபெறும் புதிய உற்சாகமும் மகிழ்வும் ஏற்படும். கலைஞர்கள் புதிய ஒப்பந்தங்களை பெற்று மகிழ்ச்சியடைவர்.

**கன்னி:**
கலைஞர்கள் புதிய வாய்ப்புகளில் உற்சாகமாக ஈடுபடுவர். பங்கு சந்தை வியாபாரம் நன்றாக நடைபெறும்.

**துலாம்:**
குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். கவிஞர்கள் தீவிர முயற்சியின் பெயரில் புதிய வாய்ப்புகளை பெற்று உற்சாகத்துடன் பணியாற்றுவர்.

**விருச்சிகம்:**
குடும்பத்தில் சிறு சிறு பிரச்சனைகள் தோன்றி மறையும். கலைஞர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் மூலம் புகழும் பொருளும் அதிகரிக்கும்.

**தனுசு:**
குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினைகளை சாமர்த்தியமாக சமாளித்து விடுவீர்கள். கலைஞர்கள் தங்கள் பணிகளில் உற்சாகமாக ஈடுபடுவர்.

**மகரம்:**
கலைஞர்கள் பணிகளில் தீவிர முயற்சியோடு இருந்தாலும் ஆதாயம் போதுமானதாக இருக்காது. பங்கு சந்தை வியாபாரத்தில் போதுமான லாபம் கிடைக்கும்.

**கும்பம்:**
கலை துறையினர் தங்கள் பணிகளில் உற்சாகமாக ஈடுபடுவர். பங்குச்சந்தை லாபம் தருவதாக அமையும்.

**மீனம்:**
குடும்பத்தில் பிரச்சினைகளை தவிர்க்க உறவினர்களுடன் சமரசம் செய்யுங்கள். கலைஞர்கள் சுறுசுறுப்பாக செயல்பட்டாலும் புதிய வருமானம் இருக்காது.

## கெஹலியவின் விளக்க... (03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கல் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் டொக்டர் கபில விக்கிரமநாயக்கவை தகுந்த பிணை நிபந்தனைகளின் கீழ் விடுவிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று முற்பகல் மாளிகாகந்த நீதவான் நீதிமன்றத்திற்கு அறிவுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நீதிமன்ற தீர்ப்பை.... (03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்த அவர், 17 வது அரசியலமைப்புத் திருத்தத்தின் ஆரம்பத்திலேயே அரசியலமைப்பு பேரவை ஆரம்பிக்கப்பட்டது. ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம்தான் அரசியலமைப்பு பேரவைக்கு வழங்கப்பட்டுள்ளது. நிறைவேற்று அதிகாரத்தின் மாற்றம் 21 வது திருத்தத்தில் 7(அ) வில் காணப்படுகிறது.

அதன்படி அரசியலமைப்பு பேரவை நிறைவேற்றுத் துறையின் ஒரு பகுதியே. அதனால் அது தொடர்பில் அமைச்சரவையில் பேச முடியாது. அது தொடர்பில் கலந்துரையாடினாலும் அமைச்சரவையால் தீர்மானம் எடுக்க முடியாது.

சில நியமனங்களை அரசியலமைப்பு பேரவை அனுமதிக்க வேண்டும். பொலிஸ் மா அதிபர் நியமனத்திலும் அது பொருந்தும்.

ஜனாதிபதியால் எவருடைய பெயராவது முன் வைக்கப்பட்டால், அதனை உறுதிப்படுத்துவது அல்லது உறுதிப்படுத்தாமல் விடுவது அரசியலமைப்பு பேரவையின் கடமையும் பொறுப்புமாகும்.

அவ்வாறு நியமிக்கப்பட்டவர்களை தடை செய்வது உச்ச நீதிமன்றத்திற்கு உரிய விடயமாகும். இது தொடர்பில் நாம் விவாதத்திற்கு வரவில்லை.அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்னர் அதனை செயல்படுத்துவது யார் என்பதே தற்போதுள்ள பிரச்சினை.

அந்த வகையில் அரசியலமைப்பு பேரவையின் தலைவராக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன செயற்படுவதால், வெளிநாட்டு விஜயத்தை முடித்துக் கொண்டு அவர் நாடு திரும்பியதும் இந்த பிரச்சனையை அவரிடம் சமர்ப்பித்து தீர்வொன்றைப் பெற்றுக் கொள்ள முடியும்.

## கட்டார் தொண்டு... (03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விவசாய குடும்பங்களுக்கு யூரியா, டிஎஸ்பி மற்றும் எம்ஓபி உரங்கள் இலவசமாக வழங்கப்படவுள்ளன. இதனை கருத்திற்கொண்டு விவசாயம் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சும் கட்டார் தொண்டு நிறுவனமும் Qatar Charity இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் நேற்று கைச்சாத்திட்டன. விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் செயலாளர் ஜானக தர்மகீர்த்தி மற்றும் Qatar Charity பணிப்பாளர் Mahmoud S.M. Abhukalif ஆகியோர் இதில் கையெழுத்திட்டார். கட்டார் தொண்டு நிறுவனத்தின் பிரதிநிதிகள் இதற்கு முன்னர் விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீரவுடன் கலந்துரையாடினர். இதற்கு அமைச்சர் முழுமையான ஒத்துழைப்பை வழங்கியிருந்தார். குருநாகல் மாவட்டத்தில் 1,476 விவசாயிகளும் மாத்தளை மாவட்டத்தில் 1,000 விவசாயிகளும் மொனராகலை மாவட்டத்தில் 1,000 விவசாயிகளும் இந்த திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளி குடும்பத்துக்கு 25 கிலோ மூட்டை யூரியா, டிஎஸ்பி மற்றும் எம்ஓபி உரங்கள் வழங்கப்படும். உரிய பயனாளிகளை, மாவட்ட செயலாளர்கள், விவசாய அபிவிருத்தி பிரதி ஆணையாளர்கள் , உதவி ஆணையாளர்கள் ஆகியோர் தகுதி அடிப்படையில் தெரிவுசெய்வர்.

கட்டார் அறக்கட்டளை, தொண்டு நிறுவனம் தற்போது 65 நாடுகளில் மனிதாபிமான மற்றும் மேம்பாட்டு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

## தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரமுள்ள...

இந்த சிக்கலால் சுமார்,08 இலட்சம் சாரதிகளுக்கு தற்காலிகமாக அச்சிடப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரமே வழங்கப்பட்டது.

சாரதி பத்திரங்களுக்கு தேவையான அட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட அவர், புதிய சாரதிகளுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுவதாகவும் குறிப்பிட்டார். ஆண்டுதோறும் புதுப்பிக்கப்படும் சுமார் 09 முதல் 10 இலட்சம் சாரதி அனுமதி பத்திரங்களை அச்சிட வேண்டியுள்ளது. இவற்றின் விநியோகத்தில் ஏற்பட்ட தாமத்தினால் புதிதாக சாரதி அனுமதி பத்திரங்களை வழங்குவதில் தாமதம் ஏற்படக்கூடும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பரீட்சைகளுக்கான நேர...

அடுத்த ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன், ஏற்கனவே திட்டமிட்டபடி நிறைவடைந்துள்ள கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் எதிர்வரும் செப்டம்பர் மாதம் வெளியானால் இது சாத்தியமாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஹிஜ்ரத் கற்றுத்தரும் பாடம்



இஸ்லாமியப் புதுவருடம் ஹிஜ்ரி ஆண்டாகக் கணிக்கப்படுகிறது. ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது வபாத்தின் பின்னர் அபூபக்கர் (ரழி) அவர்களது காலத்திலும் முஸ்லிம்களுக்கான ஆண்டுக் கணிப்பீடு தொடர்பான முயற்சிகள் முன்னெடுக்கப்படவில்லை. இரண்டாவது கலீபா உமர் (ரழி) அவர்களது ஆட்சிக் காலத்தின் பாதியளவு நிறைவடைந்த நிலையிலேயே இதன் தேவை உணரப்பட்டது.

நடைமுறையில் உள்ள பல்வேறு கலண்டர்களும் ஆலோசிக்கப்பட்டு அவை நிராகரிக்கப்பட்ட நிலையில் நபிகளாருடைய பிறப்பு, நபித்துவம், இறப்பு இவற்றைக் கொண்டு வருடக் கணிப்பை ஆரம்பிப்பதற்கான கலந்துரையாடல்கள் நடந்த போதும் நபியவர்கள் மேற்கொண்ட ஹிஜ்ரத்திலிருந்து வருடக் கணிப்பைத் தொடங்குவதாக கலீபா உமர் (ரழி) அவர்கள் அறிவித்தார்கள். ஹிஜ்ரத் நடந்து 17 ஆவது வருடத்திலேயே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நபியவர்களது உலக சமாதானத்துக்கான தூதை நடைமுறைப்படுத்துவதில் ஹிஜ்ரத்தின் வகிபாகத்தை வலியுறுத்தும் வகையிலேயே உமர் (ரழி) அவர்களின் இத்தீர்மானம் அமைந்திருந்தது. இந்த ஹிஜ்ரத்தினூடாக நாடோடிச் சமூகமொன்று உலகை ஆளும் சக்தியாக மாறியது. பெரும்பான்மைச் சமூகத்தினரால் துன்புறுத்தப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்ட சமூகமொன்று பெரும்பான்மைச் சமூகமாக மாறி எதிரியையும் அரவணைக்கும் மனிதாபிமானத்துக்கான முன்னோடிச் சமூகமாக மாறியது. இத்தகைய மாற்றங்களை ஏற்படுத்திய ஹிஜ்ரத்தின் விளைவாகவே கலீபா உமர் (ரழி) அவர்களின் காலமாகும் போது உலகின் மூன்றிலிரண்டு பகுதிக்கு இஸ்லாம் பரவியிருந்தது.

ஹிஜ்ரத் என்பது பெரும் திட்டமிடலுடன் மேற்கொள்ளப்பட்ட சமூகப் பெயர்ச்சியாகும். நபிகளாருக்கு வழங்கப்பட்ட தூதுத்துவப் பணிக்குப் பொருத்தமான இடத்தை நோக்கி நபி(ஸல்) அவர்கள் திட்டமிட்டு காய்நகர்த்தினார்கள். அபீசீனியாவும் நஜ்ரானும் கூட நபியவர்களின் இலக்குகளாக இருந்தன. இறுதியில் மதீனாவில் கிடைத்த வரவேற்பு நபியவர்களை மதீனாவை நோக்கி நகரச் செய்தது. தாம் கொண்ட கொள்கையைப் பாதுகாப்பதற்காக நபியவர்களைப் பின்பற்றிய தோழர்கள் கடுமையான சித்திரவதைகளுக்கு ஆளாகியிருந்தார்கள். அவர்களைப் பாதுகாப்பான இடத்துக்கு அனுப்ப வேண்டி நபியவர்கள் தமது தோழர்களை அணுகியபோது தமது நபியவர்களின் தூதைப் பாதுகாப்பதற்காக தமது தாயகத்தை விட்டு வெளியேறுவதற்கு அவர்கள் சந்தோஷமாக ஏற்றுக் கொண்டார்கள். கடைசியாக நபி (ஸல்) அவர்களும் தான் பிறந்து வளர்ந்த, தனது குடும்பத்துடன் வாழ்ந்த, தனக்கு நபித்துவம் கிடைத்த பூமியை விட்டு, கஃபா எனும் இறையில்லத்தை விட்டுப் பிரிந்து செல்ல முடிவெடுத்தமை இலேசானதொன்றல்ல. தாம் ஏற்றுக்கொண்ட பணியை நிறைவேற்றுவதில் எதனையும் இழப்பதற்கு நபியவர்கள் கொண்டிருந்த உறுதியான நிலைப்பாட்டை இந்த ஹிஜ்ரத் எடுத்துக்காட்டுகிறது.

நபியவர்கள் மதீனா சென்றதும் முதல் வேளையாக மக்காவில் இருந்து அகதிகளாகச் சென்ற முஹாஜிர்களுக்கும் மதீனாவில் அவர்களை அரவணைத்த அன்ஸார்களுக்கும் இடையில் பிணைப்பை ஏற்படுத்தினார்கள்.

இம்முயற்சியை காலம் தாழ்த்தியிருந்தால் பிரதேசவாதம் மேலோங்கி மக்களிடையே பிரிவினை உருவாகுவதற்கான சாத்தியம் இருந்தது. இதற்கான வாய்ப்பை நபியவர்கள் முளையிலேயே கிள்ளி எறிந்தார்கள். இப்பிணைப்பானது இரத்த உறவினை விட கொள்கையால் ஒன்றுபட்டவர்களின் பிணைப்பு பலமானது என்பதை எடுத்துக்காட்டியது. இந்த சகோதரத்துவ பலம் தான் பலமான இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் அடித்தளமாகவிருந்தது. சமுதாயத்தின் அங்கத்தவர்கள் ஒரே இலக்கில் ஒற்றுமைப்பட்டு செயற்படுவது தான் சமூகமொன்று சாம்ராஜ்யமாக மாறுவதற்கான அடிப்படை என்பதை ஹிஜ்ரத் உணர்த்துகிறது. அடுத்ததாக நபியவர்கள் மதீனா சென்றடைந்தததும் ஏற்படுத்திய மதீனா சாசனம் ஹிஜ்ரத் நிகழ்வில் மிக முக்கியத்துவம் பெறுகிறது. நபியவர்கள் மதீனாவை அடைந்த போது மதீனா பன்முக சமூகமாக இருந்தது. பலதெய்வ வழிபாடு செய்யும் மதங்களையும், யூத மதத்தையும் பின்பற்றும் பல்வேறு கோத்திரங்கள் மதீனாவில் வாழ்ந்து வந்தனர். சில யூத கோத்திரங்கள் பலதெய்வ வழிபாடு செய்யும் சில கோத்திரங்களோடு கூட்டணி வைத்து ஒரு அணியாகவும், வேறு சில யூத கோத்திரங்கள் மற்ற பலதெய்வ வழிபாடு செய்யும் கோத்திரங்களோடு கூட்டணி வைத்து, எதிரணியாகவும் செயல்பட்டு வந்தனர். இவர்களுக்கு இடையில் பல நூற்றாண்டுகளாக கடும் பகையும், சண்டையும் நிலவியது. அங்கு முஸ்லிம் முஸ்லிமல்லாதவர்கள் என்ற பிரிவுகளைத் தாண்டி பல்வேறு கோத்திரங்களாகவும் குலங்களாகவும் மக்கள் பிளவுபட்டிருப்பதைக் கண்டார்கள்.

மதீனாவுக்கு வந்த நபியவர்களை தலைவராக மக்கள் ஏற்றுக்கொண்டனர். மதீனாவில் வாழ்ந்த கோத்திரங்களுக்கு இடையில் நடந்த முடிவில்லாத சண்டைகளை முடிவுக்குக் கொண்டுவரவும், அமைதியை நிலை நாட்டவும், நபியவர்கள் மதீனாவில் வாழ்ந்த பல்வேறு கோத்திரங்களோடு ஒரு உடன்படிக்கை செய்தார்கள். இந்த உடன்படிக்கையையே, 'மதீனாவின் அரசியல் சாசனம்' என்று வரலாற்று ஆசிரியர்கள் அழைக்கின்றனர். இருபதாம் நூற்றாண்டின் வரலாற்றாய்வாளரான இந்தியாவைச் சேர்ந்த கலாநிதி முஹம்மத் ஹமீதுல்லாஹ், மனித வரலாற்றில் முதலாவது எழுதப்பட்ட யாப்பாக இதனைக் குறிப்பிடுகிறார். சமூக அமைதிக்கும், நல்லிணக்கத்துக்கும் தேவையான சமத்துவம், நீதி, மத சுதந்திரம் போன்ற அடிப்படை உரிமைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து இந்த உடன்படிக்கை எழுதப்பட்டது.

இந்த சாசனத்தின்படி,

- யூதர்களும் முஸ்லிம்களைப் போலவே ஒரு சமூகமாக அங்கீகரிக்கப்பட்டனர்.
- முஸ்லிம்கள் தமது மதத்தைக் கடைபிடிக்க உரிமை உண்டு. அதேபோன்று யூதர்களும் தமது மதத்தைக் கடைபிடிக்க உரிமை உண்டு.
- யூதர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே நல்லிணக்கமும் புரிதலும் இருக்கும்.

இந்த உடன்படிக்கைக்கு முன், யூத கோத்திரங்களுக்கு மத்தியிலே கூட பாகுபாடும், பாரபட்சமும் பரவலாக இருந்தது. பனூ நதீர், பனூ குரைஸா என்ற இரண்டு யூத கோத்திரங்கள், மதீனாவில் வாழ்ந்து வந்தன. பனூ நதீர் கோத்திரத்தை சேர்ந்த ஒருவர் பனூ குரைஸா கோத்திரத்தை சேர்ந்த ஒருவரைக் கொன்றால், தண்டனையாக அவர்கள் நஷ்டஈடு மட்டுமே கொடுப்பார்கள். ஆனால், அவர்களது கோத்திரத்தைச் சேர்ந்த ஒருவர் பனூ குரைஸாவை சேர்ந்த ஒருவரால் கொல்லப்பட்டால், அவர்கள் அந்தக் கொலைகாரனைக் கொன்றுவிடுவார்கள். நபியவர்கள், இந்த உடன்படிக்கை மூலம் இத்தகைய அநீதியான நடைமுறைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து சமத்துவத்தை நிலைநாட்டினார்கள். நபியவர்களுடைய முனைப்புக்கள் எல்லாம் மதம் கடந்த மனித நேயத்தை நிலைநாட்டுவதாக இருந்ததை முஸ்லிம் சமூகத்துக்கு அப்பாலும் சென்று உடன்படிக்கைகளை மேற்கொண்டமை எடுத்துக்காட்டுகின்றது.

குறிப்பாக மனித இனத்துக்குப் பொதுவான விடயங்களில் நபியவர்களின் உடன்படிக்கை தம்மை ஏற்றுக்கொண்டவர்களை முன்னுரிமைப்படுத்துவதாக அமையவில்லை.

மதீனா சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள படி,

- தீமையான, அநியாயமான புரிபவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக முஸ்லிம்கள் ஒன்று திரள்வார்கள். அநியாயம் செய்தவர் முஸ்லிமாக இருந்தாலும், அவருக்கு எதிராக மற்ற முஸ்லிம்கள் ஒன்று திரள்வார்கள்.
- எந்தவொரு முஸ்லிமும் கொலைகாரர்களை ஆதரிக்கவோ, அல்லது அவருக்கு அடைக்கலம் கொடுக்கவோ கூடாது.

தீமை செய்யும் நபரையோ அல்லது ஒப்பந்தத்தை மீறும் நபரையோ பாதுகாக்க இந்த உடன்படிக்கை ஒருபோதும் தலையிடாது.

பன்முகத்தன்மையுடன் வாழும் நாடுகள் அமைதியானவையாக இருப்பதற்கு நபியவர்கள் ஹிஜ்ரத்தின் பின் ஏற்படுத்திய இந்த மதீனா சாசனம் அடிப்படையாகும். சகல இனங்களும் அடுத்த இனங்களை அங்கீகரித்து மனிதாபிமானத்துக்கு முன்னுரிமை கொடுத்து நடந்து கொள்வது என்பதே சமாதான சகவாழ்வுக்கு வழியாகும் என்பதனை ஒவ்வொரு வருடமும் நினைவுபடுத்தும் வகையிலேயே ஹிஜ்ரி வருடம் அமைகிறது.

**பியாஸ் முஹம்மத்...**

ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk



# வாக்குறுதி நிறைவேற்றுவதற்கு இஸ்லாம் அளிக்கும் முக்கியத்துவம்

'இன்னும் அவர்கள் எத்தகையோரென்றால், அமானிதங்களையும் தாங்கள் அளித்த வாக்குறுதிகளையும் பேணுவார்கள்'.

(அல் குர்ஆன் 23:2).

மனிதர்களிடையே நிலவும் சண்டை சச்சரவுகளுக்கு முதன்மை காரணமாக விளங்குவது வாக்குத் தவறுதலாகும். ஒருவருக்கு அளிக்கப்படும் வாக்குறுதியில் வாக்கு அளிப்பவரின் கௌரவமும், வாக்கு அளிக்கப்படுபவரின் வாழ்க்கையும் அடங்கியிருக்கிறது.

வாக்கு தவறுதல் என்பது நம்பிக்கை மோசடி வகையைச் சார்ந்தாகும். ஒருவருக்கு ஒரு காரியம் ஆக வேண்டும் என்பதற்காக அந்த நேரத்தில் வாக்குறுதியை அளித்துவிட்டு, தனது வேலை முடிந்துவிட்டால், தான் அளித்த வாக்குறுதியை சுலபமாக மறந்து விடுவதைப் பரவலாக அவதானிக்க முடிகிறது. அவ்வாக்குறுதி குறித்து வினவும் போது பிரச்சினை வெடிக்கிறது. ஆனால் ஒருவர் மரணித்த பின்பு கேட்கப்படும் கேள்விகளில் வாக்குறுதி நிறைவேற்றாததும் அடங்கியிருக்கும்.

குறிப்பாக கடன் வாங்கியவர் திருப்பித் தர வேண்டியது எந்தளவு கடமையோ அதேபோன்று தான் பிறருக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவதும் ஆகும்.

நபி (ஸல்) அவர்கள் வபாத்தான போது, அபூபக்கர் (ரழி) அவர்களுக்கு அலா இப்னு ஹள்ரமீ (ரழி) அவர்களிடமிருந்து (சிறிது) செல்வம் வந்தது. அப்போது அபூபக்கர் (ரழி) அவர்கள் அங்கிருந்தவர்களைப் பார்த்து, 'யாருக்காவது நபி (ஸல்) அவர்கள் கடன் பாக்கி தர வேண்டியிருந்தால், அல்லது யாருக்காவது வாக்கு ஏதும் தரப்பட்டு இருந்தால், அவர் நம்மிடம் வரட்டும். (அவரது உரிமையை நாம் நிறைவேற்றுவோம்) என்று கூறினார்கள். (ஆதாரம்: புஹாரி)

இதன்படி வாக்குறுதியை நிறைவேற்றுவது எவ்வளவு முக்கியமானது என்பது தெளிவாகிறது. அதே நேரம் வாக்குறுதியை நிறைவேற்றாதது நம்பிக்கை மோசடியாகும் என்றும் வாக்குறுதியை நிறைவேற்றாதவர்களை நயவஞ்சகர்கள் என்றும் இஸ்லாம் குறிப்பிட்டிருக்கிறது.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், நயவஞ்சகர்களைப் பற்றி கூறும்போது 'பேசினால் பொய் பேசுவான், வாக்களித்தால் மாறு செய்வான், நம்பினால் மோசம் செய்வான்' என்றார்கள். (ஆதாரம்: புஹாரி)

அதேநேரம் போரில் கலந்துகொள்வதைவிட வாக்குறுதி முக்கியமானது எனவும் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இது குறித்து நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஹுதைபா பின் அல்யமான் (ரழி) அவர்கள் குறிப்பிட்டுள்ளதாவது,

'நான் பத்ருப் போரில் கலந்து கொள்ளாததற்குக் காரணம் யாதெனில், நானும் என் தந்தை ஹுசைல் (எனும் அல்யமான்) அவர்களும் (பத்ர் நோக்கிப்) புறப்பட்டோம். அப்போது குறைஷி இறைமறுப்பாளர்கள் எங்களைப் பிடித்துக்கொண்டனர். 'நீங்கள் முஹம்ம(துடன் சேர்ந்து எங்களுக்கு எதிராகப் போர் செய்வ)தை நாடித்தானே செல்கிறீர்கள்?' என்று கேட்டார்கள்.

நாங்கள் '(இல்லை) மதீனாவை நோக்கியே செல்கிறோம்' என்று (பேச்சை மாற்றிச்)சொன்னோம். அப்போது குறைஷியர் 'நாங்கள் மதீனாவுக்கே திரும்பி விட வேண்டும். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடன் சேர்ந்து (குறைஷியருக்கெதிராக) போரிடக்கூடாது' என அல்லாஹ்வின் மீது ஆணையிட்டு எங்களிடம் வாக்குறுதி பெற்றுக்கொண்டனர்.

அதன் பின்னர் நாங்கள் இருவரும் மதீனா சென்றதும் நபி (ஸல்) அவர்களிடம் சென்று நடந்ததைக் கூறினோம். அப்போது அவர்கள், 'நீங்கள் இருவரும் (மதீனாவுக்கே) திரும்பிச் செல்லுங்கள். நாம் அவர்களுக்கு ஆதரவாக அவர்களது வாக்குறுதியை நிறைவேற்றுவோம். அவர்களுக்கெதிராக அல்லாஹ்விடம் உதவி கோருவோம்' என்று சொன்னார்கள்.

(ஆதாரம்: முஸ்லிம்).

அதேவேளை, போரில் கலந்து கொள்ளாதவர்களை நபி (ஸல்) அவர்கள் கடுமையாக சாடியுள்ளார்கள். ஆனால் இந்த சம்பவத்தில் ஒரு தோழர் கொடுத்த வாக்குறுதியின் காரணமாக அவரை போருக்கு வரவேண்டாம் என்று கூறியுள்ளார்கள் என்றால், வாக்குறுதியின் முக்கியத்தை நாம் உணர வேண்டும். அதுவும் ஒரு இறைமறுப்பாளருக்கு அளித்த வாக்குறுதியாகும். அப்படியென்றால் இன்றைய காலகட்டத்தில் இறைவிசுவாசிகளுக்கு மாத்திரமல்லாமல் ஏனைய சமயங்களைச் சேர்ந்த சகோதரர்களுக்கு கூட அளிக்கப்படும் எத்தனையோ வாக்குறுதிகள் காற்றில் பறக்கப்படவிடப்படுவது எம்மாத்திரம்.

மேலும் தொழிலாளர்களிடம் வேலைவாங்குவதற்காக பல்வேறு வாக்குறுதிகள் அளிக்கப்பட்டும் அவற்றில் பெரும்பாலானவை நிறைவேற்றப்படுவதில்லை. தமக்களித்த வாக்குறுதிகள் குறித்து கேட்பவர்களை, தமது உடல் பலம், ஆள் பலம், பண பலம், படை பலம், செல்வாக்கு உள்ளிட்டவற்றைக் கொண்டு மிரட்டுவது சர்வ சாதாரணமாகி விட்டது.

நிறுவனங்களில் பங்குதாரராக சேர்த்து, பின் அவர்களுக்கே தெரியாமல் பங்குதாரர்களை ஏமாற்றும் நம்பிக்கை துரோகங்களும் நடக்கத்தான் செய்கின்றன. வெளிநாட்டிற்கு ஆட்களை அனுப்புபவர்கள் தவறான வாக்குறுதிகளை அளிக்கின்றனர். இவர்களின் தவறான வாக்குறுதிகள் பலரின் வாழ்வையே கேள்விக்குறியாக்கி விடுகின்றன. குடும்பமே சிரமத்தில் ஆழ்ந்துவிடுகிறது. ஒரு குடும்பத்தின் சிதைவுக்கு தவறான வாக்குறுதி காரணமாக அமைகிறது என்பதை எண்ணிப் பார்க்க மறந்து விடுகின்றனர்.

ஆனால் இஸ்லாம் வாக்குறுதி நிறைவேற்றுவதற்கு அதிக முக்கியத்துவம் அளித்திருக்கிறது. இதனைக் கருத்தில் கொண்டு செயற்படுவது ஒவ்வொரு இறைவிசுவாசியினதும் பொறுப்பாகும்.

**மின்ஸார் இப்றாஹீம்...**

# அல் குர்ஆனை தினமும் ஓதுவோம்

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், தண்ணீர் பட்டால் எப்படி இரும்பு துருபிடித்து விடுகிறதோ, அவ்வாறு தான் இந்த இதயமும் துரு பிடித்து விடும் என்றார்கள். அப்போது ஸஹாபாக்கள், இறைத்தூதரே அதை நீக்குவது எப்படி? என்று வினவினார்கள். அதற்கு நபிகளார் மரணத்தை அதிகம் நினைப்பதும், குர்ஆனை அதிகம் ஓதுவதும் தான் அதற்கான ஒரே வழி என்று நபி (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள். (ஆதாரம்: பைஹகி)

இந்த நபிமொழியின் படி, தினமும் அல் குர்ஆனை ஓதுவது எவ்வளவு முக்கியம் என்பது தெளிவாகிறது. அதனால் அல் குர்ஆனை தினமும் ஓதுவதில் கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும்.



அதேநேரம், குர்ஆனை ஓதுங்கள் நிச்சயமாக அது தன்னை ஓதக்கூடியவர்களுக்கு மறுமை நாளில் ஷஃபாஅத் எனும் பரிந்துரை செய்யக்கூடியதாக வரும்' என்றும் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்; முஸ்லீம்)

மறுமை நாள் என்பது 'தனக்கு என்ன ஆகுமோ?' என்று ஒவ்வொருவரும் யோசித்துக் கொண்டிருக்கும் போது உதவிக்கோ எவரும் வரமாட்டார்கள். அந்த நெருக்கடியான நேரத்தில் சட்டென வந்து உதவி செய்யக்கூடியது தான் இந்த அருள் மறையாம் அல் குர்ஆன்.

மற்றொரு தடவை நபி (ஸல்) அவர்கள், குர்ஆனை மனப்பாடமாக ஓதுவது ஆயிரம் மடங்கு சிறந்தது. ஆனால் குர்ஆனை பார்த்து ஓதுவது இரண்டாயிரம் மடங்கை விட சிறந்தது' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

(ஆதாரம்: பைஹகி)

இந்த நபிமொழிகளின் படி, ஒவ்வொருவரும் அல் குர்ஆனை ஒத வேண்டும். இதில் இரு கருத்துக்கு இடமில்லை. அந்த வகையில் குர்ஆனை மனப்பாடம் செய்தும் ஓதலாம். ஆனால் அதனை பார்த்து ஓதுவது தான் அதிக சிறப்பு மிக்கதாகும் என்பதை நபிகளார் இந்நபிமொழியின் ஊடாக சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

அதேநேரம் அல் குர்ஆனை ஓதுவதன் மூலம் ஓதுபவர் மாத்திரமல்லாமல் அவரது பெற்றோரும் நன்மை அளிக்கப்பட்டு கௌரவிக்கப்படுகின்றனர். இதனை நபி (ஸல்) அவர்களே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்கள்.

'எவர் குர்ஆனை ஓதி அதன்படி அமல் செய்கிறாரோ அவரது பெற்றோர்கள் நாளை மறுமையில் கிரீடம் அணிவிக்கப்படுவார்கள். அதன் ஒளி சூரியனை விட மிகப் பிரகாசமாக இருக்கும்'

(ஆதாரம்: அஹ்மது)

ஆகவே குர்ஆனை ஓதுவதன் மூலம் தம் பெற்றோருக்கு பிள்ளைகள் பெற்றுக் கொடுக்கும் மாபெரும் கௌரவமாகவே இது அமையும். அதனால் தினமும் குர்ஆனை ஓதுவதிலும், படிப்பதிலும், விளங்குவதிலும் கவனம் செலுத்துவோம். அதன் ஊடாக இறையருளைப் பெற்றுக் கொள்வோம்.

**அப்பாஸ்...**

# மனித வாழ்வுக்கான உயர் பண்புகள்



இஸ்லாம் மனித வாழ்க்கையை இரண்டாக குறிப்பிடுகிறது. ஒன்று இம்மை எனப்படும் இந்த உலக வாழ்க்கை. மற்றையது

இறைவனின் நெருக்கத்தில் வாழும் மறுமை வாழ்க்கை. இந்த இரண்டில் மறுமை வாழ்க்கையே சிறந்தது என்று ஏக இறைவன் அல்லாஹ் அறிவுறுத்தியுள்ளான்.

இறையச்சத்துடனும், நற்பண்புகளுடனும், உயர்ந்த சிந்தனைகளுடனும், பிறருக்கு உதவும் உள்ளத்துடனும் ஒருவர் இம்மையில் வாழ்ந்தால் மறுமையில் அவருக்கு சுவர்க்கம் கிடைக்கப்பெறும். அதனால் ஒரு மனிதர் உயர்ந்த பண்புள்ளவராக வாழ ஐந்து முக்கிய அம்சங்களை கடைப்பிடிக்க வேண்டும்.

ஒரு நாள் நபி (ஸல்) அவர்கள் தமது தோழர்களிடம் இவ்வாறு கூறினார்கள். 'நான் சில செய்திகளை உங்களுக்குக் கூறுகிறேன், அதை செயலாற்றுபவர் யார்? அல்லது செயலாற்றும் நபருக்கு கற்றுக் கொடுப்பவர் எவரும் உண்டா?' என வினவியதும் நபித்தோழர் அபூஹுரைரா (ரழி) அவர்கள், 'நானிருக்கிறேன் ரஸூலுல்லாஹ்' என்றார். உடனே நபி (ஸல்) அவரது கையை பிடித்துக் கொண்டு ஐந்து விடயங்களை எடுத்துக்கூறினார்கள்.

அவை வருமாறு:

1) இறைவன் எவற்றை தடை செய்துள்ளானோ அவற்றை விட்டு விலகி, பயந்து நடந்து கொண்டால் மிகப்பெரிய வணக்கம் புரிந்தவராகலாம்.

இறைவனுக்கு இணை வைத்தல், மது அருந்துதல், வட்டி வாங்கி சாப்பிடுதல், கொள்ளை அடித்தல், விபசாரம் புரிதல், சூனியம் செய்தல், கொலை செய்தல் போன்றவை பெரும்பாவங்கள் ஆகும். இவை அனைத்தும் இறைவனால் தடுக்கப்பட்டவை. இது போன்ற எந்தப் பெரும் பாவமும் செய்யக்கூடாது. அத்தோடு தொழுகை, நோன்பு, ஸக்காத், ஹஜ் ஆகிய கடமைகளை உரிய ஒழுங்கில் நிறைவேற்ற வேண்டும்.

இதற்கு மாற்றமாக எல்லா நல்ல காரியங்களையும் செய்கிறார். பாவங்களையும் செய்கிறார் என்றால் இவரும் குற்றவாளி தான். மனிதன் தான் செய்யும் நல்ல காரியங்கள் யாவும், பாவமான காரியங்களை விட்டும் தடுப்பவையாக அமைய வேண்டும். இவ்விரண்டையும் ஒரு மனிதன் பேணி செயல்படும் போது அவர்தான் அதிக வணக்கமுடையவராக கருதப்படுகிறார்.

2) இறைவன் எதை பங்கிட்டு வழங்கியுள்ளானோ அதை மன நிறைவுடன் ஏற்றுக்கொள்ளும் பண்பு இருக்க வேண்டும். அவர் தான் அதிகம் வசதி படைத்தவர் ஆவார். இறைவன் ஒரு மனிதனுக்கு என்ன தேவை ஏற்படுமோ அதை அந்தந்த காலகட்டங்களில் வழங்கிக் கொண்டுதான் இருக்கிறான். அதில் எவ்வித குறையும் செய்யமாட்டான்.

உயர்ந்த பண்புகள் முழுமையாக ஒரே நேரத்தில் வழங்கப்படுவதில்லை. உதாரணமாக, ஒரு மனிதன் 90 ஆண்டு வாழ்கிறான் என்றால், அவனுக்கு பிறப்பு முதல் இறப்பு வரை உள்ள உணவு, குடிநீர் ஒரே நேரத்தில் வழங்கப்பட்டால் சேமித்து வைத்து உண்ணாமல் குடிக்காமல் திகைத்து விடுவான். அதுமட்டுமல்லாமல் சோம்பேறியாகி உடல் நலமே கெட்டுவிடும். கல்லுக்குள் இருக்கும் ஜீவராசிக்கு உணவு வழங்கும் இறைவன் நம்மை ஒருபோதும் கைவிடமாட்டான் என்ற நம்பிக்கை நம்மில் வரவேண்டும்.

அதே சமயம் வீட்டில் முடங்கிக் கிடப்பதும் கூடாது. கொடுப்பவன் கூரையை பிய்த்துக் கொண்டு கொடுப்பான் என்று எண்ணவும் கூடாது. நம்மிடமிருந்தும் உழைப்பு வேண்டும், அதன் மூலம் கிடைப்பதை ஏற்றுக்கொண்டு, போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து என்ற சொல்லுக்கேற்ப நடப்பது தான் பெரும் வசதி படைத்தவர் என்று எண்ணப்படும்.

3) 'பக்கத்து வீட்டினரிடம் உபகாரமுடன் நடந்து கொள்ள வேண்டும்'. அப்படி நடந்தால் தான் உண்மையான முறையில் விசுவாசங்கொண்டவராக முடியும். அண்டை வீட்டாரிடம் எந்தளவுக்கு உபகாரமுடன் நடக்க வேண்டும் என்றால், சொந்தங்களுடன் நடப்பதைப் போன்று நடக்க வேண்டும் என்று இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

4) தனக்கு எதை விரும்புவாரோ அதையே பிறருக்கும் விரும்பவேண்டும். அப்பொழுதுதான் முழுமையாக வழிபட்டவராகலாம். மனிதனின் இயல்பு தனக்கு பிடிக்காத பொருளை அடுத்தவருக்கு பிடிக்கும் என்று வழங்குவதுதான். ஆனால், நபி (ஸல்) அப்படிக் கூறவில்லை. மாறாக தனக்கு விருப்பமான பொருளைத்தான் அடுத்தவருக்கும் வழங்க வேண்டும். அப்பொழுதுதான் நன்மை உண்டு. கெட்டுப்போன உணவுகளைக் கூட மற்ற உயிரினங்களுக்கு போடக்கூடாது என்பது ஷரீஅத் சட்டமாகும்.

5) அதிகமாக சிரிப்பது கூடாது'. அப்படி சிரித்தால் உள்ளம் மரணித்துவிடும். அதாவது சந்தோஷமான நேரத்திலும் கூட நடுநிலையை கடைப்பிடிக்க வேண்டும். அதிகம் சிரித்தால் நல்ல விஷயங்களை ஏற்றுக்கொள்வதை விட்டும் உள்ளம் மரணித்துவிடும். அதிகமாக சிரிப்பதால் ஆபத்துக்கள் கூட ஏற்படலாம்.

இந்த ஐந்து விஷயங்களை ஒவ்வொரு மனிதரும் பேணி நடந்தால் அவர்தான் உண்மையிலே உயர்ந்த பண்புள்ளவராவார். அதற்காக நாமும் முயற்சி செய்வோம்.

**அப்துல்லாஹ்...**

# மு.கா. ஸ்தாபகர் மர்ஹூம் அஷ்ரப்பும் தவிசாளர் எச். எம். பாரூக்கும்





ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகத் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் அவர்களுடன் எச். எம். பாரூக் நெருங்கிப் பழகிய மறக்க முடியாத சம்பவங்கள் பல உள்ளன. அந்த வகையில் எச். எம். பாரூக் கட்சியின் நடவடிக்கைகளிலும் அஷ்ரஃபின் தனிப்பட்ட வாழ்க்கை முறைகள் பற்றியும் நிறையச் சம்பவங்கள் அதிகம் அறிந்தவர். அஷ்ரஃபுடைய விவகாரங்களில் நெருங்கிப் பயணித்தமையால் அஷ்ரப் அவர்களிடத்தில் பாரிய கௌரவம் தவிசாளர் எச். எம். பாரூக் அவர்களுக்கு இருந்தது. வேறு யாரையும் விட அஷ்ரஃப் அவர்களிடத்தில் மிக நெருங்கி எதையும் கதைக்கக் கூடிய தைரியமும் ஆத்மார்த்த நட்பும் எச். எம். பாரூக்குக்கு காணப்பட்டது.

அப்போது பெரும்பாலும் தாபகத் தலைவருடன் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள பாரூக் அவர்களை தூதுவராக பயன்படுத்தினார்கள். அரசியல் விவகாரங்களிலும் அதிகளவுக்கு அவர் பயன்படுத்தப்பட்டார்.

இங்கு பாரூக், தலைவர் அஷ்ரஃப் ஹெலிகொப்டர் பயணம் சென்று விபத்தில் மரணம் எய்வதற்கு முதல் நாள் இரவு முழுவதும் அவருடன் சேர்ந்து கட்சியின் மறு சீரமைப்பு பணியினை மேற்கொள்வதற்காக அவர் ஈடுபட்டு இருந்தார். கல்வி, அரசியல் உட்பட பல்வேறு பின்னடைவுகளுக்குள் அல்லலபட்ட சமுதாயத்தை மீட்டெடுக்கும் முயற்சியை மேற்கொண்ட கலாநிதி பதியுதீன் முஹ்மூத்தின் அடையாளத்தை உறுதி செய்வதற்காக அவருக்கான பாராட்டு விழாவை பாரூக் கண்டியில் டி. எஸ். சேனநாயக்க மண்டபத்தில் நடத்த மேற்கொண்டமை என்றென்றும் நினைவு கூரத்தக்கது. அவருடைய சேவைகளை தமது காலத்தில் மாற்றங்களுடன் முன்னெடுப்பதற்கும் பெரும் பங்காளராக எச். எம். பாரூக் மும்முரமாக ஈடுபாடுடையவராக மதிக்கப்பட்டார்.

பாரூக் மூத்த அரசியல்வாதிகளையும் மூத்த மனிதர்களையும் மதிக்கின்ற இயல்புடையவர். கலாநிதி பதியுதீன் மஹ்மூத் ஆற்றிய அரசியல் பங்களிப்புக்களை ஐயந்தீர அறிந்திருந்தார். அவர் வாழ்ந்த காலத்தில் தம் சமூகம் விளைவித்த நன்றி மறந்த செயற்பாடுகள் எவையென அவர் அறிந்திருந்தார். கலாநிதி பதியுதீன் மஹ்மூத் உருவாக்கிய பாடசாலைகள் அவரை மதிக்கவில்லையே என்ற கவலை எச். எம். பாரூக்கிடத்தில் இருந்தது. அவர் முன் கலாநிதி பதியுதீன் முஹ்மூத் கண்ணீர் விட்டு அழுதது அவர் மனதையும் உருகச் செய்து அழ வைத்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் கலாநிதி பதியுதீன் மஹ்மூத்தின் கண்ணீரை துடைப்பதில் முன்னின்று பாடுபட்ட ஒருவர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் மறுமலர்ச்சிக்கான பரிகாரங்களைத் தேடி பயணம் செல்லும் போது மூத்த அரசியல்வாதிகளுடன் சேர்ந்து அவர்களுடைய அறிவுரைகளையும் வார்த்தைகளையும் மதிப்பீடு செய்து தலைவர் அஷ்ரஃப் அவர்களுடன அவற்றை பகிர்ந்து கொண்டு அவர்களுக்குத் தேவையான உரிய கௌரவத்தைப் பெற்றுக் கொடுத்தவர் பாரூக். அதேபோல் எச். எம். பாரூக்கின் தந்தை அவர் மீது கொண்டிருந்த பாசமானது தம் வளர்ச்சிக்கான ஏணிப்படியாக அமைந்தது. அவர் தந்தை மரணத் தருவாயில் கூறிய ஆசீர்வாதம் அல்லாஹ்வினால் நேரடியாக தடங்களின்றி வழங்கக் கூடிய அருளாகும். அத்தகைய பாக்கியத்தைப் பெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் தவிசாளர் கென்யா நாட்டுத் தூதுவர் சட்டத்தரணி எச். எம். பாருக் அவர்கள். அவர் தினகரன் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி.

**கண்டி மாவட்ட அமைப்பாளர் பதவி நியமனம் விடயத்தில் இரண்டாவது தடவையாக போட்டி நிலவியது என்கின்ற தகவல்கள் உள்ளன. எவ்வாறாயினும் அஷ்ரஃப் அவர்கள் முதலில் ஒரு யுக்தியைக் கையாண்டு அந்த நியமனத்தை உங்களுக்கு வழங்கினார். இரண்டாவது முறையாகவும் உங்களுக்கிடையே போட்டி நிலவிய போது எத்தகைய யுக்தியை அஷ்ரஃப் கையாண்டார் என்று கூறுவீர்களா?**

ஒரு தடவை கட்சியின் மீள் புனர்நிர்மாணம் செய்யும் கூட்டம் கொழும்பு டவுன் ஹோலில் இடம்பெற்றது. அப்பொழுது கண்டி மாவட்ட அமைப்பாளர் பதவி நியமனத்தில் மீளவும் போட்டி நிலவியது. குத்தூஸ் ஹாஜியாருடைய பெயரும், எனது பெயரும் பிரேரணை செய்யப்பட்டது. இதில் இரண்டாவது தடவையாகவும் அஷ்ரஃப் தர்மசங்கடமான நிலைக்கு உள்ளானார்கள்.

அதேநேரம் அங்கு அமைந்துள்ள அறையொன்றுக்குள் சென்று கண்டி மாவட்டத்திலுள்ள கட்சி முக்கியஸ்தர்களை உள்ளே அழைத்துக் கலந்துரையாடினார். அவர்களுடைய விருப்பு வெறுப்புக்களை கேட்டறிந்த பின்னர். எச். எம். பாரூக் தான் பொருத்தமானவர்கள் என்று மீளவும் அக் கூட்டத்தில் பகிரங்கமான முறையில் அறிவித்தல் விடுத்தார்.

**கட்சி கட்டியெழுப்புவதற்கும் உங்களுடைய ஆக்கபூர்வமான பங்களிப்புக்கள் எவை என்று கூறுவீர்களா?**

ஒரு தடவை அதற்குப் பிறகு அம்பாறை மாவட்டத்தில் தேர்தல் இடம்பெற்றது. அம்பாறைக்குச் செல்ல வேண்டும். ஆனால் என்னிடம் ஜீப் வண்டி இருக்கிறது. அதனுடைய டயர் மிகவும் மோசம். கொழும்பிலுள்ள இன்னுமொருவரிடம் ஜீப் வண்டியின் பொடி மோசம். அதன் டயர் நன்றாக இருந்தது.அந்த ஜீப் வண்டியில் கண்டிக்கு வந்து எனது ஜீப் வண்டியில் உள்ள டயர்களைக் கலட்டி விட்டு அந்த டயர்களை எனது வண்டிக்கு மாற்றிக் கொண்டு சென்றோம். இத் தேர்தல் இலங்கையில் முஸ்லிம் காங்கிரஸ் எழுச்சிக்கு பெரும் வித்திட்டது என்று கூறலாம்.

கல்முனையில் சந்தாங்கேணி மைதானத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பேராளர் மாநாடு இடம்பெற்றது. கட்சியின் தவிசாளர் என்ற வகையில் நானே முழுமையான ஏற்பாடுகளை செய்வதில் முன்னின்று உழைத்தேன்.

இந்த மாநாட்டை வெற்றிகரமான முறையில் முன்னெடுப்பதற்காக ஒலுவில் என்ற இடத்தில் துறைமுக அதிகார சபைக்கு உரித்தான வாடி வீட்டில் 10 நாட்கள் தங்கி நின்று மாநாட்டின் ஒழுங்குகளைச் செய்தேன். அப்பொழுது எனது குடும்பத்தோடு அங்கு தனியாகத் தங்கியிருந்து செயற்பட்டேன்.

இறுதி நேரத்தில் கலந்து கொள்ள வந்தவர்கள் எனது ஏற்பாடுகள் தொடர்பில் விமர்சனங்களை அள்ளி வைத்தார்கள். அப்பொழுது இந்த விடயம் தொடர்பில் அஷ்ரஃப் அவர்களிடத்தில் முன்வைத்தேன். அதற்கு அவர் 'கதைப்பவர்கள் எதை வேண்டுமானாலும் கதைக்கட்டும் நீங்கள் உங்கள் வேலைகளைச் செய்யுங்கள்' என்றார். இது பொறாமையின் காரணமாக இருந்தாலும் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியைப் பெற்றுக் கொள்வதற்காக வேலை செய்கிறாரோ என்ற பார்வையும் கட்சி முக்கியஸ்தர்களிடத்திலே காணப்பட்டன.

அரசியலில் பொறாமை என்பது சகஜம். வெற்றிகரமான முறையில் மாநாடு நடைபெற்று முடிந்தது. அந்த மாநாட்டில்தான் கலாநிதி பதியுதீன் மஹ்மூத் பிரதம அதிதியாக அழைக்கப்பட்டிருந்தார். அவரை கண்டியில் இருந்து எனது ஜீப் வண்டியில் ஏற்றிக் கொண்டு சென்றேன். மரீனா என்ற பெயருடைய பெண் ஒருவரும் வந்தார். அவரை முன்னுக்கு வைத்து மஹியங்கனை ஊடாகச் சென்று கொண்டு சேர்த்தேன். அவர் திரும்பி வரும்போதும் நானே அழைத்து வந்தேன். எனக்கு கூட்டி வந்து கூட்டிச் செல்லும் பொறுப்பை தலைவர் அஷ்ரஃப் வழங்கியிருந்தார்.

**உங்களுக்கும் கலாநிதி பதியுதீன் மஹ்மூத் அவர்களுக்கிடையிலான நட்புறவு வலுமிக்கது. சமூகத்திற்காக பங்காற்றியவர்களை மதித்து கௌரவிக்கப்பட வேண்டும் என்ற விடயத்தில் நீங்கள் மிகுந்த அக்கறையோடு செயற்பட்டு வரும் ஒருவர். எனவே நீங்கள் கலாநிதி பதியுதீன் மஹ்மூத்தை கௌரவித்து அவருடைய அடையாளத்தை உறுதிப்படுத்த எடுத்த நடவடிக்கைகள் தொடர்பாகக் கூறுவீர்களா?**

கண்டி பதியுதீன் மஹ்மூத் மகளிர் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திக் குழுவின் உப தலைவராக இருந்தேன். அப்பொழுது கண்டியில் பதியுதீன் மஹ்மூத் அவர்களுக்கு ஒரு பாராட்டு விழாவை ஏற்பாடு செய்திருந்தோம். அந்நேரம் இந்நாட்டின் ஜனாதிபதியாக டி. பி. விஜேதுங்க இருந்தார். இந்த விழா நடக்கும் முதல் நாள் கட்சியின் வேலையாக கொழும்பு சென்றிருந்தேன். மறுநாள் நிகழ்ச்சி நிரல் மாற்றப்பட்டு வேறு அதிதிகள் சமூகமளிப்பதற்கான வேலைகள் திட்டமிட்டு மாற்றியமைத்திருந்தார்கள். அத்தினம் காலையில் அதிபர் தொலைபேசியில் என்னுடன் தொடர்பு கொண்டு கலாநிதி பதியுதீன் மஹ்மூத் விழாவுக்கு சமூகமளிப்பது ஜனாதிபதிக்கும் முதல் அமைச்சருக்கும் விருப்பமில்லை என்று தெரிவித்தார்.

அதே சமயம் அன்று காலை 7.30 மணி அளவில் கலாநிதி பதியுதீன் முஹ்மூத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தன்னை வர வேண்டாம் எனவும் இல்லையேல் விழா ரத்துச் செய்யும்படியும் என்று கூறியதாக அதிபர் தெரிவித்தார். இருப்பினும் அக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக அழகான முறையில் உடையணிந்து வருவதற்கு தயார் நிலையில் இருந்துள்ளார் என்பது முக்கியமான செய்தியாகும்.

இருப்பினும் நானும் கலந்து கொண்டேன். அந்நிகழ்வில் எனக்கு உரையாற்ற வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பம் மறுக்கப்பட்டிருந்தது. அப்பொழுது அக் கூட்டத்தில் கலாநிதி பதியுதீன் மஹ்மூத் அழைக்கப்படாமையினால் அக் கூட்டம் சோபை இழந்து காணப்பட்டது. அன்றைய தினத்தில் நான் தீர்மானம் ஒன்றை எடுத்தேன். அதாவது பெரும் தொகையிலான சனங்களைக் கொண்ட மக்கள் கலந்து கொள்கின்ற விழாவில் கலாநிதி பதியுதீன் மஹ்மூத் அவர்கள் பாராட்டப்பட வேண்டும் என்ற வைராக்கியம் எனக்கு ஏற்பட்டது.

இந்தக் காரியத்தை எனது தலைவர் எம். எச். எம். அஷ்ரஃப் ஊடாக கண்டி டி. எஸ். சேனநாயக மண்டபத்தில் நடத்தினேன். இக் கூட்டத்திற்கு பெரு எண்ணிக்கையிலான மக்கள் கலந்து கொண்டனர். கலாநிதி பதியுதீன் மஹ்மூத் அவர்களைப் பாராட்டி கௌரவித்த பெருமையும் மனத் திருப்தியும் எனக்கு கிடைத்தது. அதில் இருந்து என்னுடன் கலாநிதி பதியுதீன் மஹ்மூத் அவர்கள் மனத்திருப்தி கொண்டவராக இருந்தார். எப்பொழுதும் பாரூக் பாரூக் என்று அழைத்துக் கொண்டு இருப்பார். கம்பளை சாஹிராக் கல்லூரியில் பெரு விழா நடந்தது. அவர் வீட்டிற்குச் சென்று அவர் அறையில் இருந்து பார்த்தால் கம்பளை சாஹிரா கேட்போர் கூடம் நன்கு தெரியும். நானும் அங்கு சென்று இருந்தேன். அவர்தான் கம்பளை சாஹிராக் கல்லூரியை உருவாக்கியவர். ஆனால் அவர் இல்லாமல் அந்தப் பாடசாலையில் ஒரு பெரு விழா இடம்பெற்றது. அவர் அதைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவருக்கு அழைப்பு விடுக்கப் பட வில்லை. அந்நிகழ்வில் கலந்து கொள்ளாத குறை அவர் மனதில் இருந்தது. அப்பொழுது அவர் என்னைக் கண்டதும் அழுது விட்டார். அவர் முஸ்லிம் கல்வி எழுச்சிக்காக ஆற்றிய பங்களிப்பு அளப்பரியது. ஆனால் முஸ்லிம் சமூகம் அவரை உடனே மறந்து விட்டது.

**நம் வாழ்வின் எழுச்சிக்கு வழிகாட்டியவர்கள் பற்றியோ அல்லது நமது தாய் தந்தையர்கள் எமக்கு காட்டிய வழிகளைப் பற்றியோ எந்த நேரத்திலும் எளிதில் மறந்து விட முடியாதது. அந்த வகையில் யார் யாரையெல்லாம் உங்கள் வழிகாட்டியாகக் கொண்டு உங்களுடைய முன்னேற்றகரமான வாழ்க்கைப் பாதையை அமைத்துக் கொண்டீர்கள் என்று கூறுவீர்களா?**

என்னுடைய வாழ்க்கையில் மூன்று முக்கிய மானவர்களுடைய ஆசிர்வாதங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. முதலாவது எனது தந்தை, அஷ்ரஃப் சேர், கலாநிதி பதியுதீன் மஹ்மூத் அவர்கள் ஆகிய மூன்று நபர்களும் முக்கியமானவர்கள் ஆவார்கள். எனது தந்தை நீரழிவு நோயினால் பாதிக்கப்பட்டு கண்டியிலுள்ள தனியார் நேசிங் ஹோம் வைத்தியசாலை அனுமதிக்கப்பட்டிருந்தார். நான் இரண்டாம் வருடம் சட்டக் கல்லூரியில் கல்வி கற்றுக் கொண்டிருந்தேன். அப்போது எல்லாப் படிப்பையும் விட்டுவிட்டு தந்தையிடம் வந்து நின்றேன். தந்தை 'பாரூக் இங்கே வா. குளித்து விட்டுப் பள்ளிக்குப் போ' என்றார். பள்ளிக்குப் போய் வந்து சாப்பிட்டேன். எனது மனைவி சமைத்துக் கொண்டு வந்திருந்தார். திரும்பவும் அதே தொனியில் அவர் 'பாரூக் இங்கே வா' என்று கூப்பிட்டார். என் தலையைத் தடவி நீ நல்லாய் இருப்பாய் எதிர்காலத்தில் அல்லாஹ் எல்லாப் பாக்கியத்தையும் தருவான்' என்று கூறிய எனது தந்தை ஒரு மணித்தியாலத்தில் மரணம் எய்தினார்.

**அஷ்ரஃப் உங்கள் மீது அதிகமான நட்பு வைத்திருந்தார். அதேபோல அவருடைய கட்சி விடயத்திலும் செழிப்பான பரிகாரங்களை மேற்கொள்வதற்கு அவருக்கு துணையாக இருந்துள்ளீர்கள். அவருடைய மரண இறுதி நேரத்தில் நடைபெற்ற உயர் பீடக் கூட்டத்தில் அவர் கூறிய வார்த்தைகளும் மதிப்பீடுகளும் உண்மையில் உங்கள் இடத்தில் இருந்து தெளிவாக அறிந்து கொள்வதே எமக்குப் பெரும் சான்றாக அமையும் எனக் கருதுகின்றோம். அவை பற்றிக் கூறுவீர்களா?**

அஷ்ரஃப் சேர் அவர்கள் மரணம் அடையும் முதல் நாளன்று நான் வீட்டில் இருக்கும் போது ஒரு நாள் இரவு எட்டு மணி அளவில கொழும்பில் இருந்து அழைப்பு வந்தது. ரபீக், சல்மான், பாரூக் மஜீத், அஷ்ரஃப் அவர்களுடைய பிரதான பாதுகாவலர் ஆகியோர் அழைப்பு விடுத்தார்கள். தலைவர் உடன் வருமாறு வரும்படி அழைப்பு விடுத்துள்ளதாக இவர்கள் எல்லோரும் தெரிவித்தார்கள். அப்பொழுது 2000 இல் பொதுத் தேர்தல் காலம் எனலாம். நான் உடன் எனது சாரதி வர அழைத்துக் கொண்டு எனது அரப்பொல வீட்டில் இருந்து வெளிக்கிட்டு இரவு 11.00 மணி அளவில் போய் சேர்ந்தேன்.

அங்கு சென்றால் அஷ்ரஃப் சேர் இல்லை. வீட்டில் நிறைய ஆட்கள் இருந்தனர். அவர் 11.30. மணி அளவில் வந்து காரில் இருந்து இறங்கினார். அவர் இறங்கிய உடன் 'எனது தவிசாளர் வந்து விட்டாரா'? என்று கேட்டார். அப்பொழுது ஆம் என்றேன். அவர் பாரூக் 9.00 மணிக்கு நடத்த வேண்டிய உயர் பீடத்திற்கான கூட்டம் ஆகும். உங்களுக்காக வேண்டி 11.30 மணியாக்கியுள்ளேன் என்றார்.

எனினும் அவரைச் சந்திப்பதற்காக சனக் கூட்டம் இரவிலும் வந்திருந்தன. அவருக்கு அசையவும் முடியாத வேலை. அப்பொழுது என்னை அழைத்து 'அல்லாஹ்வுக்கு எனது இரத்தம் தேவைப்படுகிறது' என்றார். மேலும் அவர் 'நான் புதுக்கடைக்குச் சென்று ஆகப் பெரிய மாடொன்றைத் தெரிவு செய்து குர்பான் கொடுத்து விட்டுத்தான் வருகிறேன்' என்றார். கையில் காயங்களுக்காக மருந்து கட்டிருந்தார். அக்கால கட்டத்தில் பாகிஸ்தான் நாட்டில் இருந்து மௌலானா என்ற ஒருவர் வந்திருந்தார். நள்ளிரவு 12.00 மணி அளவில் அவரை பாகிஸ்தான் நாட்டிற்கு வழியனுப்பி விட்டு வருகிறேன் என்று கூறிச்சென்றார்.

அங்கு சென்றால் மௌலான தூக்கம். அவரும் சோபாவில் அமர்ந்திருந்தார். அவருக்கும் தூக்கம் சென்று விட்டது. அவர் போனவர் வரவில்லை. கூட்டத்திற்கு வந்தவர்கள் ஒவ்வொருவராகப் பிரிந்து சென்று விட்டார்கள். அதிகாலை 3.30 மணி ஆகியது. நானும், டொக்டர் உதுமாலெப்பை, மசூர் மௌலானா ஆகியோர் மிகுதியாக இருந்தோம். அஷ்ரஃப் அவர்கள் கிண்ணியாவைச் சேர்ந்த மௌலவி ஹஸன் அவர்களையும் அழைத்துக் கொண்டு வந்தார்.

'பாரூக் எங்கே இந்த ஆட்கள் எல்லாம்' என்று என்னைப் பார்த்துக் கேட்டார். இவ்வளவு நேரமும் பார்த்து இருந்து விட்டுச் சென்று விட்டார்கள் என்றேன். நான் எனது சமூகத்திற்காக இரவு முழுக்கத் தூங்காமல் விழித்திருந்து கட்சியைக் கட்டியெழுப்பினேன்.

இவர்கள் எல்லோரும் நான் வரும் வரையிலும் இரண்டு மணித்தியாலம் இருக்க முடியாமற் போய் விட்டது என்று கவலைப்பட்டார். எனினும் அவர் அப்பொழுது வாருங்கள் இருப்பவர்களைக் கொண்டு உயர் பீடக் கூட்டத்தை நடத்துவோம் என்றார். எனினும் ஆட்களில்லை.

மூன்று பேர்களை இடை நிறுத்த வேண்டும் என்றார். புத்தளம் டொக்டர் இல்லியாஸ், சுந்தரமூர்த்தி அபூபக்கர், சுஹைர் ஆகிய மூவரும் ஆவார்கள். இவர்கள் கட்சிக்கு மாறுபாடாக நடந்தவர்கள். அது உண்மைதான். உடனே தீர்மானம் எடுங்கள் என்றார். அது பற்றி பேசுவதற்கு உயர் பீட உறுப்பினர்கள் போதாது. எனினும் குறிப்பிட்ட ஒரு சிலர் வந்திருந்தார்கள். அதன் போது எம். ஐ. எம். முகைதீன் உடன் எழுந்து இந்த சபைக்கு அதிகாரம் இல்லை என்றார்.

அப்போது எனக்கு ஒன்றும் செய்ய முடியாது. கூட்டத்தை ஒத்திப்போட வேண்டி நிலை எனக்கு ஏற்பட்டது. அப்போது அஷ்ரஃப் அவர்கள் ' இந்த சட்ட திட்டங்கள் எல்லாமே பிரயோசனமில்லை. எமக்கு உள்ளதென்று இருப்பது மனச்சாட்சி ஒன்றுதான்.

அது ஒன்றுதான் உண்மையான சாட்சியும் நல்ல தெளிவாகவும் தெரிவாகவும் தெரியும் என்றார். அத்துடன் அவர் இரண்டு விசயங்களை கவனத்தில் கொள்ள வேண்டும் என்றார். எப்பொழுதும் உங்கள் கை சுத்தமாக இருக்க வேண்டும். உங்கள் மனச்சாட்சிக்கு எது சரி என்று படுகிறதோ அதை நீங்கள் செய்யுங்கள் என்று கூறினார். மூன்றாவதாக நீங்கள் ரொம்ப களைப்படைந்து இருக்கிறீர்கள். நீங்கள் கண்டிக்கு செல்லுங்கள் என்று கூறினார். உங்கள் வேலைகளை உங்கள் உதவி செயலாளர் பாரூக் மஜீத் அவர்களிடம் பாரம் கொடுங்கள். நீங்கள் வீட்டுக்கு செல்லுங்கள் என்றார். அவர் ஒரு நாளும் சொல்லாத வார்த்தைகளாகும். அவர் அம்பாறைக்கு ஹெலிகொப்டரில் செல்வதற்கு முன் குறிப்பிட்டார்.

தொடரும்...

# நான் ஒரு நன்றி கெட்ட பழைய மாணவன்!

நான் ஒரு
நன்றி கெட்ட
பழைய மாணவன்!
கல்லூரி தந்த
அனைத்துக் கொடைகளோடும்
வாழ்க்கை
கொழுத்துக் கிடக்கிறது..!
ஆனால்,
அரவணைத்து வளர்த்த
கல்லூரி மட்டும்
அப்படியே இருக்கிறது!
நான் ஒரு
நன்றி கெட்ட
பழைய மாணவன்!
கல்லூரியின்
வாசற்கதவுகளைக் கடந்து
வெளியேறினேன்!
கல்வி என்னும்
மந்திரச்சாவி
வாழ்க்கையின் அத்தனை
வண்ணக்கதவுகளையும்
திறந்து தந்தது!
மாடமாளிகையைப்
பரிசளித்த
பாடசாலை என்னும்
பாலூட்டிய தாய்..
தேய்ந்து குன்றி
இன்னும்
தெருவிலேயே கிடக்கிறாள்!
வாழ்க்கையைக் கடக்கும் போது
தலைநிமிர்ந்து செல்லும் நான்,
கல்லூரியைக் கடக்கும் போது
தலைகுனிந்து செல்கிறேன்!
ஏனெனில்,
நான் ஒரு
நன்றி கெட்ட பழைய மாணவன்!
டிகிரி பெற்று
சுப்பிரி சம்பளத்தில்
சுகமாய்ச் சேர்ந்தேன்...
கல்லூரியைச் சொன்னதில்லை..!
ஏசி அறையில்
தூசி படியாமல்
தூக்கலாய்ச் சிரித்தேன்..
கல்லூரியைச் சொன்னதில்லை..!
வரவு கூடி
சிறகு கோடிச்
சேர்த்து அடித்தேன்..!
கல்லூரியைச் சொன்னதில்லை..!
உற்ற மனைவிக்கும்
பெற்ற பிள்ளைக்கும் கூட
கற்ற கல்லூரியைக்
காட்ட மறுத்தேன்..
பழைய மாணவர்
வட்சப் குரூப்பில்
அழைப்பு வந்த போதும்..
அசைய மறுத்தேன்!
நான் வேறென்ன..
நன்றி கெட்ட ஒரு
பழைய மாணவன்!
தோளில் கைபோட்டுத் திரிந்தவன்
நடந்து செல்கிறான்..
காரின் கறுப்புக் கண்ணாடிக்குள் நான்
மறைந்து கொள்கிறேன்..!
கண்டீனில்
பனிசில் பாதி
பகிர்ந்து தின்றவன்
பார்த்துச் சிரிக்கிறான்..
பக்கத்தில் வந்து
பேசி விடுவானோ என்ற அச்சத்தில்
வேறு ஆள் போல
வேஷம் போடுகிறேன்!
ஊருக்கு வந்தால்
ஜும்மா நாளையும்
அடுத்த ஊரில்
ஆக்கிக் கொள்கிறேன்...
கட்டட நிதி என்றும்
பள்ளிவாசல் Fund என்றும்
ஃபலோ பண்ணி விடுவார்களோ என்று
பயப் படுகிறேன்..!
என்னை உருவாக்கிய
ஊரும்
எனக்கு உரமாகிய பாடசாலையும்...
தப்பித் தவறியேனும்
கண்ணில் பட்டுவிடக் கூடாது என்ற
கரிசணை எனக்கு...!
ஏனென்றால்..
நானொரு.. நானொரு..
நன்றி கெட்ட பழைய மாணவன்!
நன்றி கெட்ட தனத்தோடு
எத்தனை காலத்துக்குத் தான்
நாட்களைக் கடப்பது..?
புத்தகங்களாலும் சிந்தனைகளாலும்
முத்துக்கள் பதிக்கப் பட்ட
இந்த வாழ்க்கை என்னும் பளிங்கு
மாளிகைக்குக் வழிகாட்டிய
மதீனாத் தாயை
எத்தனை காலம் தான்
மறந்து வாழ்வேன்..!!
வாழ்க்கையின்
வசீகரங்களை
வசப்படுத்தும்
வித்தையை
நிசப்தமாக் கற்றுத் தந்து நிசப்ப் படுத்திய அந்த
நேர்மை மிகுந்த வகுப்பறைகள் எங்கே..?
புதிர் மிக்க
எதிர்காலத்தைப்
புயலாய் எதிர் கொண்டு
புரிதல் மிக்கதாய்
வடிவமைக்க
திரைமறைவில்
தீயாய் உழைத்த எம்
ஆசிரியத் தியாகிகள் எங்கே..?
ஓ..
Back to school..
கற்ற கலையகத்தைக் காணும் தாகத்தோடு
அலைந்து திரிந்த
எமக்கு
ஸம் ஸம்மாய் ஊற்றெடுத்த
உன்னத தருணமே...!
கற்ற கல்லூரியை மறந்து
குற்ற உணர்வோடு
வாழ்ந்த எமக்கு
உற்ற வரமாய் வாய்த்த
வரப்பிரசாதமே..
இதோ வந்து விட்டோம் நாமும்
Back to school!!

***கவிதையை இயற்றியவர் :– மடவளை அன்சார்.எம் ஷியாம்***
*(கவிதைக்கான கரு – Fouz A Cader)*

# மும்மானை முஸ்லிம் வித்தியாலயம் – ஓர் அறிமுகம்

வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் கடுகம்பல தேர்தல் தொகுதியில் மும்மானை எனும் அழகிய கிராமத்தில் அமைந்துள்ளதே மும்மானை முஸ்லிம் வித்தியாலயமாகும். இப்பாடசாலையின் வரலாற்றை நோக்கின் அது மிகவும் பழமையானது. 1958ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மாணவர்கள் எமது ஊருக்கு அண்மையிலுள்ள கல்கமுல்லை எனும் சிங்களப் பாடசாலையில் கல்வியைத் தொடர்ந்தார்கள்.

சிறிது காலத்தின் பின் எமது ஊருக்கு பாடசாலை ஒன்று அவசியம் என உணரவே, 1960ஆம் ஆண்டு காலப்பகுதியில் தற்போது வேத்தேவ பாடசாலை அமைந்திருக்கும் காணியில் சிங்கள, முஸ்லிம் சகோதரர்கள் இணைந்து ஒரு பாடசாலைக் கட்டடத்தைக் கட்டினார்கள். இப்பாடசாலையில் மாணவர்கள் தமது கல்வியை சிறந்த முறையில் தொடர்ந்தார்கள்.

சிறிது காலத்தின் பின்னர், சில பிரச்சினைகள் ஏற்படவே, முஸ்லிம் மாணவர்களுக்கென ஒரு தனிப்பாடசாலை அவசியம் என உணர்ந்து கொண்ட எம் முன்னோர்கள் 1961ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் முன்னைய மையவாடி காணியில் மண்ணால் கட்டியெழுப்பப்பட்ட கட்டடத்திற்கு ஓலைகள் வெய்து மிகவும் எளிமையான முறையில் எமது பாடசாலையான மும்மானை முஸ்லிம் வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டது.

1962.07.15ஆம் திகதி முஸ்லிம்களுக்கென ஒரு தனிப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு மும்மானை முஸ்லிம் வித்தியாலயம் எனவும் பெயர் சூட்டப்பட்டது. இந்நிகழ்வு எமது கிராமத்திற்கு ஒரு முக்கிய நிகழ்வாக அமைந்தது எனலாம். இப்பாடசாலையின் முதல் அதிபரான S.L.M சுபைர் ஆசிரியரின் தலைமையில் மூன்று ஆசிரியர்களையும் நாற்பத்தெட்டுமாணவர்களையும் கொண்டு இப்பாடசாலைஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலையின் முதல் மாணவராக M.I.M புவைஸ் அவர்கள் இணைந்து கொண்டார்கள். அடுத்த அம்சமாக இரண்டாவது அதிபராக கடமையாற்றிய M.M.M மஹ்மூத் ஆசிரியரின் காலப்பகுதியில் கல்வி அமைச்சராக இருந்த பதியுதீன் மஹ்மூத் அவர்களால் எமது பாடசாலைக்கு இன்னுமோர் கட்டடம் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஆசிரியர் விடுதி, இன்னுமொரு கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா என்பனவும் M.S.M அடுமை அதிபர் அவர்களின் காலத்தில் நடைபெற்றது.

1969ஆம் ஆண்டு காலப்பகுதியான இக்காலப் பகுதியைப் பொறுத்தவரையில் எமது பாடசாலை ஒரு முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. தொடர்ந்து வந்த காலப்பகுதியில் எமது பாடசாலையைப் பொறுத்தமட்டில் பௌதீக வளப்பற்றாக்குறை, ஆசிரியர் பற்றாக்குறை என்பன தலைதூக்க ஆரம்பித்தது. முக்கியமான பாடங்களுக்கான ஆசிரியர்கள் இன்மையால் மாணவர்கள் பல அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. சிறிது காலத்தின் பின் அப்பிரச்சினைகள் நிவர்த்தி செய்யப்படவே மாணவர்கள் தமது கல்வியை சுமுகமான முறையில் தொடர முடிந்தது.

எமது பாடசாலையை பொறுத்தமட்டில் மிகவும் அர்ப்பணிப்புடனும் தியாகத்துடனும் சேவையாற்றிய பல அதிபர்கள், பிரதி அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் நினைவு கூரத்தக்கவர்களாவர். தற்போது எமது பாடசாலையானது கல்வி, இணைப்பாடவிதான செயற்பாடுகள் வேறு நிறுவனங்களால் நடாத்தப்படும் போட்டி நிகழ்வுகளிலும் மாகாண மட்டரீதியில் வெற்றிபெற்ற வண்ணம் உள்ளனர்.

எமது பாடசாலை முன்மாதிரியாக திகழ்வதற்கு முக்கிய வகி பங்கினையுடையவர்களான ஆற்றலும், ஆளுமையும் மிக்க அதிபர், மாணவர்களின் கல்வியிலும் ஏனைய செயற்பாடுகளிலும் வழிகாட்டிகளாக திகழும் ஆசான்கள், அக்கறையுடன் பிள்ளைகளின் கல்வித் தேவைகளை வழங்கும் பெற்றோர்கள், நலன்விரும்பிகள் போன்றோரின் அயராத முயற்சி என்றே கூற வேண்டும்.

மேலும் கடந்த வருடம் க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் நூறு வீத சித்தியைப் பெற்று கிரியுல்ல கல்வி வலயத்தில் முதலாம் இடத்தைச் சுவீகரித்துக் கொண்டது குறிப்பிடத்தக்கது. மேலும் 5ஆம் தரப்புலமைப் பரிசில் பரீட்சையில் எமது பாடசாலை மாணவர்கள் சிறந்த பெறுபேற்றை பெற்றுள்ளனர். இக்காலப்பகுதியில் U.L.M உவைஸ் அதிபராகக் கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. எமது பாடசாலையைப் பொறுத்தமட்டில் பௌதீக வளப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக (மாணவர்களின் வகுப்பறைப் பிரச்சினைகளை) நிவர்த்தி செய்து கொள்ளும் முகமாக 'ஹிமா' பவுண்டேசன் நிறுவனத்தினால் எமக்கு இரண்டு மாடிக்கட்டடம் ஒன்று அன்பளிப்பாக கிடைக்கப்பெற்றது.

இதன் மூலம் எமது பாடசாலைக்கு நீண்ட காலமாக குறைபாடாக காணக்கூடிய மாணவர்கள் உயர்தர வகுப்புக்கள், விஞ்ஞான ஆய்வு கூடம், நூல் நிலையம், தகவல் தொழிநுட்ப கூடம், உள்ளக விளையாட்டுத் திடல், அதிபர் அலுவலகம், ஆசிரியர் ஓய்வு அறை என்பவற்றை நிவர்த்தி செய்து கொள்ள முடியுமாகவுள்ளது.

தற்போது எமது பாடசாலையானது M.L.M அர்ஷாத் அதிபர் அவர்களின் தலைமையின் கீழ் பதினேழு பேர் கொண்ட ஆசிரியர் குழாமும் சுமார் 250 மாணவர்களையும் கொண்டு சிறப்புடன் இயங்கிக் கொண்டிருக்கிறது.

எனவே, இப்பாடசாலையின் உயர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் அன்றிலிருந்து இன்றுவரையிலான அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய அதிபர்கள், ஆசான்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், ஊரின் அபிவிருத்திக்காக பாடுபடும் சங்கங்களின் உறுப்பினர்கள் குறிப்பாக எமக்கு இந்த இரண்டு மாடிக்கட்டடத்தை பெற்றுத்தந்த அல்ஹிமா இஸ்லாமிய சேவை அமைப்பின் தலைவர் அஷ்ஷெய்க் நூருல்லாஹ் (நளீமி) பீ.ஏ. அவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


எம்.எல்.எம். அர்ஷாத்
அதிபர்


ஏ.ஜே.எம். அரூஸ்
பிரதி அதிபர்

## அல்–ஹிமா இஸ்லாமிய சேவை அமைப்பின் தலைவர் நூருல்லாஹ் (நளீமி) வாழ்த்து



முஸ்லிம்கள் இந்த நாட்டில் நீண்ட வரலாற்றைக் கொண்டவர்களாகும். வியாபாரத்தில் தலைசிறந்து காணப்பட்டாலும் இன்று அது வீழ்ச்சியடையத் துவங்கியுள்ளது. மறுபுறத்தில் அவர்கள் கல்வியிலும் மிகமோசமான வீழ்ச்சியில் இருக்கின்றார்கள்.

சுதந்திரத்துக்குப் பின்னர் இலங்கை முஸ்லிம்களை வழி நடாத்திய தலைவர்கள், குறிப்பாக சேர். ராஸிக் பரீத், முன்னாள் கல்வி அமைச்சர் பதியுத்தீன் மஹ்மூத், பேருவளையைச் சேர்ந்த கொடைவள்ளல் மர்ஹூம் M.I.M நளீம் ஹாஜியார் போன்றவர்கள் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து சமூக மாற்றத்திற்கு அரும் பாடுபட்டார்கள்.

இலங்கையில் ஏறத்தாழ 800க்கும் மேற்பட்ட பாடசாலைகள் முஸ்லிம் கிராமங்களில் வியாபித்துக் காணப்படுகின்றன. சில பாடசாலைகள் மூடப்படக்கூடிய அபாயத்திலும் இருக்கின்றன. முஸ்லிம் சமூகம் கல்வித்துறையில் மிகவும் பின் தங்கியிருப்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

போதுமான வகுப்பறைகள் இல்லாமை. நூல் நிலையம், விஞ்ஞான ஆய்வு கூடம் துறை சார்ந்த வகுப்பறைகள், தங்குமிட வசதிகள் எல்லாம் இல்லாமல் இருப்பதுவும் இவ்வீழ்ச்சிக்கான காரணங்களாகும். 2002 ஆம் ஆண்டுகள் எலியவில் ஸ்தாபிக்கப்பட்ட எமது நிறுவனம் முஸ்லிம் சமூகத்தின் கல்விக் கரத்தை உயர்த்துவதை பிரதான நோக்காகக் கொண்டு செயற்படுகிறது.

இத்திட்டம் ஆரம்பித்தது தொடக்கம் இதனை இத்தோற்றத்தில் நிறைவு பெறச் செய்வதற்கு முழுமையாக ஈடுபட்டு ஒத்துழைத்த அல்ஹாஜ் பஸ்லி, பாடசாலை அதிபர்கள், அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுக்கும் எனது ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.


அல் – ஹிமா நிதியுதவியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய வகுப்பறைக் கட்டடம்


பாடசாலை அபிவிருத்திச் சங்கம்


ஆசிரியர் குழாம்


மாணவத் தலைவர்கள்


முகாமைத்துவக் குழு


கல்விசாரா ஊழியர்கள்

# தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய ஏற்பாட்டில்

# நாளை மாணவர் கௌரவிப்பு நிகழ்வு

























கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக தனது பிராந்தியத்திலும் நாட்டின் பல பகுதிகளிலும் சமூக நலப்பணிகளில் தன்னை அர்ப்பணிப்பு செய்து கொண்டிருக்கும் தர்கா நகரைச்சேர்ந்த நஜீப் பின் அமீர் ஆலிமுக்கு அண்மையில் சர்வதேச மனித உரிமைகள் அமைப்பின் இலங்கைக்கான இணைப்பாளர் பதவியொன்று வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி அமைப்பின் இலங்கைக்கான தலைவர் அமீர் கானின் தலைமையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற மகாநாட்டு நிகழ்வின் போதே அப்பதவிக்கான நியமனப்படிவம் கையளிக்கப்பட்டது.

சபாநாயகர் மஹிந்த யாப்பாவின் புதல்வர், பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க மற்றும் பௌத்த, இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய சர்வ மதத் தலைவர்கள் உள்ளிட்ட பிரமுகர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி கௌரவ பதவி உள்ளிட்ட பட்டம் பதவிகள் கிடைத்துள்ளமை குறித்து, நஜீப் ஹாஜியாரை நேர்கண்டு வினவியபோது அவர் குறிப்பிட்டதை எமது வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்.

நான் பட்டம் பதவிகளை நாடியோ, தேடியோ செல்லக் கூடியவனல்ல. சமூகப் பணி என்பது எமது உடன் பிறந்த குணமாகும். அதுவும் நான் இளமைப் பருவத்தில் வறுமையின் பிடியில் சிக்கி கல்வி பெறுவதில் அனுபவித்த இன்னல்கள் துன்பங்களின் விளைவே இன்று என்னை சமூக நலப் பணிகளில் ஈடுபடத் தூண்டின. அதற்காகவே இப்போது பட்டங்களும் பதவிகளும் என்னை தேடி வந்து கொண்டிருக்கின்றன.

அல்லாஹ் ஒருவருக்கு பணம், அறிவு மற்றும் ஆற்றல்களை வழங்குகின்றான். இத்தகைய நிஃமத்துக்களை சமூகத்தின் எழுச்சிக்கும் உயர்வுக்கும் பயன்படுத்த முன்வர வேண்டும். இவற்றை 'ஸதகத்துல் ஜாரிஆ' எனும் நிலையான தர்மச் செயல்களில் பயன்படுத்த வேண்டும். அப்போதுதான் அல்லாஹ்வின் திருப்பொருத்தம் கிடைக்கும். இதனை நாடியே எனது பணிகள் அமைகின்றன. இதன் விளைவாகவே சமூக அமைப்புகள் மூலம் எனக்கு பட்டம் பதவிகள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. கிடைப்பதை தட்டிக்கழிப்பதும் நல்லதல்ல. இந்த நிலைப்பாட்டிலே தான் நான் இருந்து கொண்டிருக்கிறேன்.

நஜீப் ஹாஜியார் தொடர்ந்தும் கூறியதாவது,

எனது இளமைப்பருவத்தில் கல்வியைத் தொடர்வதில் நான் பலதரப்பட்ட இடர்பாடுகளைச் சந்தித்தேன். கல்வியை இடை நடுவே கைவிட்டேன். பின்னர் அரபு மத்ரஸாவில் இணைந்தேன். அப்போதும் வறுமை காரணமாக தொடர முடியாது உழைப்பில் இறங்கினேன். கோப்பி வியாபாரம், பள்ளிவாசல்களில் பேஷ் இமாம் என்று தொழில் செய்து வந்தேன். பின்னர் மத்திய கிழக்கு சென்று உழைத்த நிலையில் பிற்காலத்தில் அங்குள்ள நீதித்துறையில் மொழிபெயர்ப்பாளராக கடமையாற்றி இன்றுள்ள நிலையை அடைந்துள்ளேன்.

கல்வி பெறுவதில் வறுமை தடையாக அமையக்கூடாது. கற்கும் வரிய பிள்ளைகளுக்கு கை கொடுக்க வேண்டும் என்ற மனம் இருந்த போதும் பணம் இருக்கவில்லை. இன்று அந்த வசதி கிடைத்துள்ளது. அதனால் ஏழை பிள்ளைகளின் கல்விக்கு உந்து சக்தியாக உதவி வருகிறேன்.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தகுதி பெறும் மாணவ மாணவிகளுக்கு ஆண்டு தோறும் பரிசில்கள் வழங்கி ஊக்குவித்து வருகிறேன். இன்று எமது களுத்துறை மாவட்டத்தை உள்ளடக்கி இப்பணி தொடர்கிறது. மேலும் கற்றல் உபகரணங்கள், பாதணிகள், பாடசாலை பைகள் என்று கல்விப் பணிகளுக்கு உதவி வருகிறேன். மேலும் சாதாரண தரம், உயர்தரம், பல்கலைக்கழகம் நுழைவு என்று திறமை காட்டும் பிள்ளைகளுக்கும் ஊக்குவிப்பாக அன்பளிப்புகள் வழங்கி வருவதும் எனது பணியாக உள்ளது.

தர்கா நகரில் சொந்தமாக காணியொன்று எனது குடும்பத்தார் சகிதம் கொள்முதல் செய்து எனது பெயரில் கல்வி நிலையம் ஒன்றை 2015 முதல் நிறுவி இன்று வரை சிறப்பாக இயங்கி வருகிறது. மூன்று மாடிகளைக் கொண்ட இம் மண்டபத்தில் தொழுகை அறை, வாசிகசாலை, இலவச குர்ஆன் மத்ரஸா என்று பல பிரிவுகள் உள்ளன. வாசிகசாலையில் அரபு, ஆங்கிலம், சிங்களம், தமிழ் உள்ளிட்ட மொழிகளில் கிடைப்பதற்குரிய பெறுமதி, தரம் வாய்ந்த நூல்கள் உள்ளன. ஆய்வுத் துறையில் ஈடுபடுவோருக்கு வரப்பிசாதமாக உள்ளன. இம் மண்டபத்தில் ஆய்வு, கருத்தரங்குகள், கல்வி பயிற்சி நெறிகள் கூட இடம்பெறுவதும் குறிப்பிடத்தக்கது. எதிர்காலத்தில் மிகவும் உயர்ந்த கலாசார நிலையமாக பிரகாசிக்க செய்வதே எனது இலட்சியமாகும்.

தூர இடங்களில் சம்பவிக்கும் ஜனாஸாக்களை உரிய இடங்களுக்கு கொண்டு செல்வதில் எமது சமூகம் சந்திக்கும் இடர்களை நிவர்த்திக்கும் வண்ணம் இலவச ஜனாஸா வாகனம் ஒன்றும் சேவையில் ஈடுபடுத்தி வருகிறேன். கட்டுநாயக்க விமான நிலையம் மற்றும் கிழக்கு மாகாணம் வரையிலும் இந்த வண்டி பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

களுத்துறை மாவட்டத்தின் பல முஸ்லிம் கிராமங்களில் புதிதாக பள்ளிகள் கட்டிக் கொடுப்பதுடன் பல பள்ளிகள் புனர் நிர்மாணித்துக் கொடுத்தும் உள்ளேன். இதே போன்று காலி சோலை முஸ்தபவிய்யா பள்ளியின் கட்டட நிர்மாணத்துக்கும் பங்களித்துள்ளேன்.

இவற்றைத் தவிர தண்ணீர் குழாய், கிணறுகள் அமைத்துக் கொடுத்துள்ளதையும் நினைவு கூருகிறேன். இப்பணிகள் எவ்வித பேதமின்றி தொடர்ந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக வவுனியாவில் அநாதைகள் இல்லம் ஒன்றையும் அமைத்து கொடுப்பதிலும் உதவியுள்ளேன்.

தர்கா நகர் அல்ஹம்ரா மகா வித்தியாலயத்திற்கு எனது பெயரில் சிறுவர் பூங்கா, அழுத்கம வீதி முஸ்லிம் பாலிகா தேசிய பாடசாலைக்கு தொழுகை அறை போன்றனவும் எனது பணிகளில் அடங்குகின்றன. சிறு சிறு பணிகள் இன்னும் பல உள்ளன அவற்றை விவரிக்க விரும்பவில்லை.

'பேருக்கும் புகழுக்காகவும் இவற்றைச் செய்யவில்லை. அல்லாஹ்வின் திருப்பொருத்தமே எனது நாட்டமாகும்'.

படிக்க வசதியின்று பரீட்சையில் தோல்வியுற்றாலும் வாழ்க்கையில் தோல்வியுரவில்லை. என்பதற்கு சான்றாக 2022ல் இலங்கை சாதனையாளர் விருது, தேசமானிய பட்டம், அமெரிக்க வணிக சர்வ கலாசாலையில் கலாநிதி பட்டம், துபாய் நட்சத்திர ஹோட்டலில் வைபவம் ஒன்றில் கௌரவம், ஐ.நா.மனித உரிமைகள் அமைப்பில் விசேட ஆயுட்கால உறுப்பினராக நியமனம் என்றெல்லாம் பட்டங்களும் பதவிகளும் என்னை நாடி வந்து கொண்டிருக்கின்றன.

எனது வாழ்க்கை வரலாறு பற்றிய தகவல்கள் அடங்கிய இரு நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. 2013 ஆம் ஆண்டில் "நெஞ்சம் நிறைந்த நஜீப் ஹாஜியார் " என்ற பெயரில் தமிழில் ஒரு நூலும் 2022 ஆம் ஆண்டில் "மாஸீரத் கிபா" என்ற பெயரில் அரபு மொழியில் மற்றுமோர் நூலும் வெளியிடப்பட்டது.

சரித்திரப் பிரசித்திபெற்ற தர்கா நகரின் 800 வருடகால வரலாறு தொடர்பான "தர்கா நகர் பொக்கிஷங்கள்" என்ற நூல் ஒன்றையும் எமது கல்வி நிலையம் வெளியிட்டதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். நஜீப் ஹாஜியார் சுயசரிதையின் இரண்டாம் பாகம் தமிழ் மொழியிலும் ஆங்கில மொழியிலும் இந்த வருடம் (2024) வெளிவரவுள்ளது. அல்லாஹ்வின் உதவியால் இந்தக் கல்வி நிலையத்தின் மூலம் எதிர் காலத்திலும் பாரிய பணிகளை செய்ய உத்தேசித்துள்ளேன் என்றார்.

பேருவளை விசேட நிருபர்

# கண்ணிவெடிகள் அகற்றப்பட்ட பகுதிகளை ஜப்பான் தூதரக அதிகாரிகள் நேரில் பார்வை

**பரந்தன் குறூப் நிருபர்**

கிளிநொச்சி, முகமாலை மற்றும் யாழ்ப்பாணம், கேரதீவு பகுதிகளில் ஜப்பான் நாட்டின் நிதி உதவியுடன் நிலக் கண்ணிவெடிகள் அகற்றப்பட்ட பகுதிகளை நேற்று வியாழக்கிழமை ஜப்பானிய தூதரக அதிகாரிகள் சென்று பார்வையிட்டுள்ளனர்.

கிளிநொச்சி, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட முகமாலை மேம்பெடுகேணி பகுதியில் ஜப்பான் நாட்டின் நிதி உதவியுடன் வெடிபொருள் அகற்றும் பணியை மேற்கொண்டு வரும் கண்ணிவெடி அகற்றும் மனிதாபிமான நிறுவனமான டாஸ் நிறுவனத்தினால் வெடிபொருட்கள் அகற்றப்பட்ட நிலையில் நிறைவுறுத்தப்பட்ட பகுதிகளை ஜப்பானிய தூதரக அதிகாரிகள் நேரடியாக சென்று பார்வையிட்டுள்ளனர். கண்ணிவெடிகள் அகற்றப்பட்ட காணி உரிமையாளர்களோடும் அவர்கள் கலந்துரையாடியுள்ளனர்.



இதனைத் தொடர்ந்து கேரதீவு பகுதிக்கும் மேற்படி குழுவினர் சென்றனர். அப்பகுதியில் கடற்கரையோரங்களில் கடற்றொழிலாளர்களின் தொழில் நடவடிக்கைகளை பாதிக்கும் வகையில் கடற்கரையோரங்களில் அடையாளம் காணப்பட்டு வெடிபொருட்கள் அகற்றப்பட்ட பகுதிகளை சென்று இந்தக் குழுவினர் பார்வையிட்டுள்ளனர். தற்போது அப்பகுதிகளில் கடற்றொழிலில் ஈடுபடுகின்ற கடற்றொழிலாளர்கள் மற்றும் அந்த பிரதேச மக்களுடனும் ஜப்பானிய தூதரக அதிகாரிகள் கலந்துரையாடியுள்ளனர்.

ஜப்பான் நாட்டின் உயர் அதிகாரியான அடிமட்ட மனித பாதுகாப்பு திட்டங்களுக்கு உதவி வழங்குதல், பொருளாதார ஒத்துழைப்பு அமைப்பின் ஆலோசகர் கடோ அகிகோ மற்றும் ஜப்பான் நாட்டின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் செயலகத்தின் அதிகாரி ஆகியோரே நிலக் கண்ணிவெடிகள் அகற்றப்பட்ட பகுதிகளை சென்று பார்வையிட்டுள்ளனர்.

## வடக்கின் உதயம்

## சாவகச்சேரி பொலிஸ் நிலைய பரிசோதனை



**சாவகச்சேரி விசேட, யாழ். விசேட நிருபர்கள்**

யாழ்ப்பாணம், சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின் வருடாந்த பொலிஸ் பரிசோதனை நேற்று வியாழக்கிழமை காலை நடைபெற்றது.

சாவகச்சேரி பொலிஸ் நிலைய தலைமை பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தலைமையில் நடைபெற்ற இப்பொலிஸ் பரிசோதனையில் யாழ்ப்பாண மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சூரியபண்டார கலந்து கொண்டு பரிசோதனையை நடத்தினார்.

இதன்போது வாகனங்கள், பொலிஸ் உத்தியோகத்தர்களின் விடுதிகள் ஆகியன பரிசோதனை செய்யப்பட்டன.

# யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் புதுமுக மாணவர் அறிமுக நிகழ்வு





**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாண பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்துக்கு தெரிவு செய்யப்பட்டு, பதிவு செய்த புதுமுக மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் மற்றும் அறிமுக நிகழ்வு நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடாதிபதி பேராசிரியர் என்.கெங்காதரன் தலைமையில் கலாசாலை வீதியில் அமைந்துள்ள முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

2022ஆம் ஆண்டு நடைபெற்ற கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சையில் சித்தியடைந்து தொழில் நிர்வாகமாணி மற்றும் வணிக மாணி கற்கைநெறிகளுக்கு தெரிவு செய்யப்பட் சுமார் 600 புதுமுக மாணவர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

பல்கலைக்கழகத்தின் பதிவாளர், நூலகர், மாணவர் நலச்சேவைகள் பணிப்பாளர் மற்றும் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட துறை தலைவர்கள், இணைப்பாளர்கள் உள்ளிட்டோர் மாணவர்களுக்கான வழிகாட்டல் மற்றும் அறிமுக உரைகளை நிகழ்த்தினர்.

# முல்லைத்தீவு மாவட்டத்தில் வெற்றிகரமாக கறுவா செய்கை

**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**



முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்றுமதிப் பயிரான கறுவாச் செய்கை வெற்றி கண்டுள்ளதாக ஒட்டுசுட்டானில் அமைந்துள்ள அம்மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தின் பண்ணை முகாமையாளர் லி.துமிலன் தெரிவித்தார்.

பொதுவாக மத்திய மலைநாட்டில் இது நன்கு வளரக்கூடியது. கண்டி, மாத்தளை, ஹப்புதலை போன்ற பகுதிகளிலும் சிங்கராஜ வனப் பகுதிகளிலும் கறுவா பயிர் செய்யப்படுகின்றது.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் சாதாரணமாக வீடுகளில் இது வளர்க்கப்படுகின்றது. வர்த்தக நோக்கம் இல்லாவிட்டாலும் வீட்டுத் தோட்ட செய்கையாக இது பயிரிடப்படுகின்றது. இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் ஒட்டுசுட்டானில் அமைந்துள்ள மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் கறுவாச் செய்கை மேற்கொள்ளப்படுகிறது.

அத்துடன் கறுவாப் பட்டை பெற்றுக் கொள்ளும் செயல்முறை ரீதியான பயிற்சிகளும் விவசாயிகளுக்கு நடத்தப்படுகின்றன. தேவையான தரமான கறுவா நடுகை பொருட்களை இங்கு பெற்றுக்கொள்ளலாம்.

கறுவா செய்கை தொடர்பில் விவசாயிகள் மேலதிக தகவல்களை ஒட்டுசுட்டான் மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நீதிமன்றிலிருந்து திரும்பியவர் மீது வாள்வெட்டு முயற்சி

**55 நாட்களின் பின்னர் ஒருவர் கைது**

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு சென்று விட்டு வீடு திரும்பியவரை வாளால் வெட்ட முயன்ற குற்றச்சாட்டில் சுமார் 55 நாட்களின் பின்னர் இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மே மாதம் 30ஆம் திகதி நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு விசாரணைக்கு சென்று விட்டு வீடு திரும்பியவரை நீதிமன்ற கட்டட தொகுதிக்கு அருகில் வைத்து மூவர் அடங்கிய வன்முறை கும்பல் வாளால் வெட்ட முயன்றுள்ளனர். வன்முறை கும்பலின் தாக்குதலில் இருந்து தப்பித்த இந்த இளைஞர் நீதிமன்றில் தஞ்சமடைந்துள்ளார்.

மூவரையும் கைது செய்வதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்த நிலையில், மூவரும் தலைமறைவாகி இருந்தனர். இந்நிலையில் இம்மூவரில் ஒரு சந்தேக நபர் கைதானார்.

## களுத்துறை மாவட்ட செயலக கட்டடத்தில் தீ விபத்து

**(பாணந்துறைமத்திய குறூப் நிருபர்)**



களுத்துறை மாவட்ட செயலக கட்டடத்தின் தள மாடியில் நேற்று (24) காலை திடீரென தீப்பிடித்துள்ளது.

இதனையடுத்து ஏழு மாடிகளைக் கொண்ட கட்டடத்தில் அமைந்துள்ள அரச பணிமனைகளில் பணியாற்றும் ஊழியர்களும் பல்வேறு தேவைகளுக்காக வந்திருந்த பொதுமக்களும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர். தீயணைப்புப் படையினர் தீயை கட்டுப்பாட்டில் கொண்டுவரும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

மாவட்ட செயலக கட்டட தொகுதியின் தள மாடியில் ஏற்பட்ட மின்சார ஒழுக்கின் காரணமாகவே தீ ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. களுத்துறை தெற்கு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# வடமேல் மாகாண சபையின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு சம்பள உயர்வு

வடமேல் மாகாண சபையின் மனித வள அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் செயற்படும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கான சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்த முக்கிய கலந்துரையாடலொன்று நேற்றுமுன்தினம் (24) நடைபெற்றது.

வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் தலைமையில் நடைபெற்ற குறித்த கலந்துரையாடலில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் வாழ்வாதார பிரச்சினைகள், தொழில் பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டன.



பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் பிரச்சினைகளைக் கவனமாகக் கேட்டறிந்த ஆளுநர் நஸீர் அஹமட், தங்கள் வாழ்க்கைச்செலவுக்கான வருமானத்தை தேடிக் கொள்வதற்காகவே அனைவரும் தொழில்களில் ஈடுபடுகின்றனர். குறைந்த சம்பளத்தில் நீண்டகாலமாக மாகாண சபையின் கீழ் செயற்பட்டுக்கொண்டிருக்கும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாகவும், ஏனைய சகல பிரச்சினைகள் குறித்தும் தான் தீவிர கரிசனை கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதனடிப்படையில் பாதுகாப்பு ஊழியர்களின் பிரச்சினைகளை ஒவ்வொன்றாக ஆராய்ந்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக அவர் உறுதியளித்தார்.

## நகர்வலம்

### கொழும்பு கொம்பனித்தெரு

# சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம்



கொழும்பு, கொம்பனித்தெரு அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் கடந்த 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

ஆலய பிரதம குரு சோமசுந்தர தியாகராஜ குருக்கள் தலைமையில் மஹோற்சவம் நடைபெற்றதுடன் குருக்கள் சிவ ஸ்ரீ முத்து ஸ்ரீ நிவாச குருக்கள் கொடியேற்றத்தை நடத்தி வைத்தார்.

மஹோற்சவத்தின் 6ஆம் நாளான 26ஆம் திகதி தைலாப்பியத் திருவிழாவும் தொடர்ச்சியாக 7ஆம் நாளான 27ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வேட்டைத்திருவிழாவும் 8ஆம் நாளான 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மாம்பழத் திருவிழாவும் 9ஆம் நாள் 29ஆம் திகதி திங்கட்கிழமை சப்பர திருவிழாவும் 10ஆம் நாளான 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தங்கத்தேர் பவனியும் நடைபெறும்.

31ஆம் திகதி புதன்கிழமை காலை தீர்த்த உற்சவத்தை தொடர்ந்து கொடியிறக்கமும் மறுநாள் ஆகஸ்ட் முதலாம் திகதி பூங்காவனமும் திருவூஞ்சலும் நடைபெறும். விஞ்ஞாபன நாட்களில் அன்னதானமும் வழங்கப்படும்.

# நவீன பொருளாதார மாற்றத்தில் பெரும் பாத்திரத்தை ஏற்று செயற்பட்டவர் ஜெம்லைட் ஏ.எம். இஸ்மாயில்

**முஸ்லிம் வர்த்தக சங்க தலைவர் எம்.எச். சலீம்டீன் அனுதாபம்**



ஜெம்லைட் ஏ.எம். இஸ்மாயில் ஹாஜியார். கண்டியிலுள்ள இளம் வாலிபர்களுக்கான புதிய தலைமைத்துவ வழிகாட்டல்களையும் சமூக சமய எழுச்சிகளிலும் நவீன பொருளாதார மாற்றத்திற்கான சிந்தனைகளிலும் பெரும் பாத்திரத்தை ஏற்று செயற்பட்டவர். அன்னாரின் மரணம் கண்டிக்கு பேரிழப்பாகும் என முஸ்லிம் வர்த்தக சங்கத்தின் தலைவர் எம்.எச். சலீம்டீன் தெரிவித்துள்ளார்.

ஜெம்லைட் ஏ.எம். இஸ்மாயில் ஹாஜியாரின் மறைவையொட்டி அவர் வெளியிட்டுள்ள அனுதாப செய்தியிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அவரது அனுதாபசெய்தியில்,

   a. விலைமனுதார் **ஐந்து (05) வருடங்களுக்கும்** மேலாக இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக இருக்க வேண்டும். விலைமனுதார் தனது வணிக வழக்கமான அல்லது சட்டப்பூர்வ நிலை, பதிவு செய்த இடம் மற்றும் பிரதான வணிகத்தின்இடம் போன்றவற்றின் அசல் ஆவணங்களின் பிரதிகளை வழங்க வேண்டும்.
   b. இந்த டெண்டருக்கான விலைமனுவிணை சமர்ப்பிக்கும் விலைமனுதார்கள் 1987 **ஆம் ஆண்டின்** 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும்.
   c. கேள்விக்கோரலினை சமர்ப்பிக்கும் வகையின் வாயு சீராக்கி இயந்திரங்களை வழங்குதல், நிறுவுதல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றில் மனுதாரர் **குறைந்தபட்சம் 03 வருட அனுபவம்** பெற்றிருக்க வேண்டும். (ஆவண ஆதாரங்கள் வழங்குதல் வேண்டும்).
   d. மனுதாரர், நிறுவுதல், பராமரிப்பு மற்றும் உதவி சேவைகளை வழங்குவதற்கு போதுமான நிரந்தர தொழில்நுட்ப பணியாளர்களைக் கொண்டிருக்க வேண்டும். (பணியாளர் விபரங்கள் தொடர்பு விவரங்களுடன் வழங்கப்பட வேண்டும்)
   e. மனுதாரர் இலங்கையில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் தேவையான தொடர்ச்சியான சேவைகளை (24 மணிநேரமும் 365 நாட்களும்) வழங்கும் திறனைக் கொண்டிருக்க வேண்டும்.

5. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **2024.07.25** ஆம் திகதியிலிருந்து **2024.08.14** ஆம் திகதி வரை காரியாலய வேலை நாட்களில் **09.00** மணியிலிருந்து **03.00** மணி வரையான காலப்பகுதியினுள் மீளச்செலுத்தப்படாத **ரூபா.3,000.00** கட்டணத்தை செலுத்தி **செயற்திட்டப் பணிப்பாளர், e-NIC செயற்திட்டம், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், "B" பகுதி, 10 ஆம் மாடி, ஸ்ரீ சுபூதிபுர வீதி, சுஹுருபாய, பத்தரமுல்லை** காரியாலயத்தில் எழுத்து மூல விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும். கட்டணத்தை காசாக செலுத்துதல் அவசியமாகும்.

6. பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களை **இரண்டு பிரதிகளுடன் (அசல் மற்றும் நகல்) 2024.08.15 ஆம் திகதி மு.ப.10.30 மணிக்கு முன்** பந்தி 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்திற்கு கிடைக்கப்பெறுமாறு மனுக்களை அனுப்ப வேண்டும். அல்லது **e-NIC செயற்திட்டம், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், "B" பகுதி, 10 ஆம் மாடி, ஸ்ரீ சுபூதிபுர வீதி, சுஹுருபாய, பத்தரமுல்லை** எனும் முகவரியில் மனுக்களை சேகரிப்பதற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இட வேண்டும். **மனுக்கள் 77 நாட்கள்** வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

7. ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் ஆகியவை தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். அனைத்து மனுக்களும் இலங்கை மத்திய வங்கியில் பதிவுசெய்யப்பட்டு இலங்கையில் இயங்கிவரும் உரிமம் பெற்ற வணிக வங்கியினால் வழங்கப்பட்ட **ரூ.75,000/- (எழுபத்தையாயிரம்)** மனுப்பாதுகாப்புடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்களத்தின் கொள்முதல் குழு,**
**e-NIC செயற்திட்டம், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம்,**
**"B" பகுதி, 10 ஆம் மாடி,**
**சுஹுருபாய, ஸ்ரீ சுபூதிபுர வீதி,**
**பத்தரமுல்லை.**

SELACINE

---

## அறிவித்தல்

மல்லவபிடிய பிரதேச செயலாளர் டபிள்யூ. பி. சி. என். பத்திரண ஆகிய என்னால் 2025 ஆம் வருடத்திற்கான மல்லவபிடிய பிரதேச செயலகப் பிரிவில் இலக்கம் 01 கடுபிடிய கள்ளுத் தவறணை வாடகை விற்பனைக்கான விலைமனுவை 2024.08.28 ஆம் திகதி மு.ப 10.30 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

குறிப்பிட்ட நிபந்தனைகளுக்காக 2,394 ஆம் இலக்க 2024.07.19 ஆம் திகதி இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானியை பார்க்கவும்.

**டபிள்யூ. பி. சி. என். பத்திரண**
**பிரதேச செயலாளர்**
**பிரதேச செயலகம்**
**மல்லவபிடிய.**

**2024 யூலை 23 ஆம் திகதி**
**மல்லவபிடிய பிரதேச செயலகத்தில்**

## அறிவித்தல்

பேயன்கொட, கும்பல் ஒலுவ முகவரியில் வசிக்கும் பதிவு இல. கம் 931 கொண்ட வ/ப - கும்பலஒலுவ சனச சங்கத்தினால் நடத்தப்படும் தங்க நகைகள் அடகு வைக்கும் வியாபாரம் 2024.02.15 முதல் முடிவடைவதாக சகல அங்கத்தவர்களுக்கும் அறிவித்துக் கொள்கிறேன்.

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

---

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### தென் மாகாணப் பொறியியல் சேவை அலுவலகம்

தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறைக்கு அமைய கீழ் குறிப்பிடப்பட்ட நிர்மாணப் பணிக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து தென் மாகாணப் பொறியியல் சேவை அலுவலகத்தின் பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| வரிசை இல. | பணியின் பெயர் | பணி பெறுமதி (இ.ரூபா) | ஒப்பந்தக் காலம் (நாட்கள்) | தேவையான பதிவு | விலைமனு பிணை (இ.ரூபா) | விலைமனு கட்டணம் (இ.ரூபா) (மீளளிக்கப் படாதது) |
|---|---|---|---|---|---|---|
| 1 | முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் நான்கு மாடி கட்டிடத்தின் நிர்மாணம் - (கட்டம் III) | 24,685,126.80 | 120 | C5 அல்லது C4 கட்டிடம் | 247,000.00 | 3,500.00 |

02. ஒப்பந்தம் வழங்குவதற்காக வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் மேலுள்ள பதிவில் தென் மாகாணப் பொறியியல் சேவை அலுவலகம் அல்லது CIDA உடன் பதிவுசெய்தவராகவும் இருத்தல் வேண்டும்.

03. தென் மாகாணப் பொறியியல் சேவை அலுவலகத்தின் அபிவிருத்திப் பிரிவில் இருந்து 2024.07.29 ஆம் திகதி தொடக்கம் 2024.08.20 ஆம் திகதி வரை மு.ப. 9.00 மற்றும் பி.ப. 3.00 இற்கு இடையே விலைமனு ஆவணங்களை பெறலாம். மேலதிக விபரங்களுக்கு 091 4941540 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைக்கவும்.

04. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2024.08.21 ஆம் திகதி மு.ப. 10.00 அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு 'பிரதித் தலைமைச் செயலாளர் (பொறியியல் சேவைகள்), தென் மாகாணப் பொறியியல் சேவை அலுவலகம், கோட்டை, காலி' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது கைகளால் சேர்ப்பது மற்றும் இந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுதல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

05. விலைமனுக்கள் 2024.08.21 ஆம் திகதி மு.ப. 10.00 இற்கு திறக்கப்படுவதோடு விலைமனு திறக்கும் நேரத்தில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்கலாம்.

06. விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படும் விலைமனுப் பிணை 2024.08.21 ஆம் திகதி தொடக்கம் 2024.12.18 ஆம் திகதி வரை செல்லுபடியான இலங்கையில் உள்ள வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து பெறப்பட்ட 'தென் மாகாணப் பொறியியல் சேவை அலுவலக, தலைமை பிரதிச் செயலாளரின் (பொறியியல் சேவைகள்)' பெயருக்கு வரையப்பட்டிருத்தல் வேண்டும் அல்லது தென் மாகாணப் பொறியியல் சேவை அலுவலகத்தின் கணக்குப் பிரிவுக்கு ரொக்கப்பணத்தில் செலுத்தலாம் என்பதோடு ரொக்கப்பண பற்றுச்சீட்டின் பிரதியை விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும். காசோலைகள் மற்றும் வங்கி வரைவில் சமர்ப்பிக்கப்படும் விலைமனுப் பிணைகள் நிராகரிக்கப்படும்.

07. விலைமனுக்கள் 91 நாட்களுக்கு செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.

08. மேலுள்ள பணிகள் தொடர்பில் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அசலை 'அசல்' என்றும் நகலை 'நகல்' என்றும் குறிப்பிடுதல் வேண்டும். அசல் மற்றும் நகலை வெவ்வேறு உறைகளில் இட்டு முத்திரையிட்டு அந்த இரு உறைகளையும் ஒற்றை உறையில் இட்டு வேலையின் பெயரை இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

09. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு இடம்பெறாது. ஏதேனும் தெளிவைப் பெற வேண்டுமாயின் dev.esu.sp@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

10. விலைமனு மதிப்பீடு விலைமனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டவாறு நடத்தப்படும் என்பதோடு பொருத்தமான சுற்றுநிருபங்களுடன் பிராந்திய முன்னுரிமை மற்றும் ஊஜனுயு தர முன்னுரிமை கருத்திற்கொள்ளப்படும். குறைபாடுகள் கொண்ட விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**தென் மாகாணப் பொறியியல் சேவை அலுவலகம்**
**கோட்டை, காலி**
2024.07.26

# இலங்கை வங்கி

## ஏல விலைகூறலுக்கான அழைப்பு (IFB)

### கேள்விப்பத்திர இலக்கம் : P/PROC/2024/139

**இலங்கை வங்கியின் பன்முக பணிகளுக்கான உதவியாளர் பதவிக்கு 60 ஆண் பணியாளர்களின் சேவையை வெளிவாரியாகப் பெற்றுக் கொள்ளல்**

மேற்குறித்த பெறுகைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட
ஏல விலை கூறல்களை உள்நாட்டு மனிதவலு சேவை வழங்குநர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்.

**முக்கிய திகதிகள்**

| | | |
|---|---|---|
| விலை கூறல் ஆவணங்களை வெளியிடுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | : | 15.08.2024 1500 மணிக்கு |
| விலை கூறல் ஆவணங்களை வெளியிடுவதற்கான காலப்பகுதி | : | 0900 மணியிலிருந்து 1500 மணி வரை வேலை நாட்களில் |
| விலை கூறல்களுக்கான முன்கூட்டிய கூட்டம் | : | 05.08.2024 1100 மணிக்கு இலங்கை வங்கித் தலைமைக் காரியாலயத்தின் 14 ஆம் தளம் |
| விலை கூறல் மூடும் திகதியும் நேரமும் | : | 16.08.2024 1000 மணிக்கு |
| விலை கூறலைத் திறத்தல் | : | விலை கூறல் முடிவடைந்தவுடன் |

**மேலதிக விபரங்களுக்கு விலைகூறுவோர் www.boc.lk என்ற இலங்கை வங்கியின் வலைத் தளத்தைப் பார்வையிடலாம்.**

**ஏதேனும் அல்லது அனைத்து விலை கூறல்களையும் நிராகரிப்பதற்கான உரிமையையும் எவ்வித காரணமும் தெரிவிக்காது விலைகூறலை அல்லது ஏதேனும் ஒரு பாகத்தினை ஏற்றுக் கொள்வதற்கான உரிமையினையும் இலங்கை வங்கி கொண்டுள்ளது.**

**பிரதான முகாமையாளர்**
**சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி**
14 ஆம் தளம், இலங்கை வங்கி தலைமையகம்
"BOC சதுக்கம் " இல: 01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.
தொலைபேசி: 011 220 4267, 011 254 4310, 011 243 4786
மின்னஞ்சல்: procurement@boc.lk

மேலதிக விபரங்களுக்கு Scan செய்யவும்

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

1975 BOC www.boc.lk

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.

# பெறுகை அறிவித்தல்

**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு**

**இலங்கை மதுவரித் திணைக்களம்**

## கேள்விமனுக்கோரல் - (IFB)

**இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கு அலுவலக தளபாடங்கள் மற்றும் உபகரணங்களை வழங்குவதற்கும் நிறுவுவதற்குமான பெறுகை**

1. இலங்கை மதுவரித் திணைக்களத்தின் சார்பில், திணைக்கள பெறுகைக்குழுத் தலைவரினால் தேசிய போட்டிக் கேள்விமனு நடைமுறையைப் பயன்படுத்தி இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கு நிழற்பட பிரதியெடுப்பு இயந்திரங்களை வழங்குவதற்கும் நிறுவுவதற்குமான பெறுகை அறிவித்தலுக்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விமனுக்கள் கோரப்படுகின்றன. தேவைகள் மற்றும் விவரக்குறிப்புகள் பற்றிய விரிவான விளக்கம் கேள்விமனு ஆவணத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

| இல | விபரம் | அளவு |
|---|---|---|
| 01 | Executive table (L shape) - MDF, melamine veneer finishing | 11 |
| 02 | Office table - MDF, melamine veneer finishing | 50 |
| 03 | Computer table | 01 |
| 04 | Computer chair – material-fabric | 04 |
| 05 | Executive chair (High back) -material leather | 12 |
| 06 | Visitor's chair (Low back) – with cushion arms | 35 |
| 07 | Revolving chair (Low back)- with arms | 71 |
| 08 | Plastic chair (Without arms) | 12 |
| 09 | Library almirah (Steel with glass) | 19 |
| 10 | Steel almirah (Gage-22) | 28 |
| 11 | Steel cupboard (04 drawers, gage-22) | 22 |
| 12 | File rack (MDF, melamine veneer finishing) | 19 |
| 13 | Electric kettle (1.7 L capacity) | 16 |
| 14 | Stand fan | 05 |
| 15 | Water filter | 01 |

2. ஆர்வமுள்ள மற்றும் தகுதியான கேள்வி மனுதாரர்கள் **இல.353, கோட்டை வீதி, இராஜகிரியவில் அமைந்துள்ள இலங்கை மதுவரித் திணைக்களத்தின் 4 ஆம் மாடியில் உள்ள கணக்குப் பிரிவின் பிரதம கணக்காளரிடமிருந்து** மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதுடன், கேள்விமனுக்கோரல் ஆவணங்களை **2024.07.26** ஆம் திகதி முதல் வார நாட்களில் (தேசிய விடுமுறை நாட்கள் தவிர்ந்த) அலுவலக நேரத்தில் (மு.ப 9.00 மணி முதல் பி.ப 3.00 மணி வரை) பார்வையிடலாம். **தொலைபேசி இலக்கம் : 011-2045073**

3. ஆர்வமுள்ள கேள்வி மனுதாரர்கள், **வியாபாரப் பதிவுச் சான்றிதழுடன்** மதுவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு எழுத்துமூல வேண்டுகோளொன்றை **2024 ஆகஸ்ட் 13 அன்று பிற்பகல் 3.00 மணி வரை** அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பித்து **இல.353, கோட்டை வீதி, இராஜகிரியவில் அமைந்துள்ள இலங்கை மதுவரித் திணைக்களத்தின் 4 ஆம் மாடியில் உள்ள கணக்குப் பிரிவிற்கு** மீளளிக்கப்படாத கட்டணமாக **ரூபா ஏழாயிரத்து ஐநூறு (ரூ.7500/-)** இனைச் செலுத்துவதன் மூலம் ஆங்கில மொழியிலான முழுமையான கேள்விமனுக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

4. **2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 7 ஆம் திகதி** காலை 10.00 மணிக்கு இல.353, கோட்டை வீதி, இராஜகிரியவில் அமைந்துள்ள இலங்கை மதுவரித் திணைக்களத்தில் கேள்விமனுவுக்கு முந்தைய கூட்டம் நடைபெறும்.

5. அனைத்து கேள்விமனுதாரர்களும் தங்களுடைய கேள்விமனுக்களை அசல் மற்றும் நகல் பிரதிகளுடன் சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன் ஒவ்வொன்றிலும் கையொப்பமிடப்பட்டு **"அசல் மற்றும் நகல்"** பிரதிகளை வெவ்வேறாக குறிப்பிட்டு தனித்தனியான கடித உறைகளில் இட வேண்டும். பின்னர் அவற்றை இன்னொரு கடித உறையிலிட்டு திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவருக்கு பதிவுத் தபாலில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு **2024.08.15 ஆம் திகதி** மு.ப.10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் இத்திணைக்களத்தை வந்தடையக் கூடிய விதத்தில் அனுப்ப வேண்டும். அல்லது இல 353, கோட்டை வீதி, இராஜகிரியவில் அமைந்துள்ள மதுவரி திணைக்களத்தின் நான்காம் மாடியிலுள்ள கணக்குப் பிரிவில் பிரதம கணக்காளர் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விமனுக்கள் சேகரிக்கும் பெட்டியில் **2024.08.15 ஆம் திகதி** மு.ப. 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் இட வேண்டும். தாமதமான கேள்விமனுக்கள் நிராகரிக்கப்படும். வேறு முறைகளில் அல்லது இலத்திரனியல் முறையில் அனுப்பப்படும் கேள்விமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. அனைத்து கேள்விமனுக்களும், கேள்விமனு ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ள வங்கி உத்தரவாத படிவத்தின் வடிவிலான **ரூபா 150,000/-** பெறுமதியான **"மனுப்பாதுகாப்புடன்"** அனுப்பப்பட வேண்டும். **மனுப்பாதுகாப்பானது** கேள்விமனுக்கள் சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதியிலிருந்து **105 நாட்களுக்கு** செல்லுபடியானதாக இருக்க வேண்டும். **(2024.11.28 வரை)**

7. கேள்விமனுக்கள், அவற்றைப் பெற்றுக்கொள்ளும் இறுதித் திகதியிலிருந்து **77 நாட்களிற்கு** செல்லுபடியானதாக இருக்க வேண்டும். **(2024.10.31 வரை)**

8. கேள்விமனுக்கள், அவற்றை சமர்ப்பிப்பதற்கான காலம் நிறைவடைந்தவுடனேயே மேலே பந்தி 5 இல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் நேரில் கலந்துகொள்ள விரும்பும் கேள்விமனுதாரர்கள் மற்றும்.·.அல்லது அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

9. கேள்விமனுக்களை தயாரிப்பது அல்லது வழங்குவது தொடர்பாக மனுதாரர்களுக்கு ஏற்படும் எந்தவொரு செலவுக்கும் மதுவரித் திணைக்களம் பொறுப்பேற்காது.

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக் குழு**
**இலங்கை மதுவரித் திணைக்களம்,**
**இல 353, கோட்டை வீதி, இராஜகிரிய.**
**26/07/2024**

SELACINE

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை**

## கொழும்பு துறைமுகத்திற்காக வீதி சுத்திகரிக்கும் இயந்திரமொன்றை வாடகைக்கமர்த்துதல்

1. கொழும்பு துறைமுகத்திற்காக வீதி சுத்திகரிக்கும் இயந்திரமொன்றை வாடகைக்கு அமர்த்துவதற்காக **(Contract No.: EW/GEN/06/24/01)** தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இதுஅ இன் தலைவரின் சார்பாக இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
3. விலைமனுப்பிணைத் தொகையானது 25,000 ரூபாவென்பதுடன் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற உத்தரவாதமாகவுமாகவிருத்தல் வேண்டும்.
4. வேலை நாட்களில் 2024.07.30 ஆம் திகதியிலிருந்து முப. 10 மணிக்கும் பி.ப. 2 மணிக்குமிடையில் 2024.08.14 ஆம் திகதியன்று மதியம் 12 மணி வரையும் (இரு நாட்களும் அடங்கலானவை) பெசேவ அடங்கலாக மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக 3,500 ரூபாவை செலுத்திய பின்னர் மேலேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் கொழும்பு-10, லேடன் பஸ்தியன் வீதி, 45 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, சிவில் பொறியியல் பிரிவு, பிரதான பொறியியலாளரினால் (சிவில்) விலைமனுக்கோரல் ஆவணங்கள் வழங்கப்படும். விலைமனுக்கோரல் ஆவணங்கள் அதே அலுவலகத்தில் இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.
5. பாதுகாப்பாக முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட உறையில் அடக்கப்பட்டு அதனது இடது பக்க மேல் மூலையில்**"Hiring of a Road Sweeper for Port of Colombo (Contract No.: EW/GEN/06/24/01)"** என அடையாளமிடப்பட்ட விலைமனு ஆவணமானது பதிவுத் தபாலில் தலைவர், பெறுகைக் குழு, இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01 என முகவரியிடப்பட்டு அனுப்பப்படல் வேண்டும் அல்லது மேலேயுள்ள முகவரியின் பிரதான பொறியியலாளரின் (சிவில்) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உட்சேர்க்கப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் இரு பிரதிகளில் 2024.08.15 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணியளவில் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன் அவைகள் மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் கேள்வியை திறக்கும் வேளையில் சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
7. எந்தவொரு மேலதிக விபரங்களையும் மேலேயுள்ள முகவரியின் பொறியியலாளர் (JCT) இடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் (தொலைபேசி: 011-2483590)

**தலைவர்,**
**பெறுகைக் குழு (இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை),**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல.: 45, லெய்டன் பஸ்தியன் வீதி,**
**கொழும்பு-01.**

**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## மாதாந்த வாடகைக்கு அமர்த்துதல் அடிப்படையில் மோட்டார் கார்களை வழங்கல்

வீதிப் போக்குவரத்திற்கு உகந்ததான முழுதாக பராமரிக்கப்பட்ட வாகனங்களை வழங்குபவர் என்ற நிபந்தனைக்கு உட்பட்டதாக நிலையான மாதாந்த வாடகைக்கு வழங்கல் அடிப்படையில் இரு வருட காலத்திற்கு (24 மாதங்கள்) இரு மோட்டார் கார்களை வழங்குவதற்காக தகுதியுள்ள வழங்குநர்களிடமிருந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

தகுதியுள்ள வழங்குநர்கள் இலங்கையிலுள்ள உலகப் புகழ்பெற்ற வாகன உரிமைப் பெயர்களையுடைய விற்பனையாளர்களான வாகன முகவர்களாகவும் இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு பெற்ற நிதியிடல் நிறுவனங்களாகவும் கார் வாடகைக்கு வழங்கும் சேவைகள் (அதாவது காரொன்றை வாடகைக்கு வழங்கும் கம்பனிகள்) ஆகியவற்றுடன் ஆகக்குறைந்தது 05 வாகனங்களையுடைய நிறுவனமாகவுமிருத்தல் வேண்டும்.

2024 ஜூலை 26 ஆம் திகதியிலிருந்து 2024 ஓகஸ்ட் 08 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் ஒவ்வொரு விலைமனுவிற்கும் மீளளிக்கப்படாத கட்டணமாக 3,000 ரூபாவை (மூவாயிரம் ரூபா மாத்திரம்) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சிறாப்பருக்கு செலுத்திய பின்னர், கொழும்பு-07, வோர்ட் பிரதேசம், 20 ஆம் இலக்கத்திலுள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பொது நிருவாகத்தின் சிரேஷ்ட உதவிச் செயலாளரிடமிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை பெற்றுக் கொள்ளலாம்.

வழங்குநர் ஒரு (01) வாகனத்திற்கு அல்லது 2 வாகனங்களுக்கான விலைமனுக்களை சமர்ப்பிக்கலாம்.

ஒரு வாகனத்திற்கு 60,000 ரூபாவிற்கானதும் (அறுபதாயிரம் ரூபா மாத்திரம்) இரு வாகனங்களுக்காகவெனின் 120,000 ரூபாவிற்கானதும் (ஒரு இலட்சத்து இருபதினாயிரம் ரூபா மாத்திரம்) பெறுமதியான மீளளிக்கப்படும் விலைமனுப்பிணையாக அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன் அத்தொகைகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சிறாப்பரிடம் ரொக்கப் பணத்தில் செலுத்தப்படல் வேண்டும் அல்லது இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு பெற்ற அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட வங்கி உத்தரவாதமாகவும் 2024 நவம்பர் 20 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுமிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் தன்மையிலில்லாமல் இணைக்கப்படும் எந்தவொரு விலைமனுவும் நிராகரிக்கப்படும்.

உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "Bid for the supply of Motor Cars under operational leasing basis to the UGC" என அடையாளமிடப்பட்டு நகல்பிரதியொன்றுடன் 2024 ஓகஸ்ட் 8 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, இல. 20, வோர்ட் பிரதேசம், கொழும்பு-07 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது கொழும்பு-07, வோர்ட் பிரதேசம், 20 ஆம் இலக்கத்திலுள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் பொது நிர்வாக அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உட்சேர்க்கப்படல் வேண்டும்.

பெற்றுக் கொண்ட விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் 2024 ஓகஸ்ட் 8 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு புதிய சபை அறையில் திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் நிகழ்வில் வழங்குநர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் பங்குபற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது விலைமனுக்களின் தயரித்தல் அல்லது சமர்ப்பித்தல் தொடர்பாக வழங்குநர்களுக்கு ஏற்படும் எந்தவொரு ஆகுசெலவு அல்லது செலவினங்களுக்கும் பொறுப்பேற்க மாட்டாது.

மேலதிக தகவலை 011-2685183/0718365022 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பொது நிருவாகத்திற்கான சிரேஷ்ட உதவிச் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு,**
**இல. 30, வோர்ட் பிரதேசம்,**
**கொழும்பு-07.**
**26.07.2024**

**இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

# விலைமனுக்கோரல்

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தத்தின் பெயர் | பொறியியலாளர்களின் மதிப்பீட்டுத்தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் (நாட்கள்) | மனுப் பாதுகாப்பு (ரூ) |
|---|---|---|---|---|
| RDA/RM&M/BM/GOSL/ 2024/21 | "மகநெகும மஹமெதுர" முகாமைத்துவ கட்டிடத்தின் அலுவலகத்திற்காக இரண்டு ஊழியர்களை வழங்கல் | 2.12 | 365 | 24,080.00 |

மேற்குறிப்பிடப்பட்ட வேலைத்திட்டத்திற்காக தேசிய மனுக்கோரல் போட்டி முறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள மனுதாரர்கள் 2024.07.26 ஆம் திகதி முதல் 2024.08.15 ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணையத்தளம் **www.rda.gov.lk** இனை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

SELACINE

OBSERVER adZ · வரமஞ்சரி

**Promotional Rates for Classified Advertisements**
(Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,000/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,300/- |

**Badulla & Nuwaraeliya District**

Hatton - 051 22 225 63
2145 - T. P. C. Chinthaka Nanayakkara - Hatton Stores, No. 3, Main Street, Hatton.

Hatton - 052 22 773 47
2506 - C. T. Perumal - Hatton Stores, No. 3, Main Street, Hatton.

Nuwaraeliya - 052 22 341 34
2507 - A. Rajalingam - No. 6, New Market Building, Nuwaraeliya.

Thalawakele - 071 7 236 799
2517 - G. G. L. Ravindra Kumara - No. 119, 121, Nuwaraeliya Road, Thalawakele.

Kotagala - 051 4 924 447
2555 - D. Deonis Kodikara & Sons - Rosita Bazaar, Kotagala.

Haputale - 077 7 278 899
8117 - R. M. K. Fizar Khan - Multi Centre, No. 2, Main Street, Haputale.

Bandarawela - 071 0 796 060
8126 - L. Eubert Silva - Nayana Book Shop, No. 343, Main Street, Bandarawela.

Kandy - 055 22 571 30
8131 - Nimal Attanayake - Per Siripura Contractor, Ex-Kandy, Kandy.

Haputale - 057 22 443 92
8139 - A. K. P. Hemawathi - Multi Centre, No. 2, Main Street, Haputale.

Lunugala - 055 22 639 84
8140 - E. M. Lal - Maduka Gold House, No. 111, Main Street, Lunugala.

Bandarawela - 057 22 301 60
8172 - K. P. Kodagoda - 'Sri Subasetha', 2nd Floor, Sinhagiri Building, Bandarawela.

Badulla - 055 22 256 16
8196 - Advertising Office (Lake House), No. 14, Opposite Muthiyangana Clock Tower, Badulla.

Passara - 055 22 888 89
8202 - M. K. M. Ismath - Rishana Book Shop, No. 354, Main Street, Passara.

Badulla - 072 7 998 533
8207 - K. G. Prasanna Kumara - No. 9, Nadukara Kanda Road, Badulla.

Diyatalawa - 057 22 290 24
8228 - A. S. De Alwis - Alwis Book Shop, No. 16, Main Street, Diyatalawa.

**Colombo City Area**

Borella - 0112268251
1040 - Gunasiri Book Shop - No. 685, Maradana Road, Punchi Borella.

Dematagoda - 075 7 222 878
1044 - No. 166/17, Kolonnawa Road, Dematagoda.

Colombo 02 - 078 5 200 648
1046 - R. P. C. Jayawardana - Chiththampalam A Gardiner Mawatha, Colombo 02.

Kirulapane - 071 5 439 396
1051 - Ramani Book Shop - 27/A, High Level Road, Kirulapane.

Mattakuliya - 011 2 521 160
1060 - M. N. E. Ratnayake - No. 89, Church Road, Mattakuliya.

Colombo 14 - 011 2 434 711
1071 - A. L. F. D. Managama - No. 331, Leyards Broadway, Colombo 14.

Wellawatta - 071 7 182 900
1107 - No. 288, Vijaya Enterprise, Wellawatta.

Colombo 15 - 077 7 510 139
1226 - No. 45, Eli House Road, Colombo 15.

Borella - 077 7 649 801
1292 - No. 151/22, Cotta Road, Borella.

ADZ HOTLINE - 011 2 429 369
CALL - 011 2 429 342/ 343

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

## விவசாயத் திணைக்களம்
## பூங்காப் பயிர் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிறுவனம் கன்னொருவ

# கேள்விகோரல்

**ஆய்வுகூட இரசாயனப் பொருட்கள், கண்ணாடி உபகரணங்கள் மற்றும் பாவனைப் பொருட்களை கொள்வனவு செய்தல்**
**மண் மற்றும் தாவர போஷணை பிரிவு, பூங்காப் பயிர் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிறுவனம், கன்னொருவ**
**(Purchasing of Laboratory Chemicals Glassware's and consumables - Soil and Plant Nutrition Division, Horticultural crops Research & Development Institute, Gannoruwa)**

பூங்காப் பயிர் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் பெறுகைக் குழுவின் தலைவரால் அந் நிறுவனத்தின் மண் மற்றும் தாவர போசணைப் பிரிவிற்கு சம்பந்தப்பட்ட ஆய்வு கூடங்களில் மண் மற்றும் தாவர ஆய்விற்கு பாவிக்கப்படும் பல்வேறு வகையான இரசாயனப் பொருட்கள், கண்ணாடி உபகரணங்கள் மற்றும் பாவனைப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு உள்ளூர் கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. பெறுகை வழிகாட்டல் கோவையின் கீழ் 13ஆம் பிரிவின் 8:1 இல் காட்டப்பட்டுள்ளவாறு குறித்த விண்ணப்பதாரிகள் 1987 இல. 03 பொது ஒப்பந்த சட்டத்தின் கீழான பதிவாளரின் கீழ் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

மேற்படி விடயமாக ஒரு கேள்விப் படிவத்தை மாத்திரம் பாவித்தல் வேண்டும். ரூபா 3000/- மீளளிக்கப்படாத கட்டணத்தை விவசாயத் திணைக்களத்தின் காசாளரிடம் காசாக செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை த.பெ. 11. கன்னொருவ, பேராதனை என்ற முகவரியில் அமைந்துள்ள பூங்காப் பயிர் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் அலுவலகத்திற்கு சமர்ப்பித்த பின்னர் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட கேள்வி ஆவணங்களை 2024 ஜுலை 26 முதல் 2024 ஒகஸ்ட் 14 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 4.00 வரை பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் இதற்கு மேலதிக விபரங்கள் கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்படுவதுடன் இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு மேற்படி இடத்திலேயே அவ் ஆவணங்களை இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.

சகல கேள்விகளும் பொறியிடப்பட்ட உறைகளில் இட்டு அவ் உறையின் இடது பக்க மேல் மூலையில் 'Purchasing of Laboratory Chemicals Glassware's and consumables - Soil and Plant Nutrition Division, Horticultural crops Research & Development Institute, Gannoruwa' என்று குறிப்பிட்டு தலைவர், பெறுகைக்குழு, பூங்காப் பயிர் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிறுவனம், த.பெ. 11, கன்னொருவ, பேராதனை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். இல்லையெனில் மேற்படி முகவரியில் அலுவலகத்தில் அமைந்துள்ள ஆவணத்தில் குறிப்பிட்டு கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் 2024 ஒகஸ்ட் 14 பிற்பகல் 16.00 இற்கு முடிவுறுத்தப்படுவதுடன் கேள்விகள் திறக்கப்படுவது 2024 ஒகஸ்ட் 15 மு.ப. 10.30 இற்கு ஆகும். அவ் வேளையில் கேள்விகளைச் சமர்ப்பிப்போருக்கு அல்லது அவர்களது எழுத்து மூல அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். சகல கேள்விகளும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து விவசாயப் பணிப்பாளர் நாயகத்தின் பெயருக்கு பெற்றுக் கொண்ட ரூ. 96,700.00 (தொன்னூற்றி ஆராயிரத்து எழுநூறு) வங்கிப் பிணை மூலம் செலுத்தப்படல் வேண்டும். காசாக செலுத்துவதாயின் பிணை ரூ. 48,350.00 (நாற்பத்தி எட்டாயிரத்து முன்னூற்றி ஐம்பது) ஆகும். வங்கிப் பிணையின் செல்லுபடிகாலம் 2024.11.06 வரையானதாக இருத்தல் வேண்டும்.

எந்த கொள்வனவையும் நிராகரிக்கும் உரிமை அல்லது சகல கேள்விகளையும் நிராகரிக்கும் உரிமை பூங்காப் பயிர் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் பெறுகைக் குழுவிற்கு உரியது.

**தலைவர்,,**
**பிரதேச பெறுகைக் குழு.**
**பூங்காப் பயிர் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிறுவனம்,**
**கன்னொருவ, பேராதனை.**
**தொ.பே. 081-2388011/12**

2024.07.26

---

## வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்

CFHC

# பதவி வெற்றிடம்

வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தில் காணப்படும் பின்வரும் வெற்றிடங்களுக்கு இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### 01.பதவி : தொழிநுட்ப உதவியாளர் (சிவில்)

பதவியின் எண்ணிக்கை : 06

தகைமைகள் : மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்திறன்களின் (NVQ) ஐந்தாம் தர (05) மட்டத்திற்கு குறையாத நிபுணத்துவ சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும். தொழிநுட்ப விஞ்ஞானம் சிவில் கற்கைநெறியினை முடித்திருத்தல் வேண்டும்.

மற்றும்

தொழிநுட்ப விஞ்ஞானம் சிவில் தொடர்பாக குறைந்தது ஒரு வருட (01) முன் அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்** : ரூ.30,310 - 10×300 - 07×350 - 04×600 - 20×710 - 52,360

**வயதெல்லை** : 18 வயதிற்கு குறையாத 45 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

(தற்போதும் அரசு, கூட்டுத்தாபனங்கள் மற்றும் திணைக்களங்களில் பணிபுரிபவர்களுக்கு இது பொருந்தாது.)

அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்படும்.
அரசு நிறுவனம் / திணைக்களம் / சட்டப்பூர்வ வாரியத்தின் விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட தலைவர்கள் மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.

கல்வித்தகைமை மற்றும் அனுபவ சான்றிதழிலுடன் உறவினரல்லாத இருவரின் பெயர் மற்றும் முகவரி உட்பட அனைத்து விடயங்களும் குறிப்பிடப்பட்ட விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"விண்ணப்பிக்கும் பதவியை"** தெளிவாக குறிப்பிட்டு இந்த விளம்பரம் பிரசுரமான 10 நாட்களுக்குள் **தலைவர், வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம், இல-5, ரொக் ஹவுஸ் ஒழுங்கை, கொழும்பு 15** எனும் முகவரிக்கு தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்,**
**இல- 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை,**
**கொழும்பு 15.**

SELACINE

---

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு
## விசேட அதிரடிப்படை
## (இலங்கை பொலிஸ்)

# விலைமனுக்கோரல் (IFB)

**இலங்கை பொலிஸ் விசேட அதிரடிப்படைக்கு 201 BODY ARMORS**
**கொள்வனவு செய்தல்.**
**BID NO. : PS/03/PB/PR/08/36/2024**

01. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, 18வது மாடி, "சுஹுருபாய", பத்தரமுல்ல, இலங்கை அமைச்சின் பெறுகை குழு, தலைவரினால் பின்வரும் பொருட்களை வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து மனுக்கள் கோரப்படுகின்றது.

| தொடர் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | விபரம் | அளவு | மனு ஆவணக் கட்டணம் ரூ. | மதிப்பீட்டு மனுப்பிணைப் ரூ. |
|---|---|---|---|---|---|
| 1. | PS/03/PB/PR/08/36/2024 | Body Armors | 201 | 15,500.00 | 1,050,000.00 |

02. மனுகோரல்கள் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும்.

03. இதற்காக ஆர்வம் காட்டும் தகுதியான மனுதாரர்கள் மேலதிக தகவல்களை பிரதம கணக்காளர், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, தொலைபேசி இலக்கம் 0112 887697 / e-mail : mops.procurementunit@gmail.com மூலமாக பெற்றுக்கொள்ள முடிவதுடன் **2024.07.26 ஆம் திகதி முதல் 2024.08.15 ஆம் திகதி வரை** பொது மற்றும் வங்கி விடுமுறை நாட்கள் தவிர்ந்த வார நாட்களில் **மு.ப. 09.00** மணி முதல் **பி.ப. 03.00** மணி நேரம் வரை 17வது மாடி, "சுஹுருபாய", பத்தரமுல்ல எனும் முகவரியில் அல்லது எமது உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (**www.pubsec.gov.lk**) மனு ஆவணங்களை இலவசமாக பரிசீலனை செய்ய முடியும்.

04. தகுதியான அனைத்து மனுதாரர்களும் பொருட்களை வழங்குவதற்கான சட்டப்பூர்வ உரிமையைப் பெற்றிருக்க வேண்டும். மனுதாரர் தனது நிறுவனத்தை வணிகமாக பதிவு செய்திருக்க வேண்டும், மேலும் உங்களால் சமர்ப்பிக்கப்பட்ட மனுவின் பெருமதி **ரூ.05 மில்லியனுக்கும்** அதிகமாயின் 1987 இலக்கம் 03 பொது ஒப்பந்த சட்டத்தின் கீழ் **(Public Contract Act)** பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட மனுவுடன் இந்த பதிவுச்சான்றிதழின் நகல் பிரதிகள் இணைக்கப்படாதவிடத்து மனுக்கள் தகுதி நீக்கம் செய்யப்படும். மனுதாரரின் பெயர் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றிருத்தல் கூடாது. மேலதிக விபரங்கள் மனு ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

05. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் பின்வரும் முகவரியில் எழுத்துப்பூர்வ விண்ணப்பத்தை **2024.07.26** ஆம் திகதியிலிருந்து **2024.08.15** ஆம் திகதி வரை பொது மற்றும் வங்கி விடுமுறை நாட்களைத் தவிர வார நாட்களில் **மு.ப.09.00** முதல் **பி.ப.03.00** மணிவரை சமர்ப்பித்து **ரூ.15.500.00 (பதினைந்தாயிரத்து ஐந்நூறு)** மீளச்செலுத்தப்படாத ஆவணக்கட்டணத்தைச் செலுத்தி அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும். ஒரு நிறுவனத்திற்கு ஒரு மனுகோரல் விண்ணப்ப படிவம் மட்டுமே வழங்கப்படும்.

06. பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களை பிரதிகளுடன் **2024.08.16** ஆம் திகதி **பி.ப.02.00** மணிக்கு அல்லது அதற்கு முன்னர் 17வது மாடி, "சுஹுருபாய" பத்தரமுல்ல, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள டென்டர் பெட்டியில் இடுதல் அல்லது மனுக்கள் திறக்கப்படும் நேரத்திற்கு முன்னர் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். மனுக்கள் இடப்பட்டுள்ள உறையின் இடது பக்கமேல் மூலையில் ஒப்பந்த இலக்கத்தினை தெளிவாக குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கால தாமதமாக கிடைக்கப்படும் மனுக்கள் நிராகரிக்கப்படும். மேலும் தனிப்பட்ட முறையில் சமுகமளிக்கும் மனுதாரர் அல்லது அவரது உரிமம் பெற்ற பிரதிநிதிக்கு முன்னிலையில் **2024.08.16** ஆம் திகதி **பி.ப.02.00** மணிக்கு அமைச்சகத்தின் கேட்போர் கூடத்தில் மனுக்கள் திறக்கப்படும். மனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவுற்ற பின்னர் மனுக்கள் திறக்கப்படும் வேளையில் பங்கேற்கும் மனுதாரரின் பிரதிநிதிகள் மனுதாரரிடமிருந்து எழுத்துப்பூர்வ அனுமதியை கட்டயாம் பெற்றுத்தல் வேண்டும். மனுதாரரின் எழுத்துப்பூர்வ அனுமதியை வழங்கத் தவறிய எந்த முகவரும் அச்சந்தர்ப்பத்தில் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

07. சமர்ப்பிக்கப்பட்ட மனுக்களின் செல்லுபடியாகும் காலம் **2024.08.16** ஆம் திகதியிலிருந்து **2024.11.15** ஆம் திகதி வரையாகும். (மனுக்கள் திறக்கப்படும் தினத்திலிருந்து **91 நாட்கள்** வரையாகும்.)

08. அனைத்து மனுக்களும், **ரூ.1,050,000.00** பெறுமதியான மனுப் பிணையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும், மேலும் சமர்ப்பிக்கப்பட்ட மனுப் பிணையானது பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

   i. ஒரு நிதி நிறுவனமாக மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட உத்தரவாதமாக இருத்தல் வேண்டும்.
   ii. மனுப் பாதுகாப்புப் படிவம் மனு ஆவண தொகுப்பின் IV ஆம் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ள ஆவணத்தின்படி இருத்தல் வேண்டும்.
   iii. மனு பிணையானது செயளாலர்,பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு **"Secretary / Ministry of Public Security"** எனும் பெயரில் இருத்தல் வேண்டும்.
   iv. மனுப்பிணை **2024.08.16** ஆம் திகதி முதல் **2024.12.13** வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். (மனுக்கள் திறக்கப்படும் தினத்தில் தேர்வு **119 நாட்கள் வரை**)

09. முன்மனுக் கூட்டம் **2024.08.02 ஆம் திகதி மு.ப.10.30** மணிக்கு **பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு,** 17வது மாடி, **"சுஹுருபாய", பத்தரமுல்ல, விசேட அதிரடிப்படையின் கேட்போர்கூடத்தில்** நடைபெறும்.

10. வழங்கப்படும் நிதி ஒழுங்குமுறைகள் மற்றும் திறைசேரி சுற்றறிக்கைகளில் ஏதேனும் திருத்தங்களைச் செய்வதற்கான உரிமையை கொள்முதல் குழுவினருக்கு உண்டு. கொள்முதல் குழுவினால் எடுக்கப்படும் தீர்மானம் இறுதி தீர்மானமாக காணப்படும்.

11. மேலதிக விபரங்களை பின்வரும் முகவரியில் அல்லது தொலைபேசி எண்களினூடாக பெற்றுக்கொள்ளலாம்.

**விலாசம் :-**
தலைமை கணக்காளர்,
17வது மாடி, "சுஹுருபாய",
பத்தரமுல்ல, இலங்கை.

**தொலைப்பேசி இலக்கம் :-**
பிரதான - 011-2887697
பொது - 011-2886067
தொலைநகல் - 011-2887784

**தலைவர்,**
**அமைச்சின் பெறுகை குழு,**
**பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு,**
**18வது மாடி, 'சுஹுருபாய, பத்தரமுல்ல, இலங்கை.**

SELACINE

---

## நீதி, சிறைச்சாலை விடயங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு
## குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும், சாட்சிகளினதும் பாதுகாப்பிற்கான தேசிய அதிகார சபை

# பதவி வெற்றிடங்கள்

2023 இல. 10 குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்கள் சாட்சியாளர்களுக்கு உதவி புரிதல் மற்றும் பாதுகாப்பதற்கான சட்டத்தை அமுல்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும், சாட்சிகளினதும் பாதுகாப்பிற்கான தேசிய அதிகார சபையில் காணப்படும் பணிப்பாளர் நாயகம் (ஒப்பந்த அடிப்படை) பதவிக்காக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட சேர்த்துக் கொள்ளும் முறைமையின் பிரகாரம் தகைமையுள்ள இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### 1. பணிப்பாளர் நாயகம் (ஒப்பந்த அடிப்படை) HM 2-3 (பதவி 01)

**தகைமை மற்றும் அனுபவம்**

சட்டம், நிர்வாகம் அல்லது குற்றவியல் ஆகிய துறைகளில் ஒன்றில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆரம்ப பட்டத்தைப் பெற்றிருத்தல் அல்லது நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக இருத்தல்

**அத்துடன்**

குறித்த பாடத்துறையில் பட்டப் பின்படிப்பைப் பெற்றிருத்தல்

**மற்றும்**

பட்டதாரி தகைமையை பெற்ற பின்பு அரச, அரச கூட்டுத்தாபன, நியதிகள் சபை அல்லது குறித்த அரச சார்பற்ற அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் 'முகாமைத்துவ மட்டப் பதவிகளில் குறைந்தபட்சம் 15 வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல் (குறைந்த பட்சம் இதில் 05 வருடமாவது சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் (HM) இருத்தல் வேண்டும்)'

**வயதெல்லை**

35 வயதிற்கு குறையாது 55 வயதிற்கு மேற்படாது இருத்தல் வேண்டும்

**சம்பள அளவு**

HM 2-3, 2016 சம்பள அளவில் ஆரம்ப சம்பள கட்டம் பொருந்தும். ரூ. 98,215.00 + வாழ்க்கைச் செலவு (அரசாங்க ஓய்வூதியம் பெறும் அதிகாரியொருவர் இப்பதவிக்கு நியமிக்கப்படின் அவ் அதிகாரிக்கு ஓய்வூதியப்படியுடன் குறித்த வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு கிடைப்பதுடன் இப்பதவிக்கு மீண்டும் நியமிப்பதன் கீழ் ஓய்வூதியப் படியுடன் கிடைக்கும் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவின் மிகுதிப் பகுதி அவர் பெறும் மாதாந்தக் கொடுப்பனவுடன் வழங்கப்படல் வேண்டும்) இப்பதவிக்காக உத்தியோகபூர்வ வாகனம் அல்லது அதற்கான போக்குவரத்து கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு மற்றும் பதவிக்கு சுற்றுநிருபத்தின் பிரகாரம் கிடைக்க வேண்டிய அனுமதிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள் உரித்தாகும்.

**நிபந்தனைகள்**

01. மேற்படி பணிப்பாளர் நாயகப் பதவிக்கு சேர்த்துக் கொள்ளும்போது தகைமையுள்ள விண்ணப்பதாரிகள் கட்டமிடப்பட்ட நேர்முகத்தேர்விற்கு கோரப்படுவதுடன் அங்கு கீழ்க்காணுமாறு புள்ளிகள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| குறித்த மேலதிக அனுபவம் | 30 புள்ளிகள் |
| குறித்த மேலதிக கல்வி/தொழில்சார் தகைமைகள் | 30 புள்ளிகள் |
| ஏனைய குறித்த செயறறிறன் மற்றும் திறமைகள் | 15 புள்ளிகள் |
| நேர்முகத்தேர்வில் காட்டப்படும் திறமை | 25 புள்ளிகள் |
| முழுப் புள்ளிகளின் எண்ணிக்கை | **100** |

விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு (2024.08.09) இத் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

02. சகல விண்ணப்பதாரிகளும்
   I. இலங்கை பிரஜைகளாக இருத்தல் வேண்டும்.
   II, பதவிக்காக ஒப்படைக்கப்படும் வேலைகளை சரியாக நிறைவேற்றுவது போலவே நாட்டின் எப்பாகத்திலும் கடமையாற்றுவதற்குத் தேவையான உடல், உள, தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   III. சிறந்த நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.

03. மேற்படி தகைமைகள் மற்றும் பதவியுடன் சம்பந்தப்பட்ட அலுவலகத்தை உறுதி செய்யும் சான்றிதழ்களின் புகைப்படப் பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

04. ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிக்காக நீங்கள் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

05. விண்ணப்பதாரிகளால் தேவையற்ற வற்புறுத்தல் மேற்கொள்ளல் அல்லது விசாரணைகள் மேற்கொள்ளல் விண்ணப்பங்கள் நிராகரிப்பதற்கு காரணம் ஆகும்.

06. விண்ணப்பங்கள் கோரும் இறுதித் திகதிக்கு கிடைக்காத சகல விண்ணப்பங்கள் மற்றும் சான்றிதழ்களின் பிரதிகள் சமர்ப்பிக்கப்படாத சகல விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

கல்வித் தகைமைகள் தொழில்சார் தகைமைகள் மற்றும் சகல தகவல்களும் அடங்கிய உங்களால் தயாரிக்கப்பட்ட சுய தரவு குறிப்பு சகல சான்றிதழ்களின் பிரதியுடன் மின்னஞ்சல் மூலம் chairman.japvcw@gmail.com மற்றும் பதிவுத் தபாலில் தலைவர், குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் பாதுகாப்பிற்கான தேசிய அதிகார சபை 428/11ஏ, முதலாம் மாடி, டென்சில் பொப்பேகடுவ மாவத்த, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு 2024.08.09 இற்கு முன்பு கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

**தலைவர்,**
**குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும்**
**சாட்சிகளினதும் பாதுகாப்பிற்கான தேசிய அதிகார சபை,**
**428/11ஏ, முதலாம் மாடி, டென்சில் பொப்பேகடுவ மாவத்த,**
**பத்தரமுல்ல.**
**தொ.பே. - 011 2879539**
திகதி: 2024.07.26

## உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு

# மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்கான பெறுகை அறிவித்தல்

1. கோரப்பட்ட பொருட்களுக்காக எந்தவொரு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இந்த ஒப்பந்தங்களின் தொழில்தருநர் சார்பாக கொழும்பு-10, இல. 27, டி சேரம் பிளேஸ், உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவின் பிரதேச பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

| இல. | உருப்படிகள் | எண்ணிக்கை | மதிப்பீட்டுக் கிரயம் (ரூபா) (மில்லியன்களில) | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | Holter Monitoring System | 06 | 8.4 | 3,500.00 |

2. விலைக்கோரல்கள் தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் இடம்பெறும்.

3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராகவிருத்தல் வேண்டும்.

4. கொழும்பு-10, இல.27, டி சேரம் பிளேஸ், உயிரியல் மருத்துவ பொறியியல் சேவை பிரிவின் கணக்காளர் அலுவலகத்தில் விலைக்கோரல்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின் உடன் திறக்கப்படும்.

5. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதிக்காக, ஒவ்வொரு விலைமனுதாரரும் 5 மில்லியன் இலங்கை ரூபாவை விஞ்சும் கேள்வியிடல் தொகையின் பொருட்டு 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ஆம் பந்தியின் கீழ் கம்பனிப் பதிவாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2024-07-26ஆம் திகதி முதல் 2024-08-15ஆம் திகதி வரையான பொதுவான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கொழும்பு-10, இல. 27, டி சேரம் பிளேஸ், உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவிலிருந்து முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்தில் செலுத்துதல் வேண்டும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென இரு பிரதிகளில் முன்வைத்தல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதிகளை வெவ்வேறான இரு உறைகளில் இட்டு ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' எனக் குறிப்பிட்டு முத்திரைக்குறியிடப்பட்ட உறையினுள் இட்டு, அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு, முத்திரைக் குறி பொறித்து அவ்வுறையின் இடதுபக்க மேல் மூலையில் ''ஒப்பந்தப் பெயர் மற்றும் இலக்கம்'' என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும். விலைமனுக்களை 2024-08-16ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் தலைவர், பிரதேச பெறுகைக் குழு, உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு, இல. 27, டி சேரம் பிளேஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்குக் கிடைக்கச்செய்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம்தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.

8. விலைமனுக்கள் 2024-10-10ஆம் திகதி வரையில் செல்லபடியாதல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியாக நிபந்தனையற்ற மற்றும் கோரிக்கை வங்கி உத்தரவாதம் 2024-10-29ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.

9. மேலதிக விபரங்களை உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவின் கணக்காளரிடமிருந்து 2684732 எனும் தொலைபேசி இலக்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு,**
**இல. 27, டி சேரம் பிளேஸ்,**
**கொழும்பு-10**

---

## இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம் - மொரட்டுவ

## கல்வி அமைச்சு

### திறன் அபிவிருத்தி, தொழிற் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கற் பிரிவு

# பெறுகை அறிவித்தல்

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### கணனிகள் மற்றும் துணைப்பாகங்கள், பயிற்சி உபகரணங்கள் மற்றும் இயந்திராதிகள் மற்றும் தளபாடங்களை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்துதல்

இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்திற்கு கணனிகள் மற்றும் துணைப்பாகங்கள், பயிற்சி உபகரணங்கள் மற்றும் இயந்திராதிகள் மற்றும் தளபாடங்களை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்துதல் என்பவற்றுக்கு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தின் தலைவர் அழைக்கின்றார்.

| தொ. இல. | விலைக்கோரல் இல. | விபரங்கள் | உருப்படிகளின் எண்ணிக்கை | விலைக் கோரல் பிணை முறித் தொகை (ரூபா) |
|---|---|---|---|---|
| 1 | CGTTI/TB/01/18/2024 | ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்திற்கு தளபாடங்களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் செயற்படுத்துதல் | 15 | 20,000.00 |
| 2 | CGTTI/TB/01/22/2024 | ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் உள்ள ஊடகப் பிரிவிற்கு உபகரணங்களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதல் | 02 | 15,000.00 |
| 3 | CGTTI/TB/01/27/2024 | கருவி இயந்திராதிகள் பிரிவிற்கு பொறித்தொகுதி மற்றும் இயந்திராதிகளை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதல் | 02 | 50,000.00 |
| 4 | CGTTI/TB/01/27/01/2024 | வாகன திருத்தவேலைகள் பிரிவிற்கு பொறித்தொகுதி மற்றும் இயந்திராதிகளை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதல் | | 10,000.00 |
| 5 | CGTTI/TB/01/34/2024 | ஆனமடுவைக்கு பயிற்சி உபகரணங்களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதல் | 25 | 40,000.00 |
| 6 | CGTTI/TB/01/35/2024 | ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் உள்ள வரைதல் பிரிவிற்கு வரையும் போர்டை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் | 01 | 20,000.00 |
| 7 | CGTTI/TB/01/36/2024 | ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் உள்ள மல்டிமீடியா மற்றும் Virtual முறைமைக்கு துணைப்பாகங்களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதல் | 01 | 20,000.00 |
| 8 | CGTTI/TB/01/37/2024 | ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தின் புத்தாக்கற் திட்டங்களுக்கு Makerspace Establishment வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதல் | 01 | 20,000.00 |
| 9 | CGTTI/TB/01/40/2024 | ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தின் பொரளை பிராந்திய நிலையத்திற்கு கருவிகள் மற்றும் பயிற்சி உபகரணங்களை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் | | |

1. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB) நடைமுறையின் மூலம் மேற்கொள்ளப்படும்
2. பல விருப்பத் தேர்வுகள் அனுமதிக்கப்படமாட்டாது. (விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்பவரின் விபரக்குறிப்புகளுக்கு மட்டுமே இணங்குதல் வேண்டும்)
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் இலவசமாக விலைமனுக்களைப் பரீட்சித்துப் பார்த்தல் என்பவற்றை 2024 ஆகஸ்ட் 20ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தின் கணக்கிடல் பிரிவில் மேற்கொள்ளலாம். தொலைபேசி இல. 0112605625 / 0115741007
4. விலைமனுதாரர்கள் அண்மைய 3 வருடங்களில் இதனையொத்த வகையான உற்பத்திகளை வழங்கும் அனுபவம் மற்றும் அண்மைய மூன்று வருடங்களில் வருடாந்த சராசரி பெறுமதியாக 20 மில்லியன் ரூபா அல்லது அதற்குச் சமமான அல்லது அதற்கு மேற்பட்ட புரள்வு சகிதம் செல்லுபடியாகும் வியாபாரப் பதிவுச்சான்றிதழையும் கொண்டிருத்தல் வேண்டும். மேற்சொல்லப்பட்ட தேவைப்பாட்டைக் கொண்டிருப்பதை நிரூபிப்பதற்குத் தேவையான ஆவண ரீதியான சான்றுகளை சமர்ப்பித்தல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஒவ்வொரு ஆவணத்திற்கும் மீளளிக்கப்படாத 2,000.00 ரூபா (இரண்டாயிரம் ரூபா மட்டும்) கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில் 2024 ஜூலை 26ஆம் திகதி முதல் 2024 ஆகஸ்ட் 20ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையான காலத்தில் எழுத்து மூலமான வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை CGTTI கணக்கிடல் பிரிவிற்கு ரொக்கப் பணமாகச் செலுத்தல் வேண்டும்.
6. கல்கிஸ்ஸ, 582, காலி வீதி, இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தின் கூட்ட அறையில் 2024 ஆகஸ்ட் 09ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.
7. சகல விலைமனுக்களுடனும் இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியின் தொகையானது மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பெறுமதிக்கும் விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 120 நாட்களுக்குச் செல்லுபடியாகும் வகையில் (2024 ஆகஸ்ட் 21ஆம் திகதி முதல் 2024 டிசம்பர் 19ஆம் திகதி வரை) இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தின் பணிப்பாளர்/அதிபரின் பெயருக்கு பெறப்பட்டிருத்தல் வேண்டும்.
8. இரு நகல்களிலான விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி எனக் குறிப்பிட்டு 2024 ஆகஸ்ட் 21ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தில் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளலாம். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விலைக்கோரல் இலக்கம் மற்றும் விபரங்கள் என்பன குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம்,**
**582, காலி வீதி, கல்கிஸ்ஸ.**
**2024-07-26ஆம் திகதி.**

---

## கல்வி அமைச்சு

### திறன்கள் அபிவிருத்தி, தொழில்நுட்ப பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கப் பிரிவு

### இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் – (CGTTI)

# விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே விபரிக்கப்பட்டுள்ள வேலைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவன பணிப்பாளர்/அதிபரின் சார்பாக பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தப் பெயர் | இடைநிகழ்வுகள் மற்றும் பெசேவ நீங்கலாக பொறியியலாளரின் மதிப்பீடு மில்.இ.ரூபாவில்) | CIDA தரம் | விலைமனு உத்தரவாதம் (இ.ரூபாவில்) | ஒப்பந்தக் காலப்பகுதி (நாட்களில்) |
|---|---|---|---|---|---|
| CGTII/TB/03/01 /CIVIL/2024 | கருவிகள் இயந்திராதி பிரிவின் கூரை சீற்களை மாற்றல் | 18.00 | சி-6 மற்றும் சி-5 | 200,000.00 | 60 |

2. வேலைகளானது மேலே கூறப்பட்டுள்ள விளக்கத்தைக் கொண்டுள்ளது.
3. ''விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடத்தப்படும். இந்த திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படவுள்ள வேலையானது (பெசேவ மற்றும் ஏனைய வரிகள் நீங்கலாக) 50 மில்லியன் ரூபாவிற்கு குறைவாகவிருப்பதனால் பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமையானது 04/2016(iv)'' என்ற அரச நிதி சுற்றறிக்கை இலக்கத்தில் வரையறுக்கப்பட்டவாறு பிரயோகப்படுத்தப்படும்.
4. ஒப்பந்தத்திற்கான தகுதிக்காக, எதிர்பார்க்கப்படும் விலைமனுதாரர்கள் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் சி-6 மற்றும் சி-5 ஆகிய தரங்களில் கட்டிட நிர்மாண விஷேடத்துவத்தில் ஒப்பந்தத்தை வழங்கும் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
5. விலைமனுக்கள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என 2024.08.15 ஆம் திகதியன்று பி.ப.2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், பெறுகைக் குழு, இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம், 582 காலி வீதி, கல்கிசை என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
6. 2024.08.08 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு நிறுவனத்தின் மாநாட்டு மண்டபத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டமானது நடைபெறும்.
7. விலைமனுக்கள் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தொகைக்கானதொரு விலைமனுப்பிணையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப் பிணையானது 2024.11.14 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. விலைமனுக்கள் 2024.10.31 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
9. ஒவ்வொரு ஆவணத்திற்கும் 3,500 இ.ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், 2024.07.26 ஆம் திகதியிலிருந்து 2024.08.14 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் கல்கிசை, காலி வீதி, 582 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவன பணிப்பாளர்/அதிபருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம்,**
**582, காலி வீதி, கல்கிசை.**

---

## சுகாதார அமைச்சு

## தேசிய இரத்தமாற்று பிரயோகசேவை

# மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்கான பெறுகை அறிவித்தல்

1. கீழே குறிப்பிடப்பட்ட மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்காக முத்திரைக்குறி பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கொழும்பு 5, நாராஹென்பிட்டி, இல. 555/5D, எல்விட்டிகல மாவத்தை, தேசிய இரத்தமாற்று பிரயோகசேவை, பிராந்திய பெறுகைக் குழுத் தலைவரினால் 2024-08-20ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

| இல. | விபரங்கள் | எண்ணிக்கை | மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|---|---|
| IMMUNOHAEMATOLOGY LABORATORY EQUIPMENTS | | | |
| 01 PRO 24 | Hot Air Oven | 07 | 1,000.00 |
| 02 PRO 24 | Table Top Centrifuge – Invertible Head | 10 | 3,500.00 |
| 03 PRO 24 | Table Top Centrifuge | 20 | 3,500.00 |
| BASIC BLOOD BANK EQUIPMENTS | | | |
| 04 PRO 24 | Autoclave – Peripheral Blood Bank | 05 | 1,000.00 |
| 05 PRO 24 | Digital Scale for Blood Pack Weighing | 40 | 1,000.00 |
| 06 PRO 24 | BP Meter | 75 | 1,000.00 |
| 07 PRO 24 | Hydrometer | 30 | 1,000.00 |
| 08 PRO 24 | Thermometers with Probe ( 40 C to +40 ) | 100 | 1,000.00 |
| 09 PRO 24 | Tube Racks - Large | 40 | 1,000.00 |
| 10 PRO 24 | Tube Racks - Small | 40 | 1,000.00 |
| 11 PRO 24 | Tube Sealer | 20 | 3,500.00 |
| 12 PRO 24 | Light Microscope | 02 | 1,000.00 |
| ADVANCED BLOOD BANK EQUIPMENTS | | | |
| 13 PRO 24 | Autoclave for NBC | 01 | 12,500.00 |
| 14 PRO 24 | PH Meter for QMU NBC | 02 | 1,000.00 |
| TTI LABORATORY | | | |
| 15 PRO 24 | Elisa Reader with Complete accessories | 03 | 3,500.00 |
| 16 PRO 24 | Elisa Washer | 03 | 3,500.00 |
| 17 PRO 24 | Fully Automated Elisa Systems | 01 | 12,500.00 |
| COMPONENT LABORATORY | | | |
| 18 PRO 24 | Automated Component Separators | 02 | 12,500.00 |
| DONOR & DT SECTION | | | |
| 19 PRO 24 | Automated Blood Collection Monitors | 20 | 12,500.00 |
| 20 PRO 24 | Donor Weighing Scale | 50 | 1,000.00 |
| 21 PRO 24 | Mobile Bags | 250 | 1,000.00 |
| 22 PRO 24 | Sterile Connecting Device | 01 | 1,000.00 |
| 23 PRO 24 | illuminator's | 10 | 1,000.00 |
| TRANSMED PROJECT | | | |
| 24 TR PRO 24 | Tablet With Wireless Keyboard & Mouse Combo | 10 | 1,000.00 |
| 25 TR PRO 24 | Bluetooth Earphones With Mic | 10 | 1,000.00 |
| 26 TR PRO 24 | App / Software Subscription | 10 | 1,000.00 |
| 27 TR PRO 24 | Laptop for Video Streaming | 01 | 1,000.00 |
| 28 TR PRO 24 | 4K Web Camera | 01 | 1,000.00 |
| 29 TR PRO 24 | Tripod Camera Mount & Clamps | 01 | 1,000.00 |
| 30 TR PRO 24 | Wired Collar Microphone | 02 | 1,000.00 |
| 31 TR PRO 24 | Wireless Microphone System | 01 | 1,000.00 |
| 32 TR PRO 24 | Video Camera | 01 | 1,000.00 |
| 33 TR PRO 24 | Computer - Desktop | 02 | 1,000.00 |
| 33 TR PRO 24 | Computer - Laptop | 05 | 1,000.00 |
| 34 TR PRO 24 | Portable Hard Disk ( 2 TB ) | 02 | 1,000.00 |
| 35 TR PRO 24 | Learning Management System ( LMS ) | 01 | 1,000.00 |
| 36 TR PRO 24 | Overhead Projector | 03 | 1,000.00 |
| 37 TR PRO 24 | Projector Screen | 03 | 1,000.00 |
| 38 TR PRO 24 | Photocopy Machine | 01 | 1,000.00 |
| 39 TR PRO 24 | Manniquein With Resuscitation Facility | 01 | 1,000.00 |
| 40 TR PRO 24 | Phlebotomy Arm | 01 | 1,000.00 |
| 41 TR PRO 24 | Interactive Display ( Large Monitor ) | 02 | 1,000.00 |
| 42 TR PRO 24 | Audio Visual System | 01 | 1,000.00 |

2. இலங்கை சந்தைக்கென முன்வைக்கப்பட்ட சாதனங்களைத் தயாரிப்பவர்களினால் ஏக நியமனம் பெற்ற பிரதிநிதியாக/அங்கீகாரம்பெற்ற முகவராக உள்ளவர்கள் மட்டுமே இந்த விலை கூறலில் பங்குபற்றுவதற்கு தகுதியுடையவர்களாவர்.
3. பின்வரும் ஆவணங்களுடன் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட ஏதேனும் ஆர்வமுள்ள தகுதியுள்ள விலைமனுதாரர், பிரதிநிதி, அல்லது பெயர் குறிப்பிடப்பட்டவர் சார்பில் முதன்மையாளர் சார்பாக வாங்கப்பட்ட நகல் பிரதிகளுடனான முழுமையான ஆவணத் தொகுப்பில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
   (அ) கொழும்பு 5, தேசிய இரத்தமாற்று பிரயோகசேவை பணிப்பாளர் அவர்களுக்கு எழுதப்பட்ட ஒரு எழுத்து மூல விண்ணப்பம்
   (ஆ) கொழும்பு 5, தேசிய இரத்தமாற்று பிரயோகசேவை கணக்காளருக்கு மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்துதல்
   (இ) புகைப்படப் பிரதி சகிதம் வியாபாரப் பதிவுச் சான்றிதழ்
   (ஈ) முதன்மையானவர்களினால் தமது பொருட்களுக்கு உள்ளூர் முகவராக உங்கள் நிறுவனம் நியமிக்கப்பட்டதற்கான எழுத்தில் வழங்கிய ஒரு சான்றிதழ்/கடிதம்
4. விலைமனு ஆவணங்களை 2024-07-25ஆம் திகதி முதல் 2024-08-20ஆம் திகதி வரையில் கொழும்பு 5, தேசிய இரத்தமான்று பிரயோகசேவை கணக்காளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 0112-368585, 0112369931-34, நீடிப்பு 221/293)
5. கொழும்பு 5, தேசிய இரத்தமாற்று பிரயோகசேவை, பணிப்பாளர் அலுவலகத்தில் விலைமனுக்கள் முடிவு நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும்.
6. கொழும்பு 5, தேசிய இரத்தமாற்று பிரயோகசேவை, பணிப்பாளர் அலுவலகத்தில் விலைமனுக்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
7. கொழும்பு 5, தேசிய இரத்தமான்று பிரயோகசேவை, பெறுகைப் பிரிவில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
8. சில உருப்படிகளுக்காக மாதிரிகளை வழங்குதல் வேண்டும்.

**தலைவர் / பிராந்திய பெறுகைக் குழு,**
**தேசிய இரத்தமாற்று பிரயோக சேவை,**
**555/5D, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு-05.**

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
கட்டிடங்கள் திணைக்களம்

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

### அரசாங்க கட்டிடங்களின் அவசர விசேட திருத்தங்கள், புதுப்பித்தல், மேம்படுத்தல்கள், சிறு வேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகள் - 2024/2025ஆம் வருடங்கள்

1.1 பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு பிரதம பொறியியலாளர் அலுவலகத்தின் கீழும் 2024/2025ஆம் வருடங்களுக்கான அரசாங்கக் கட்டிடங்களுக்கான அவசர விசேட திருத்தங்கள், புதுப்பித்தல், மேம்படுத்தல்கள், சிறிய திருத்த வேலைகள், பராமரிப்பு வேலைகளை மேற்கொள்வதற்கான பொறியிடப்பட்ட கேள்விகள் தகுதி வாய்ந்த தகைமைகளை உடைய கேள்விதாரர்களிடமிருந்து கட்டிடத் திணைக்களத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரால் அழைக்கப்படுகின்றன.

பிரதம பொறியியலாளர் அலுவலகம் (மேற்கு - தெற்கு)
கட்டிடங்கள் திணைக்களம், இல. 213, டொரிங்டன் அவன்யூ, கொழும்பு-07.
தொலைபேசி : 011 2554691, தொலைநகல்: 011 2554690, கைப்பேசி: (077 7860093 - பொறி. சுரேந்திரன்), (071 8001407 - பொறி. கம்லத்)

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தப் பொதியின் பெயர் மற்றும் உள்ளடங்கும் பிரதேசம் | CIDA தரம் | கேள்விப் பிணை முறித் தொகை (ரூபா) | அதிகபட்ச ஒப்பந்தப் பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|---|
| 04-03-10—CT022/24 | பொதி **WS/01-** கொழும்பு மாவட்டத்திலுள்ள திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்தின் கொழும்பு 03, 04, 05 என்பவற்றிலுள்ள அரசாங்கக் கட்டிடங்கள் | C5 அல்லது C4 | 300,000/- | 30 மில்லியன் |
| 04-03-10—CT023/24 | பொதி **WS/02-** கொழும்பு மாவட்டத்திலுள்ள திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்தின் கொழும்பு 06, 07, 08, 09 என்பவற்றிலுள்ள அரசாங்கக் கட்டிடங்கள் | C5 அல்லது C4 | 300,000/- | 30 மில்லியன் |
| 04-03-10—CT024/24 | பொதி **WS/03-** கொழும்பு மாவட்டத்திலுள்ள ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே, தெஹிவளை, இரத்மலானை, மொரட்டுவ பிரதேச செயலகங்களிலுள்ள அரசாங்கக் கட்டிடங்கள் | C5 அல்லது C4 | 300,000/- | 30 மில்லியன் |
| 04-03-10—CT025/24 | பொதி **WS/04-** கொழும்பு மற்றும் களுத்துறை மாவட்டங்களிலுள்ள ஹோமாகம, கெஸ்பேவ, பாதுக்க மற்றும் சீத்தாவக்க பிரதேச செயலகங்களிலுள்ள அரசாங்கக் கட்டிடங்கள் | C5 அல்லது C4 | 300,000/- | 30 மில்லியன் |

பிரதம பொறியியலாளர் அலுவலகம் (மேற்கு - வடக்கு)
கட்டிடங்கள் திணைக்களம், இல. 213, டொரிங்டன் அவன்யூ, கொழும்பு-07.
தொலைபேசி : 0112582579, தொலைநகல்: 011 2588686, கைப்பேசி: (071 5424634 - பொறி. D.M.A.N.சேனாநாயக்க),(071 8001407 - பொறி. கம்லத்)

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தப் பொதியின் பெயர் மற்றும் உள்ளடங்கும் பிரதேசம் | CIDA தரம் | கேள்விப் பிணை முறித் தொகை (ரூபா) | அதிகபட்ச ஒப்பந்தப் பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|---|
| 04-03-11—CT026/24 | பொதி **WN/01-** கொழும்பு மாவட்டத்திலுள்ள கொழும்பு பிரதேச செயலகத்தின் கொழும்பு 01,02,10,11,12,13,14, 15 என்பவற்றிலுள்ள அரசாங்கக் கட்டிடங்கள் | C5 அல்லது C4 | 300,000/- | 30 மில்லியன் |
| 04-03-11—CT027/24 | பொதி **WN /02-** கொழும்பு மாவட்டத்திலுள்ள மஹரகம பிரதேச செயலகத்தின் கொலன்னாவை, கடுவளையிலுள்ள அரசாங்கக் கட்டிடங்கள் | C5 அல்லது C4 | 300,000/- | 30 மில்லியன் |
| 04-03-11—CT028/24 | பொதி **WN /03-** கம்பஹா மாவட்டத்திலுள்ள ஜா-எல, கட்டான, மினுவாங்கொட, மீரிகம, நீர்கொழும்பு மற்றும் வத்தளை பிரதேச செயலகங்களின் அரசாங்கக் கட்டிடங்கள் | C5 அல்லது C4 | 300,000/- | 30 மில்லியன் |
| 04-03-11—CT029/24 | பொதி **WN /04-** கம்பஹா மாவட்டத்திலுள்ள அத்தனகல்ல, பியகம, திவுலப்பிட்டிய, தொம்பே, கம்பஹா, களனி, மஹர பிரதேச செயலகங்களின் அரசாங்கக் கட்டிடங்கள் | C5 அல்லது C4 | 300,000/- | 30 மில்லியன் |

பிரதம பொறியியலாளர் அலுவலகம் (வலயம் 2)
கட்டிடங்கள் திணைக்களம், கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம்
தொலைபேசி : 021 2222781 , தொலைநகல்: 021 2222781,
கைப்பேசி: (071 8561585 - பொறி. திருமதி வினோதினி), (071 8001407 - பொறி. கம்லத்)

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தப் பொதியின் பெயர் மற்றும் உள்ளடங்கும் பிரதேசம் | CIDA தரம் | கேள்விப் பிணை முறித் தொகை (ரூபா) | அதிகபட்ச ஒப்பந்தப் பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|---|
| 04-03-16—CT046/24 | பொதி Z2/01-யாழ்ப்பாண மாவட்டம் | C6 அல்லது C5 | 150,000/- | 15 மில்லியன் |
| 04-03-16—CT047/24 | பொதி Z2/02- கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்கள் | C6 அல்லது C5 | 150,000/- | 15 மில்லியன் |
| 04-03-16—CT048/24 | பொதி Z2/03-வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்கள் | C6 அல்லது C5 | 150,000/- | 15 மில்லியன் |

பிரதம பொறியியலாளர் அலுவலகம் (வலயம் 3)
கட்டிடங்கள் திணைக்களம், வில்கொட வீதி, குருநாகலை.
தொலைபேசி: 037 2222437, தொலைநகல்: 037 2222197,
கைப்பேசி: (071 4481316 - பொறி. W.P.S. பிரேமதிலக்க) (077 7854564 - பொறி. S.S. ரன்வத்த)

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தப் பொதியின் பெயர் மற்றும் உள்ளடங்கும் பிரதேசம் | CIDA தரம் | கேள்விப் பிணை முறித் தொகை (ரூபா) | அதிகபட்ச ஒப்பந்தப் பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|---|
| 04-03-15—CT043/24 | பொதி Z3/01- புத்தளம் மற்றும் குருநாகல் மாவட்டங்கள் | C5 அல்லது C4 | 300,000/- | 30 மில்லியன் |
| 04-03-15—CT044/24 | பொதி Z3/02- மாத்தளை மாவட்டம் | C6 அல்லது C5 | 150,000/- | 15 மில்லியன் |
| 04-03-15—CT045/24 | பொதி Z3/03- அனுராதபுரம் மாவட்டம் | C6 அல்லது C5 | 150,000/- | 15 மில்லியன் |

பிரதம பொறியியலாளர் அலுவலகம் (வலயம் 4)
கட்டிடங்கள் திணைக்களம், வலயம் 1, பனிச்சையடி, திராய்மடு, மட்டக்களப்பு.
தொலைபேசி: 065 2229808, தொலைநகல்: 065 2229807,
கைப்பேசி: (077 7498698 - திரு. இனோகா) (077 7593028 - பொறி. A.M. விக்கிரமசிங்க)

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தப் பொதியின் பெயர் மற்றும் உள்ளடங்கும் பிரதேசம் | CIDA தரம் | கேள்விப் பிணை முறித் தொகை (ரூபா) | அதிகபட்ச ஒப்பந்தப் பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|---|
| 04-03-13—CT035/24 | பொதி Z4/01- அம்பாறை மாவட்டம் | C6 அல்லது C5 | 200,000/- | 20 மில்லியன் |
| 04-03-13—CT036/24 | பொதி Z4/ 02- மட்டக்களப்பு மாவட்டம் | C6 அல்லது C5 | 200,000/- | 20 மில்லியன் |
| 04-03-13—CT037/24 | பொதி Z4/ 03- திருகோணமலை மாவட்டம் | C6 அல்லது C5 | 200,000/- | 20 மில்லியன் |
| 04-03-13—CT038/24 | பொதி Z4/ 04- பொலன்னறுவை மாவட்டம் | C6 அல்லது C5 | 200,000/- | 20 மில்லியன் |

பிரதம பொறியியலாளர் அலுவலகம் (வலயம் 5)
கட்டிடங்கள் திணைக்களம், கண்டி.
தொலைபேசி: 081 2236653, தொலைநகல்: 081 2234255,
கைப்பேசி: (077 3359951 - பொறி. (திருமதி) லக்சாந்தி) (077 7593028 - பொறி. A.M. விக்கிரமசிங்க)

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தப் பொதியின் பெயர் மற்றும் உள்ளடங்கும் பிரதேசம் | CIDA தரம் | கேள்விப் பிணை முறித் தொகை (ரூபா) | அதிகபட்ச ஒப்பந்தப் பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|---|
| 04-03-12—CT030/24 | பொதி Z5/01- கண்டி மாவட்டம் | C6 அல்லது C5 | 200,000/- | 20 மில்லியன் |
| 04-03-12—CT031/24 | பொதி Z5/02- நுவரெலியா மாவட்டம் | C6 அல்லது C5 | 200,000/- | 20 மில்லியன் |
| 04-03-12—CT032/24 | பொதி Z5/03- பதுளை மாவட்டம் | C6 அல்லது C5 | 200,000/- | 20 மில்லியன் |
| 04-03-12—CT033/24 | பொதி Z5/04- மொனராகலை மாவட்டம் | C6 அல்லது C5 | 200,000/- | 20 மில்லியன் |
| 04-03-12—CT034/24 | பொதி Z5/05- கேகாலை மாவட்டம் | C6 அல்லது C5 | 200,000/- | 20 மில்லியன் |

பிரதம பொறியியலாளர் அலுவலகம் (வலயம் 6)
கட்டிடங்கள் திணைக்களம், இல. 10, மேல் டிக்சன் வீதி, காலி.
தொலைபேசி: 091 2222583, தொலைநகல்: 091 2234838,
கைப்பேசி: (077 9636946 - பொறி. குணவர்தன) (077 7854564 - பொறி. S.S. ரன்வத்த)

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தப் பொதியின் பெயர் மற்றும் உள்ளடங்கும் பிரதேசம் | CIDA தரம் | கேள்விப் பிணை முறித் தொகை (ரூபா) | அதிகபட்ச ஒப்பந்தப் பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|---|
| 04-03-14—CT039/24 | பொதி Z6/01- காலி மாவட்டம் | C6 அல்லது C5 | 200,000/- | 20 மில்லியன் |
| 04-03-14—CT040/24 | பொதி Z6/02- மாத்தறை மாவட்டம் | C6 அல்லது C5 | 200,000/- | 20 மில்லியன் |
| 04-03-14—CT041/24 | பொதி Z6/03- ஹம்பாந்தோட்டை மாவட்டம் | C6 அல்லது C5 | 200,000/- | 20 மில்லியன் |
| 04-03-14—CT042/24 | பொதி Z6/04- இரத்தினபுரி மாவட்டம் | C6 அல்லது C5 | 200,000/- | 20 மில்லியன் |

1.2 ஒவ்வொரு பொதிக்குமான ஒப்பந்தக் காலம் 2025 மார்ச் 31ஆம் திகதியாகும்.

1.3 ஒரு பிரதம பொறியியலாளர் அலுவலகத்தின் எத்தனை பொதிகளுக்கும் கேள்விதாரர்கள் கேள்வி கோரலாம்.

1.4 ஒரு பிரதம பொறியியலாளர் அலுவலகத்தின் ஒரு பொதி மட்டுமே ஒரு கேள்விதாரருக்கு வழங்கப்படும்.

1.5 ஒரு பொதிக்கு ஒன்றுக்கு மேற்பட்ட தகைமை வாய்ந்த கேள்விதாரர் இருப்பின் தெரிவு செய்யும் முறைக்கு ஏதுவாக அவ்வாறான பொதிக்கு ஒன்றுக்கு மேற்பட்ட கேள்விதாரர்களை தெரிவு செய்ய திணைக்கள பெறுகைக் குழுவுக்கு உரிமை உண்டு.

2. தேசிய போட்டி முறையிலான கேள்வி மூலமாக கேள்விகள் நடத்தப்படும். இப்பெறுகையின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் 50 மில்லியன் ரூபாவிற்கு குறைவாக இருப்பதனால் 04/2016(iii)ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளதற்கமைய பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தரம் முன்னுரிமை என்பன பிரயோகிக்கப்படும்.

3. கேள்விகளை வழங்க தகைமை பெறுவதற்காக சித்திகரமான கேள்விதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெறாதவராக இருத்தலுடன் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) மேற்கூறிய அட்டவணையில் பந்தி 1.1இல் குறிப்பிடப்பட்ட தரங்களில் கேள்வி முடிவுறுத்தல் திகதி வரையில் செல்லுபடியாகும் வகையில் கட்டிட நிர்மாணத் துறையில் பதிவு செய்து கொண்டிருத்தல் வேண்டும். மேலும் குறித்த பதிவானது ஒப்பந்தம் வழங்கும் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.

4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை குறித்த பிரதம பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் மற்றும் இதே விலாசத்தில் எந்த வேலை நாளிலும் 09.00 மணித்தியாலம் முதல் 16.00 மணித்தியாலம் வரை கேள்வி ஆவணங்களைப் பரீட்சிக்கலாம்.

5. மீளளிக்கப்படாத கட்டணமாக எட்டாயிரம் (8000.00) ரூபாவை 2024-07-25ஆம் திகதி தொடக்கம் 2024-08-14ஆம் திகதி வரை 09.00 மணித்தியாலம் முதல் 15.00 மணித்தியாலம் வரை இயைபுடைய பிரதம பொறியியலாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பத்தை சமர்ப்பித்து ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியிலான முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

6. கேள்விகளை தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, கட்டிடத் திணைக்களம், 2ம் மாடி, செத்சிரிபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு 2024-08-15ஆம் திகதி 10.00 மணித்தியாலம் அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். சுயமாக வருகை தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் ஒப்பந்தக் கிளையில் கேள்விகள் மூடப்பட்டு உடன் திறக்கப்படும்.

7. கேள்விகள் பெற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அல்லது ஏதேனும் நீடிக்கப்பட்ட காலத்திலிருந்து 91 நாட்களுக்கு செல்லுபடியாகும்.

8. அனைத்து கேள்விகளும் ஒவ்வொரு பொதிக்குமான கேள்விப்பிணையுடன் கீழ்க்கண்டவாறு அனுப்பப்படல் வேண்டும்.
- கேள்வி ஆவணங்களில் 09ம் பிரிவில் குறிப்பிடப்பட்ட விதமாக
- கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில்
- மேற்கூறிய அட்டவணையில் பந்தி 1.1இல் குறிப்பிடப்பட்ட தொகை
- 2024 டிசம்பர் 11ஆம் திகதி வரை செல்லுபடியாகும் வகையில்
- கேள்வித் தரவின் 16.2ம் வாசகத்தில் குறித்துரைக்கப்பட்ட முகவரகம் ஒன்றினால் வழங்கப்பட்டிருத்தல்.

9. கேள்வி கோரல் முடிவடைவதற்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள நேரத்துக்குக் குறைந்த பட்சம் ஒரு மணித்தியாலத்துக்கு முன்னரே பாதுகாப்புச் சோதனைகளின் நிமித்தம் ''செத்சிரிபாய'' வளவுக்குள் வந்துவிடுமாறு கேள்விதாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**பொறி. (திருமதி) K.G.S. குமுதினி,**
**கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகம்,**
**கட்டிடத் திணைக்களம், 02ம் மாடி, ''செத்சிரிபாய'', பத்தரமுல்ல.**
**www.buildings.gov.lk**

---

## வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்

**411, ஈ.எச். குரே கட்டிடம், காலி வீதி, கொழும்பு 03.**
**தொ.: 0112371600 தொலைநகல்: 0112371671**
**இணையதளம்:** www.leco.lk **மின்னஞ்சல்:** general@leco.lk

LECO

## மின் கட்டணத் திருத்தம் – 2024 ஜூலை

2009ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டத்தின் 30(2)(C) பிரிவின் பிரகாரம் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் ஒப்புதலின் கீழ் 2024 ஜூலை 16ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் பின்வரும் திருத்தப்பட்ட கட்டணம் வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனத்தால் செயற்படுத்தப்படும்.

### மின்சார கட்டணம் திருத்தம் - 2024-07-16

| **நுகர்வோர் பிரிவு** | | | |
|---|---|---|---|
| **வீட்டு நுகர்வோர் பிரிவு** | | | |
| **தொகுதி** | | **அலகின் விலை (ரூபா/kWh)** | **மாதாந்த நிலையான கட்டணம் (ரூபா)** |
| **மாதாந்த நுகர்வு அலகு kWh 0-60க்கு இடையே** | | | |
| தொகுதி 1 | 0-30 | 8.00 | 100.00 |
| தொகுதி 2 | 31-60 | 9.00 | 250.00 |
| **மாதாந்த நுகர்வு அலகு kWh 60க்கு மேல்** | | | |
| தொகுதி 1 | 0.60 | 15.00 | |
| தொகுதி 2 | 61-90 | 18.00 | 400.00 |
| தொகுதி 3 | 91-120 | 30.00 | 1,000.00 |
| தொகுதி 4 | 121-180 | 42.00 | 1,500.00 |
| தொகுதி 5 | 180க்கு மேல் | 65.00 | 2,000.00 |
| **வீட்டுக்குரிய – தெரிவு செய்ய முடியுமான கால அடிப்படையிலான கட்டண அறவிடல் முறை** | | | |
| பகல் நேரம் | (0530 மணித்தியாலம் தொடக்கம் 1830 மணித்தியாலம் வரை) | 56.00 | 2,000.00 |
| உச்ச நேரம் | (1830 மணித்தியாலம் தொடக்கம் 2230 மணித்தியாலம் வரை) | 72.00 | |
| உச்சமற்ற நேரம் | (2230 மணித்தியாலம் தொடக்கம் 0530 மணித்தியாலம் வரை) | 24.00 | |
| **சமய மற்றும் தொண்டு நிறுவனங்கள்** | | | |
| தொகுதி 1 | 0-30 | 6.00 | 100.00 |
| தொகுதி 2 | 31-90 | 6.00 | 250.00 |
| தொகுதி 3 | 91-120 | 10.00 | 300.00 |
| தொகுதி 4 | 121-180 | 20.00 | 1,200.00 |
| தொகுதி 5 | 180க்கு மேல் | 30.00 | 1,600.00 |
| **மற்ற நுகர்வு அறவிடல் வகைகள்** | | | |
| **ஒப்பந்தக் கேள்வி 42 kWh இற்கு குறைவு அல்லது சமமான மின்னழுத்த வோல்ட் 400/230 ஆகிய வழங்கல்** | | | |
| **தொழில்துறை/ ஹோட்டல் (பயன்படுத்தப்படும் அலகு அடிப்படையில் கட்டணம்)** | | **அலகின் விலை (ரூபா/kWh)** | **மாதாந்த நிலையான கட்டணம் (ரூபா)** |
| தொழில்துறை/ ஹோட்டல் (1-1/H-1) | ≤ 300 | 10.00 | 300.00 |
| தொழில்துறை/ ஹோட்டல் (1-2/H-2) | > 300 | 16.00 | 1,000.00 |
| **பொதுப் பணி கட்டணம்/ அரச கட்டணம் 1 (பயன்படுத்தப்படும் அலகு அடிப்படையிலான கட்டணம்)** | | **அலகின் விலை (ரூபா/kWh)** | **மாதாந்த நிலையான கட்டணம் (ரூபா)** |
| பொதுப் பணி கட்டணம்/ அரச கட்டணம் (GP1-1/GV 1-1) | ≤ 180 | 26.40 | 600.00 |
| பொதுப் பணி கட்டணம்/ அரச கட்டணம் (GP1-1/GV 1-2) | > 180 | 34.40 | 1,500.00 |

**கட்டணம் அறவிடல் 2: ஒப்பந்தக் கேள்வி 42 kWh இற்கு மேல், மின்னழுத்த வோல்ட் 400/230 ஆகிய வழங்கல்**

| **தொழில்துறை (1-2) / ஹோட்டல் (H-2)** | | **அலகின் விலை (ரூபா/kWh)** | **மாதாந்த நிலையான கட்டணம் (ரூபா)** | **உச்ச கேள்வி கட்டணம் (ரூபா/kWh)** |
|---|---|---|---|---|
| பகல் நேரம் | (0530 மணித்தியாலம் தொடக்கம் 1830 மணித்தியாலம் வரை) | 20.50 | 5,000.00 | 1,500.00 |
| உச்ச நேரம் | (1830 மணித்தியாலம் தொடக்கம் 2230 மணித்தியாலம் வரை) | 30.50 | | |
| உச்சமற்ற நேரம் | (2230 மணித்தியாலம் தொடக்கம் 0530 மணித்தியாலம் வரை) | 18.00 | | |
| **பொதுப் பணி (G.P -2)/ அரச கட்டணம் (GV -2)** | | **அலகின் விலை (ரூபா/kWh)** | **மாதாந்த நிலையான கட்டணம் (ரூபா)** | **உச்ச கேள்வி கட்டணம் (ரூபா/kWh)** |
| பகல் நேரம் | (0530 மணித்தியாலம் தொடக்கம் 1830 மணித்தியாலம் வரை) | 38.25 | 5,000.00 | 1,500.00 |
| உச்ச நேரம் | (1830 மணித்தியாலம் தொடக்கம் 2230 மணித்தியாலம் வரை) | 46.75 | | |
| உச்சமற்ற நேரம் | (2230 மணித்தியாலம் தொடக்கம் 0530 மணித்தியாலம் வரை) | 31.45 | | |

**கட்டணம் அறவிடல் 3: மின்னழுத்தம் கி. வோல்ட் 11க்கு மேற்பட்ட அல்லது சமமான வழங்கல்**

| **தொழில்துறை (1-3) / ஹோட்டல் (H-3)** | | **அலகின் விலை (ரூபா/ kWh)** | **மாதாந்த நிலையான கட்டணம் (ரூபா)** | **உச்ச கேள்வி கட்டணம் (ரூபா/kWh)** |
|---|---|---|---|---|
| பகல் நேரம் | (0530 மணித்தியாலம் தொடக்கம் 1830 மணித்தியாலம் வரை) | 19.50 | 5,000.00 | 1,400.00 |
| உச்ச நேரம் | (1830 மணித்தியாலம் தொடக்கம் 2230 மணித்தியாலம் வரை) | 29.50 | | |
| உச்சமற்ற நேரம் | (2230 மணித்தியாலம் தொடக்கம் 0530 மணித்தியாலம் வரை) | 17.00 | | |
| **பொதுப் பணி (G.P -3)/ அரச கட்டணம் (GV - 3)** | | **அலகின் விலை (ரூபா/kWh)** | **மாதாந்த நிலையான கட்டணம் (ரூபா)** | **உச்ச கேள்வி கட்டணம் (ரூபா/kWh)** |
| பகல் நேரம் | (0530 மணித்தியாலம் தொடக்கம் 1830 மணித்தியாலம் வரை) | 37.40 | 5,000.00 | 1,400.00 |
| உச்ச நேரம் | (1830 மணித்தியாலம் தொடக்கம் 2230 மணித்தியாலம் வரை) | 45.90 | | |
| உச்சமற்ற நேரம் | (2230 மணித்தியாலம் தொடக்கம் 0530 மணித்தியாலம் வரை) | 30.60 | | |
| வீதி விளக்கு (ரூபா/kWh) | 45.00 | | | |

**தெரிவு செய்ய முடியுமான கால அடிப்படையிலான கட்டண அறவிடல் முறை (கமத்தொழில்)**

| | | | |
|---|---|---|---|
| பகல் நேரம் | (0530 மணி தொடக்கம் 1830 மணி வரை) | 18.00 | 1,000.00 |
| உச்ச நேரம் | (1830 மணி தொடக்கம் 2230 மணி வரை) | 35.00 | |
| உச்சமற்ற நேரம் | (2230 மணி தொடக்கம் 0530 மணி வரை) | 8.00 | |

**மின்னேற்றல் நிலையங்களின் மின் மோட்டார் வாகன மின்னேற்றல்**

| | | **நேரோட்ட விரைவு மின்னேற்றல் சேவை (ரூபா/ kWh)** | **இரண்டாம் நிலை ஆடல் மின்னோட்ட மின்னேற்றம் (ரூபா/kWh)** |
|---|---|---|---|
| பகல் நேரம் | (0530 மணி தொடக்கம் 1830 மணி வரை) | 87.00 | 70.00 |
| உச்ச நேரம் | (1830 மணி தொடக்கம் 2230 மணி வரை) | 111.00 | 90.00 |
| உச்சமற்ற நேரம் | (2230 மணி தொடக்கம் 0530 மணி வரை) | 53.00 | 40.00 |

**தெரிவு செய்ய முடியுமான கால அடிப்படையிலான முன்செலுத்தும் கட்டண அறவிடல் முறை - சில்லறை பாவனையாளர்களுக்கு**

| | | **அலகின் விலை (ரூபா/kWh)** |
|---|---|---|
| **வீட்டுக்குரியது** | | |
| தொகுதி 1 | 0-90 | 18.00 |
| தொகுதி 2 | 90 இற்கு மேல் | 68.00 |
| **வணக்கஸ்தலம்** | | |
| தொகுதி 1 | 0-90 | 11.00 |
| தொகுதி 2 | 90 இற்கு மேல் | 30.00 |
| **பொது வேலை (GP-1)** | | 37.00 |
| **கைத்தொழில் (I-I)** | | 17.00 |
| **ஹோட்டல் (H-1)** | | 17.00 |

**பொது முகாமையாளர்**
**இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்**

**2024 ஜூலை 16ஆம் திகதி**

# அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை வெற்றி



**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியில் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது.

16 அணிகள் பங்கேற்ற இந்தத் தொடர் கடந்த செவ்வாய்க்கிழமை (23) அக்கரைப்பற்று பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதன் இறுதிப் போட்டியில் அக்கரைப்பற்று வீதி அபிவிருத்தி அதிகார சபை அணியை எதிர்கொண்ட ஆதார வைத்தியசாலை அணி 43 ஓட்டங்களால் இலகு வெற்றியீட்டியது.

தொடர் நாயகனாக வீதி அபிவிருத்தி அதிகார சபை அணியின் எம். சபீக் தெரிவானார்.

# காயத்திற்கு உள்ளான துஷாரவுக்கு பதில் இலங்கை அணியில் டில்ஷான்

இந்தியாவுக்கு எதிரான டி20 தொடரில் இருந்து துஷ்மந்த சமீரவுக்கு அடுத்து மற்றொரு வேகப்பந்து வீச்சாளரான நுவன் துஷாரவும் காயம் காரணமாக வெளியேறியுள்ளார்.

பல்லேகலவில் நேற்று முன்தினம் (23) நடைபெற்ற களத்தடுப்பு பயிற்சியின்போது துஷாரவில் விரலில் காயம் ஏற்பட்டுள்ளது. இதனை அடுத்து அவர் 16 பேர் கொண்ட இலங்கை குழாத்தில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். முன்னதாக சமீர சுகவீனம் காரணமாக விலகிய நிலையில் துஷாரவும் நீக்கப்பட்டிருப்பது அணிக்கு பெரும் பின்னடைவாக உள்ளது. மூச்சுக்குழாய் அழற்சி மற்றும் சுவாச தொற்று காரணமாகவே சமீர இந்தியாவுக்கு எதிரான டி20 மற்றும் ஒருநாள் தொடர்களில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். அவருக்கு பதில் வலது கை வேகப்பந்து வீச்சாளர் அசித்த பெர்னாண்டோ அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.





இந்நிலையில் நுவன் துஷார காயமடைந்திருப்பதை அணியின் மருத்துவக் குழு உறுதி செய்திருப்பதோடு அவரது இடது கட்டைவிரல் முறிவு ஏற்பட்டுள்ளது. அவருக்கு பதில் இடது கை வேகப்பந்து வீச்சாளர் டில்ஷான் மதுஷங்க அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இலங்கை மற்றும் இந்திய அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டி20 தொடரின் முதல் போட்டி நாளை (27) பல்லேகலவில் நடைபெறவுள்ளது.

## மகளிர் ஆசிய கிண்ணம்:

# இலங்கை மோதும் அரையிறுதி இன்று



மகளிர் ஆசிய கிண்ண டி20 அரையிறுதிப் போட்டிகளில் இன்று இலங்கை அணி பாகிஸ்தான் அணியையும், இந்திய அணி பங்களாதேஷ் அணியையும் எதிர்கொள்ளவுள்ளது.

தம்புள்ளையில் நேற்று முன்தினம் நடந்த தாய்லாந்துக்கு எதிரான கடைசி குழு நிலைப் போட்டியிலும் இலங்கை மகளிர் அணி 10 விக்கெட்டுகளால் இலகு வெற்றியீட்டியே அரையிறுதிக்கு முன்னேறியது.

இதன்போது இலங்கை மகளிர் அணி பி குழுவில் ஆடிய மூன்று போட்டிகளிலும் வெற்றியீட்டி அந்தக் குழுவில் முதலிடத்தைப் பெற்றது. ஏ குழுவில் பலம்மிக்க இந்திய அணி தனது மூன்று போட்டிகளிலும் வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கது.

இதன்படி இன்று பிற்பகல் 2 மணிக்கு தம்புள்ளையில் நடைபெறும் முதல் அரையிறுதிப் போட்டியில் இந்தியா மற்றும் பங்களாதேஷ் அணிகள் பலப்பரீட்சை நடத்தும். இதே மைதானத்தில் இரவு 7 மணிக்கு நடைபெறும் அரையிறுதியிலேயே சமரி அத்தபத்து தலைமையிலான இலங்கை அணி பாகிஸ்தான் அணியை எதிர்கொள்ளவுள்ளது.

தொடரின் இறுதிப் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தம்புள்ளையில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாரிஸ் ஒலிம்பிக் இன்று ஆரம்பம்




பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் 33 ஆவது ஒலிம்பிக் போட்டி சீன் நதியில் இடம்பெறும் ஆரம்ப நிகழ்வுடன் இன்று கோலாகலமாக ஆரம்பிக்கவுள்ளது.

329 பதக்கங்களுக்காக 32 போட்டி நிகழ்ச்சிகளில் 206 நாடுகளைச் சேர்ந்த 10,714 வீர, வீராங்கனைகள் இம்முறை போட்டியில் பங்கேற்கின்றனர். கோடைகால ஒலிம்பிக் வரலாற்றில் முதல் முறையாக அரங்கிற்கு வெளியில் இன்று ஆரம்ப வைபவம் இடம்பெறவுள்ளது.

3.7 மைல் நீண்ட சீன் நதியில் போட்டியில் பங்கேற்கும் வீர, வீராங்கனைகள் சுமார் 100 படகுகளில் அணிவகுத்துச் செல்லும் வகையில் ஆரம்ப நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனையொட்டி பாரிஸ் நகரின் பல பகுதிகளும் மூடப்பட்டு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எனினும் ஒலிம்பிக் போட்டியின் கால்பந்து, ரக்பி உட்பட பல போட்டிகளின் ஆரம்ப சுற்று போட்டிகள் கடந்த புதன்கிழமையே (24) ஆரம்பமானது. ஒலிம்பிக்கின் முக்கிய போட்டிகளான தடகளப் போட்டிகள் எதிர்வரும் ஓகஸ்ட் 1 ஆம் திகதி தொடக்கம் 11 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. அன்றைய தினத்துடனேயே ஒலிம்பிக் போட்டி நிறைவடையவுள்ளது.

இம்முறை ஒலிம்பிக்கில் அமெரிக்கா அதிகபட்சமான 592 வீர, வீராங்கனைகளை அனுப்பும் அதேநேரம் உக்ரைன் போரை ஒட்டி ரஷ்யா மற்றும் பெலாரஸுக்கு ஒலிம்பிக்கில் தடை விதிக்கப்பட்ட நிலையில் அந்த நாட்டின் போட்டியாளர்கள் தனிப்பட்ட நடுநிலை விளையாட்டு வீரர்களாகவே பங்கேற்கின்றனர்.

இம்முறை ஒலிம்பிக்கில் இலங்கை சார்பில் 6 வீர, வீராங்கனைகள் பங்கேற்கின்றனர். இதில் ஆடவர் ஒற்றையர் பிரிவு பூப்பந்துப் போட்டியில் விரேன் நெத்தசிங்கவும், நீச்சல் போட்டிகளில் கைல் அபேசிங்க மற்றும் கங்கா செனவிரத்னவும் கலந்துகொள்கின்றனர்.

தடகளப் போட்டிகளில் இலங்கையைச் சேர்ந்த மூவர் பங்கேற்கின்றனர். அவர்கள் ஆண்களுக்கான 400 மீ. ஓட்டப்போட்டியில் அருண தர்ஷன, பெண்களுக்கான 800 மீ. ஓட்டப்போட்டியில் தருஷி கருணாரத்ன மற்றும் பெண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் டில்ஹாரி லேகம்கே ஆகியோராவர்.

இலங்கையின் முதல் போட்டி நிகழ்ச்சி நாளை (27) நடைபெறவுள்ளது. அன்றைய தினம் பி.ப. 2.30 இற்கு பூப்பந்து போட்டியில் விரேன் நெத்தசிங்க பங்கேற்கிறார்.

# இரு கப்பல்கள் மூழ்கி 10 பேரை காணவில்லை



கேமி சூறாவளி தாக்கியுள்ள தாய்வான் மற்றும் பிலிப்பைன்ஸில் இரு கப்பல்கள் மூழ்கி பத்துப் பேர் காணாமல்போயுள்ளனர்.

தாய்வானின் தெற்கு கடலில், 9 பேர் கொண்ட குழுவினருடன் மூழ்கிய சரக்கு கப்பலை மீட்பு படை அதிகாரிகள் தேடி வருகின்றனர். கேமி சூறாவளி தாய்வானை தாக்கியபோது, இந்த சரக்கு கப்பல் தெற்கு துறைமுக நகரமான காவ்ஷியுங்கில் இருந்துள்ளது.

இந்த சூறாவளியால் பிலிப்பைன்ஸில் கடும் மழை பெய்து வருகிறது. இங்கு 1.5 மில்லியன் லீற்றர் எரிபொருளைக் கொண்டு சென்ற ஒரு கப்பல் கவிழ்ந்தது.

பிலிப்பைன்ஸ் கொடியுடன் கூடிய 'எம்டி டெர்ரா நோவா' என்ற இந்த கப்பலிலிருந்து 16 பணியாளர்கள் மீட்கப்பட்டுள்ளனர், மேலும் ஒருவரை காணவில்லை என போக்குவரத்து செயலாளர் ஜெய்ம் பாவுடிஸ்டா தெரிவித்தார்.

புதன் கிழமை தாய்வானின் கிழக்குக் கடற்கரையில் கேமி சூறாவளி கரையைக் கடந்தது. இதில் மூன்று பேர் பலியாகினர் மற்றும் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

தாய்வானைத் தாக்கும் முன், கேமி பிலிப்பைன்ஸில் மழை பொழிவை அதிகப்படுத்தியது. கடும் மழை காரணமாக அங்கு எட்டு பேர் உயிரிழந்தனர்.

தங்களது கடற்பகுதியில் மூழ்கிய சரக்குக் கப்பலில் மியான்மார் நாட்டைச் சேர்ந்த 9 பேர் இருந்ததாக தாய்வானின் கடலோர காவல்படை கூறியுள்ளது.

அத்துடன் இந்த சூறாவளியில் மேலும் 3 வெளிநாட்டு கப்பல்கள் அடித்து செல்லப்பட்டதாகவும், ஆனால் அவை பாதுகாப்பாக இருப்பதாகவும் கடலோர காவல்படை தெரிவித்துள்ளது.

பிலிப்பைன்ஸில், மணிலா விரிகுடாவில் கவிழ்ந்த எண்ணெய் கப்பல், மத்திய நகரமான இலோய்லோவை நோக்கிச் சென்றது எனவும், இது பல கிலோமீற்றர் நீளத்திற்கு எண்ணெய் கசிவை ஏற்படுத்தியதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## சர்வதேச செய்திகள்

# காசாவில் உக்கிர தாக்குதலுக்கு மத்தியில் நெதன்யாகு போரை நியாயப்படுத்திப் பேச்சு

## அமெரிக்காவில் ஆர்ப்பாட்டம்; ஹமாஸ் சாடல்

காசாவில் இஸ்ரேல் உக்கிர தாக்குதல்களை தொடரும் நிலையில், அமெரிக்க பாராளுமன்றத்தில் போரை நியாயப்படுத்திப் பேசிய இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கடும் எதிர்ப்புகளை சந்தித்ததோடு நெதன்குவின் உரை 'பொய்கள் நிறைந்தது' என்று ஹமாஸ் அமைப்பு சாடியுள்ளது.

அமெரிக்கப் பாராளுமன்றத்தின் கூட்டு அமர்வில் நேற்று முன்தினம் உரையாற்றிய நெதன்யாகு, 'எமது எதிரி உங்களின் எதிரியாகும்' என்று அமெரிக்காவிடம் குறிப்பிட்டது.

'நாம் ஈரானுடன் போரிடும்போது அது அமெரிக்காவின் மிகத் தீவிரமான மற்றும் கொலைகார எதிரியுடனான போராக இருக்கும். எங்களின் போர் உங்களின் போர் என்பதோடு எமது வெற்றி உங்களின் வெற்றியாகும்' என்று குறிப்பிட்டார்.

எனினும் நெதன்யாகுவின் உரையை பாராளுமன்றத்தில் ஜனநாயகக் கட்சியின் கணிசமான உறுப்பினர்கள் புறக்கணித்திருந்ததோடு பாராளுமன்றத்திற்கு வெளியிலும் அவருக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் ஆயிரக்கணக்கானோர் கூடி இருந்தனர்.

இதில் 50க்கும் மேற்பட்ட முன்னணி ஜனநாயகக் கட்சியினர் மற்றும் சுயாதீனமாக செயற்படுபவரான பெர்னி சாண்டர்ஸ் நெதன்யாகுவின் உரையை புறக்கணித்தனர். துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் நீண்ட திட்டமிடப்பட்ட பயணத்தின் காரணமாக இந்த நிகழ்வில் பங்கேற்கவில்லை.

குறிப்பாக அமெரிக்கப் பிரதிநிதிகள் சபை உறுப்பினர் ரஷிதா தலாய்ப், ஒரு பக்கம் 'போர் குற்றவாளி' என்றும் மறுப்பக்கம் 'இனப்படுகொலை குற்றவாளி' என்றும் எழுதப்பட்ட பதாகையை சுமந்திருந்ததோடு பாராளுமன்றத்திற்கு வெளியில், ஆர்ப்பாட்டக்காரர்கள் அமெரிக்கக் கொடியையும் நெதன்யாகுவின் உருவ பொம்மையையும் எரித்து தங்கள் சீற்றத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

நெதன்யாகுவின் உரைக்கு இடையூறு செய்ய முயன்ற ஐவரை கப்பிடோல் கட்டடத்திற்குள் இருந்து கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஒரு மணி நேரத்திற்கு மேல் உரையாற்றிய நெதன்யாகு, இஸ்ரேல் மீதான விமர்சனத்தை திசை திரும்பும் வகையில் காசா போர் தமது நாட்டின் இருப்புக்கான போராட்டம் என்று குறிப்பிட்டதோடு அமெரிக்க இராணுவ உதவிகளுக்கும் நன்றி கூறினார்.



காசாவில் நிலவும் மனிதாபிமான நெருக்கடி குறித்துப் பேசாத நெதன்யாகு, அங்குள்ள ஒவ்வொருவருக்கும் 3000 கலோரிகளை வழங்கப் போதுமான உணவு உதவிகளை விநியோகிப்பதாகவும் குறிப்பிட்டார். குடிமக்களுக்கு உணவு கிடைக்காவிட்டால், அதனை ஹமாஸ் திருடுவதே காரணம் என்றார்.

எனினும் நெதன்யாகுவின் உரை பொய்கள் நிறைந்தது என்று ஹமாஸ் குறிப்பிட்டுள்ளது. 'நெதன்யாகுவின் பேச்சு பொய்கள் நிறைந்தது, காசா மக்களுக்கு எதிராக அவரது இராணுவம் செய்யும் இனப்படுகொலைப் போரின் குற்றங்களை மறைப்பதிலும் எதிர்ப்புக்கு முன் முகம்கொடுக்கும் தோல்விகளை மறைப்பதிலும் தோல்வி கண்டுள்ளது' என்று ஹமாஸ் மூத்த அதிகாரி சமி அபூ சூஹ்ரி தெரிவித்துள்ளார்.

நெதன்யாகுவின் உரை மன அழுத்தத்தையே தருவதாக காசாவில் இடம்பெயர்ந்த பலஸ்தீனர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். 'இது மன அழுத்தத்தையே தருகிறது, அவர் அந்த உரை முழுவதும் ஒரு முறை கூட போர் நிறுத்தம் பற்றி பேசவில்லை' என்று தற்போது மத்திய காசாவில் அடைக்கலம் பெற்றிருக்கும் காசா நகர குடியிருப்பாளரான டமர் அல் புரை ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு குறிப்பிட்டுள்ளார்.

### 5 இஸ்ரேலிய சடலங்கள் மீட்பு

இதேவேளை காசாவில் 293 ஆவது நாளாக நேற்றைய தினத்திலும் இஸ்ரேலின் தாக்குதல்களில் பலர் கொல்லப்பட்டனர். காசா நகரின் வடக்கில் உள்ள ஷெய்க் ரத்வான் பகுதியில் இடம்பெற்ற இஸ்ரேலின் குண்டுவீச்சுகளில் சிறுவர் மற்றும் பெண்கள் உட்பட நால்வர் கொல்லப்பட்டதோடு மேலும் பலர் காயமடைந்ததாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா தெரிவித்தது.

காசா நகரில் அல் செட்டி அகதி முகாமில் உள்ள அபூ ஜியாப் குடும்பத்திற்குச் சொந்தமான அடுக்கு மாடிக் குடியிருப்பு மீது நடத்தப்பட்ட தாக்குதலில் பலரும் காயமடைந்துள்ளனர். மத்திய காசாவில் உள்ள அல் புரைஜ் அகதி முகாமில் அபூ கார்கு வாட்டுக்கு சொந்தமான வீடு ஒன்றின் மீது இடம்பெற்ற தாக்குதலில் பெரும்பாலும் சிறுவர்கள் உட்பட ஏழு பேர் காயமடைந்துள்ளனர். தெற்கு காசாவின் அல் செய்தூன் பகுதியில் இஸ்ரேலிய டாங்கிகள் குடியிருப்பாளர்கள் மீது இயந்திர துப்பாக்கிகளால் சூடு நடத்தி இருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தெற்கு காசாவின் கான் யூனிஸ் நகரில் இஸ்ரேலின் புதிய படை நடவடிக்கை தொடர்ந்து இடம்பெற்று வரும் நிலையில் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் அங்கு குறைந்தது 129 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டிருப்பதோடு 150,000 பேர் வரை வெளியேற்றப்பட்டுள்ளனர். கான் யூனிஸின் சலாஹ் அல் தீன் வீதியில் இஸ்ரேலியப் படையினர் நகரும் அனைத்தையும் இலக்கு வைத்து வருவதாக குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

காசாவில் கடந்த ஒன்பது மாதங்களுக்கு மேலாக நீடிக்கும் இஸ்ரேலின் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 39,000ஐ தாண்டியுள்ளது.

இதேவேளை கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது நடத்தப்பட்ட பலஸ்தீன போராளிகளின் தாக்குதலின்போது கொல்லப்பட்டு காசாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஐந்து இஸ்ரேலியர்களின் சடலங்களை மீட்டதாக இஸ்ரேல் இராணுவம் நேற்றுக் கூறியது.

கான் யூனிஸ் நகரில் இந்த உடல்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த இடத்தை அடைந்த இஸ்ரேலிய துருப்புகள் அவைகளை மீட்டு வந்ததாக இராணுவத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காசாவில் போர் வெடிப்பதற்குக் காரணமான ஒக்டோபர் 7 தாக்குதலின்போது 1,197 பேர் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் குறிப்பிடுகிறது. இதன்போது 251 பேர் பணயக்கைதிகளாக பிடிக்கப்பட்ட நிலையில் தொடர்ந்து 111 பேர் பலஸ்தீன போராளிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 39 பேர் உயிரிழந்திருப்பதாக நம்பப்படுகிறது.

பணயக்கைதிகளை மீட்பதற்கான போர் நிறுத்த உடன்படிக்கை ஒன்றை செய்துகொள்ள இஸ்ரேல் அரசுக்கு பணயக்கைதிகள் மற்றும் காணாமல் போனோரது குடும்பங்களின் அமைதிக்கு அழுத்தம் கொடுத்து வருகிறது.

எனினும் எகிப்து மற்றும் கட்டாரின் மத்தியஸ்தத்தில் இடம்பெறும் போர் நிறுத்தப் பேச்சுவார்த்தை முன்னேற்றம் இன்றி ஸ்தம்பித்து காணப்படுகிறது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜூலை மாதம் 26ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.